உ

கவிகளின் காட்சி.

★

கவிராஜ பண்டிதர்
ஜெகவீரபாண்டியனார்.



கவிராஜ பண்டிதர்: ஜெகவீரபாண்டியனர்

55-3

உ

கவிகளின் காட்சி.

925

இறையனார்

கவிராஜ பண்டிதர்
ஜெகவீரபாண்டியனார்
எழுதியது.

மதுரை
சி. வி. என். பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது.
1957.

All Rights Reserved.

1957 — 2.80

பொருள் அடக்கம்.

55-3

உ

முகவுரை.

உலக உயிர்களுள் மனித இனம் உயர்ந்துள்ளது. அவ்வுயர்வு அறிவால் அமைந்தது; அந்த அறிவு மொழியால் ஒளி மிகுந்தது. மொழி வழியே வாழ்வு நடந்து வருகின்றது. மாந்தர் பேசி வருகிற மொழிகள் பல; தேசங்கள் தோறும் இனங்கள் தோறும் அவை வேறுபட்டு விரிந்துள்ளன.

உலகில் வழங்கிவரும் மொழிகளுள் தமிழ் மிகவும் பழமையானது; எண்ணுயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருந்திய பண்போடு சிறந்து வந்துள்ளது. உயர்ந்த இலக்கியங்களும் தெளிந்த இலக்கணங்களும் இதில் நிறைந்திருக்கின்றன. பாண்டிய மன்னர் நீண்ட காலமாக இம்மொழியை ஆர்வத்தோடு நன்கு பேணி வந்துள்ளனர். தம் தாய்மொழியை இந்த வேந்தர் போற்றி வந்துள்ளதுபோல் வேறு எந்த அரசரும் எந்த நாட்டிலும் எந்த மொழியையும் பேணவில்லை: மன்னர் முன்னம் அன்னவாறு ஆதரித்து வந்த மொழியை இன்னநாளில் இந்த நாட்டு மக்கள் இழந்திருப்பது போல் வேறு எந்த நாடும் தன் சொந்த மொழியை இழந்து இழியவில்லை. செழியர் சீர்மையா வளர்த்து வந்துள்ள சீர்மை சிந்தையை உருக்கி வருகிறது. பல இடங்களிலும் பரந்து பிரிந்திருந்த புலவர்கள் எல்லாரையும் ஒருங்கே தொகுத்துத் தம் பார்வையில் வைத்து ஆதரித்து மொழியை அவர் விழுமிய நிலையில் வளர்த்து மேன்மை புரிந்துள்ளனர்.

சங்க காலத்தில் இருந்த அந்தப் புலவர்களுடைய வரலாறுகளை எல்லாம் முறையே எழுத வேண்டும் என்று

இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் புலவர் உலகம் என்னும் பேரால் ஒரு நூலைத் தொடங்கினேன். முதலில் கவிச் சக்கரவர்த்தி ஆகிய கம்பரைக் கருதும்படி நேர்ந்தது. கம்பன் கலை நிலை என்னும் தலைப்பில் இராமாயணத்தின் பாத்திரங்களை ஆராய்ந்து மாதந்தோறும் வெளியிட்டு வருகிறேன்: அந்நூல் ஆறாயிரம் பக்கங்களுக்கு மேல் விரிந்துள்ளது; பதினாறு தொகுதிகளில் முறையே நிறைவுறுகின்றது.

முதலில் குறித்தபடி புலவர்களுடைய வரலாறுகளில் சிலவேனும் காண வேண்டும் என்று வேணவாவோடு அறிஞர் பலர் பலமுறையும் வேண்டி வருதலால் மூன்று சங்கங்களிலும் இருந்த ஆன்ற புலவர்களுடைய சரிதங்களை எழுத நேர்ந்துள்ளேன். சிறந்த கவிஞர்களின் ஓவியங்களை வரைந்து காட்டி வருதலால் இந்நூல் கவிகளின் காட்சி என வந்தது. பெயரின் இயல்பால் நூலின் நிலையைத் தெரியலாம்.

இறையனார்	நப்பூதனார்
முருகவேள்	பொன்முடியார்
அகத்திய முனிவர்	ஓதலாந்தையார்
தொல்காப்பியர்	பூங்குன்றனார்
நக்கீரர்	மாங்குடிமருதனார்
திருவள்ளுவர்	மதுரைக் குமரனார்
அறிவுடைநம்பி	மாமூலனார்
இளம்பெருவழுதி	ஆவூர்மூலங்கிழார்
ஓரம் போகியார்	கோவூர்கிழார்
அம்மூவனார்	பிசிராந்தையார்
ஔவையார்	உருத்திரங்கண்ணனார்
கீரந்தையார்	கபிலர்

பரணர்	மோசியார்
கல்லாடர்	அரிசில்கிழார்
நத்தத்தனார்	தாமக்கண்ணியார்
காரிகிழார்	நாகனார்
காக்கைபாடினியார்	திருத்தக்க தேவர்
கௌசிகனார்	கொங்குவேளிர்
குடபுலவியனார்	சாத்தனார்
உலோச்சனார்	இளங்கோவடிகள்

முதலிய பழம்பெரும் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் கவித்திறங்களும் உவமை நயங்களும் உள்ளுறை வளங்களும் உணர்வின் சுவைகளும் திருவருள் கூட்டிய அளவு வெளியே தெளிவாய் வர வழி வாய்ந்துள்ளன.

நம் நாட்டில் தோன்றியுள்ள மேதைகளுடைய மேதா விலாசங்களையும் மேன்மைகளையும் பான்மைகளையும் உரிமையோடு கருதி ஒழுகிவரின் உயர் நலங்கள் பெருகி வரும்.

திருவள்ளுவர் நிலையம்
மதுரை.
(3—5—57)

இங்ஙனம்
செகவீரபாண்டியன.

நூல்.

அந்தமில் இன்பமாய் அகிலம் எங்கணும்
சந்ததம் உள்ளவன் சங்கம் சார்ந்ததில்
செந்தமிழ்க் கவிஞனைச் சிறந்து செய்ததை
இந்தநூல் இனமுடன் இயம்பி யுள்ளது.

துதி.

உலகமெலாம் இன்பமுற ஒளிபரப்பி
எழுகின்ற உரவோன் என்ன
இலகுபல உணர்வொளிகள் எவ்வழியும்
செவ்வையா இனிது நீட்டிப்
பலவகையில் உயிர்க்கிதமே பரிந்துபுரிந்
தருளியுள பயனார் சங்கப்
புலவர்சிகா மணிகளுயர் பொன்னடிகள்
எந்நாளும் போற்றி வாழ்வாம்.

கவிகளின் காட்சி.

முதல் அதிகாரம்.

தாய் மொழி.

உலகம் தெரிகிறது; உயிரினங்கள் தெரிகின்றன; ஓரளவு தெரிந்தாலும் யாவும் அளவிடலரிய நிலையில் நீண்டு பரந்து யாண்டும் நெடிது விரிந்துள்ளன. சீவகோடிகளுள் மனித இனம் அறிவு மிக உடையது; எதையும் கருதியுணர வுரியது; உணர்ந்ததைத் துணிந்து செய்ய வல்லது. தன் கண் கண்ட மண் கண்டம் முழுவதும் பரவி உறவுரிமையோடு கூட்டம் கூட்டமாய்க் குழுமி வாழ்கின்றது. கடல்களையும் மலைகளையும் கடந்து எங்கும் அடல் மிகுந்து சென்று எவ் வழியும் செவ்வையாய் வாழ மனித மரபு தெரிந்து கொண்டது போல் வேறு எந்த மரபும் தெரிந்து கொள்ள வில்லை.

பேசத் தெரிந்தது.

உறவாய்க் கூடி வாழும் இயல்பினை யுடையது ஆதலால் தன் உள்ளம் கருதியதை அயலே சொல்ல நேர்ந்தது. அவ் வாறு சொல்லத் தொடங்கிய போதுதான் மனிதன் மெல்ல உயர நேர்ந்தான். பேச்சு வழியே பெருமைகள் வந்தன.

ஆதியில் மனிதன் பேசவில்லை; தான் விரும்பியதைக் கைச் சாடைகளாலேயே காட்டி வந்தான்; இந்த அடை

யாளக் காட்சிகள் நெடுங்காலமா யாண்டும் நீண்டு வந்தன. ஆயிரக் கணக்கான வருடங்கள் இதில் கழிந்து போயுள்ளன பின்பு ஒலிகளால் உணர்த்தும் நிலையை ஓர்ந்தான். வெறும் ஒலிகளை வாயால் வழங்கி வந்தான். கைச்சாடை, கண் பார்வை, தலை அசைப்பு, வாய் ஒலி முதலிய இந்த வகைகளால் மனிதன் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து வந்துள்ளான் வாழ்வின் வரவுகள் விசித்திரங்கள் உடையன.

அன்று அவ்வாறு நடந்த இவ்வுண்மையை இன்றும் நம் குழந்தைகள் நமக்கு நேரே நன்கு காட்டி வருகின்றன. பிறந்து ஓர் ஆண்டு வரையும் யாதும் பேசாது; அழுவது சிரிப்பது கை கால்களை அசைப்பது ஆகிய நிலைகளிலேயே மழலைகள் மருவி வருகின்றன. பின்பு வாயால் ஒலிகளைச் செய்கின்றன; அதன் பின் கொன்னிக் கொன்னி மெல்லப் பெச நேர்கின்றன. மதலைகளுடைய அந்தக் குதலைகளைக் கேட்டுப் பெற்றோர்முதலாக யாவரும் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். மனித மரபின் வளர்ச்சியையும் கிளர்ச்சியையும் மழலைகள் விளக்கி வருவது வியப்பை விளைத்து வருகிறது.

நம் எதிரே புதிதாய்த் தோன்றுகின்ற இந்தக் குழந்தைக் காட்சிகள் பழங்காலத்தில் தோன்றிய மனிதர் நிலைகளைத் தெளிவா வரைந்து காட்டுகின்றன. கருதிக் காணும் காட்சியில் உண்மைகள் நுண்மையா உணர வருகின்றன.

பேசத் தொடங்கிய பின்பு தான் மனிதன் தனி நிலையில் உயர்ந்தான். மிருகங்களைவிட மனிதன் பெரியவனுய் உயர்ந்தது வாய் பேசும் வாய்ப்பினுலேயாம். மிருகங்கள் பேசா; பேச்சிலிருந்து விலகினமையால் அவை விலங்குகளாய் வேறே ஒதுங்கின. மொழிகள் ஒழிய வழிகள் விலகின.

சிங்கம் கர்ச்சிக்கும்;
யானை வீறிடும்;
குதிரை கனைக்கும்;
கழுதை கத்தும்;
நாய் குலைக்கும்;
நரி ஊளை யிடும்;
பன்றி உறுமும்;

என இன்னவாறு வருவன யாவும் அவை பேச முடியாத பிராணிகள் என்பதைத் தெளிவா விளக்கி நிற்கின்றன

மொழிவது மொழி; விழிப்பது விழி; பேசுவது பேச்சு. இவ்வாறு செயல் வழியே வந்துள்ள பெயர்களை உணர்ந்து கொள்பவர் உண்மைகளை நன்கு தெரிந்து கொள்ளுவர்.

பேசுந்தன்மை பெருகி வந்தமையால் மனிதன் அரிய பெரிய ஆற்றல்களுடையவனாய்த் தேசு மிகுந்து சிறந்து விளங்கினான். வாய்மொழிகள் வளமையாய் வழங்கி வர மனித மரபுகள் கிழமையாய் உயர்ந்து கிளர்ந்துவந்துள்ளன.

மொழிவழியே ஒளியும் உயர்வும் பெருகி வந்துள்ளமையால் அதன் மகிமையும் மாண்பும் தெளியலாகும். கான விலங்குகள்போல் ஊமைகளாய் உழந்து திரிந்த மானவர் உலக உயிர்களுள் தலைமையாய் ஓங்கி வந்திருப்பதை ஊன்றி உணர்பவர் மொழியின் அற்புத நிலையை ஓர்ந்து தேர்ந்து உவகை மீதூர்ந்து நிற்பர். அதிசய வியப்புகளை அறியாமல் மறந்து போவது மதிமயக்கங்களாய் வளர்ந்து வந்துள்ளது. மனிதனுடைய வளர்ச்சி மொழிகளுடைய கிளர்ச்சிகளால் கிளர்ந்து வந்திருப்பதை உணர்ந்து வருபவர் ஒலிகளின் தத்துவங்களை உய்த்து உணர்ந்து உவந்து வியந்து வருகின்றார்.

கைகாட்டித் தலை ஆட்டிக் கடிதொலித்துத்
தன்கருத்தைக் காட்டிப் பண்டு
மெய்காட்டும் சாடைகளால் வாழ்ந்துவந்த
மனிதன்பின் மெள்ள மெள்ளப்
பைகாட்டும் ஒலிகள்பல பழகினன்
அவ்வொலிகள் பதங்கள் ஆகிச்
செய்காட்டும் மொழிகளாய்த் தேசங்கள்
தொறும்வேருய்ச் சேர்ந்த அன்றே. (1)

வாய்பேச மாட்டாமல் நெடுங்காலம்
வனவிலங்காய் வாழ்ந்தலைந்தாய்!
நீபேச நேர்ந்தபின்பே நீணிலத்தில்
மனிதனென நிமிர்ந்து நின்ருய்;
தாய்பேசும் மொழிவழியே தன்வாயில்
ஒலிகள்வரத் தவழ்ந்து வந்தாய்!
நீபேசும் மொழியேநின சீவஒளி
நிலைதெளிந்து நெடிது வாழ்க. (2)

மொழியால் மனிதன் ஒளி பெற்று வந்துள்ள நிலைகளை இவை உணர்த்தியுள்ளன. பேசத் தொடங்கிய பின்பே மனிதரிடம் கருத்துக்கள் விருத்தியடைந்து வந்துள்ளன. விலங்கு நிலை விலகியதும், விளம்பு மொழி நிலவியதும் விழுமிய தலைமை செழுமியதும் வியந்து சிந்திக்க வுரியன.

காட்டு விலங்காக் கடைப்பட் டிருந்தவரை
நாட்டு மனிதரா நனகுயர்த்தி---வீட்டுமொழி
ஆக்கி இருக்கும் அருமை அறியினே
ஊக்கி உவக்கும் உளம்.

மானுட வளர்ச்சியும் மானச மருமங்களும் விஞ்ஞான விசித்திரங்களாய் விரிந்து நிற்கின்றன. எண்ணங்களை

விளக்கிச் செயல்களைத் துலக்கி உயர் நிலைகளில் மனிதரை ஊக்கி வருதலால் பேச்சுகளின் மாட்சிகளையும் ஆட்சிகளையும் நன்கு அறிந்து கொள்ளலாம். வாய்மொழி வழியே வையம் எவ்வழியும் செவ்வையாய் இயங்கி வருகிறது.

கண்டங்கள் தோறும் தேசங்கள் தோறும் இடங்கள் தோறும் மாந்தர் பிரிந்து வாழ்ந்து வருதலால் அவர் பேசி வருகிற மொழிகளும் பல வேறு வகையாய் விரிந்து வர நேர்ந்தன. இந்த நாவலந்தீவில் மாத்திரம் இருநூற்று நாற்பது மொழிகள் வளமையாய்ப் பேசப்படுகின்றன.

உலகம் முழுவதிலும் எண்ணிக் கணக்கு எடுத்தபடி எண்ணூற்று எண்பத்தேழு மொழிகள் இதுவரை வெளியாகியுள்ளன. மனிதருடைய வாழ்வுகள் மொழிகளால் நடந்து வருகின்றன. பிறப்புரிமையில் இயல்பாகப் பேசி வருகிற வாய்மொழிகள் அவரவர்க்குத் தாய் மொழிகள் ஆகின்றன. பிறந்த குழந்தை பெற்ற தாயால் வளர்ந்து வருகிறது; பிறப்பு மொழியால் மனித வாழ்வு சிறப்பா நடந்துவருகிறது.

நமது மொழி.

தமிழ் நமது தாய்மொழி. மூன்று எழுத்துக்களால் பேர் அமைந்துள்ளது; ஆன்ற பொருள் உடையது. இந்தப் பேரை முதலில் இட்டவர் யார்? எவ்வாறு நேர்ந்தது? என்ன காரணம்? இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடைகளை யாரும் தெளிவாய்க் கூற முடியாது. ஆயினும் ஆராய்ந்து சிந்திக்க உரியது. சிந்தனை வழியே தெளிவுகள் வருகின்றன.

தமிழ் மொழியின் நீர்மை சீர்மைகளை யெல்லாம் கூர்மையா ஓர்ந்து கொள்ள இப் பேர் நேர்மையா நேர்ந்துள்ளது. நயனும் பயனும் வியனுய் மேவியிருத்தலால் பெயரின்

இயல்பு உயர்வா ஓங்கியுளது. உரிமையான நாமம் அருமையான நேம நியமங்களோடு நிலவி நிலைமை தெரிய நிற்கிறது.

அகரம் முதல் ஔகாரம் ஈருகப் பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள்; ககரம் முதல் னகரம் வரையுள்ள பதினெட்டும் மெய் எழுத்துக்கள். உயிர் மெய் என இரு வகையா அமைந்த முப்பது எழுத்துக்களால் நமது மொழி செப்பமா இயங்கிச் சீர்மை நீர்மைகளைத் துலக்கி வருகிறது.

உயிர் இனம், வல் இனம், மெல் இனம், இடை இனம் என நான்கு இனங்களாக எழுத்துக்கள் இசைந்துள்ளன. இந்த நான்கு வகைகளும் தமிழ் என்னும் பேரில் தொகையாய் அமைந்துள்ளன அந்த அமைப்பு மொழியின் பாங்குகளைத் தெளிவா விளக்கித் தழுவிய பேரை ஒளி செய்து வழி முறையே வழங்கி வருகின்றது நேர்ந்த பேர் சேர்ந்த மொழியை ஓர்ந்து உணரச் செய்து ஆர்ந்த சீருடன் அமைந்து திகழ்கிறது. அமைதியை அறிவது உரிமை ஆகிறது.

த் அ ம் இ ழ்

இந்த ஐந்தின் சேர்க்கையால் தமிழ் என்னும் பேர் தோன்றியுள்ளது. உயிரினம் வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகிய நால் வகை இனங்களும் இதில் அமைந்துள்ளமையால் மொழியின் சீவியங்கள் ஓவியங்களா மேவி வர இப்பெயர் உரிமையாய் மருவி வந்துள்ளது அகரம் வல்லினத்திலும் இகரம் மெல்லினத்திலும் மேவி வந்தது மொழியின் சீவ நிலையைத் தெளிய விளக்கி நல்லினமாய் நின்றது.

ஒரு பொருளுக்கு உரிமையாகப் பெயர் தோன்றும் பொழுது அதன் நிலைமை தலைமை நீர்மை சீர்மைகளைப் பெரும்பாலும் நேரே உணர்த்தி வரும்; அந்த வரவில் இந்தப் பேர் எழுந்துள்ளது. உற்ற நாமம் உரிய நீர்மையை இனிது தேர்ந்து அரிய சீர்மையை ஓர்ந்து உணர நேர்ந்தது.

தமிழ் என்று ஒலிக்கும் போது இனிய இயல்பான விழுமிய ஓசை வெளி வருவதை உள்ளச் செவியால் கூர்ந்து ஓர்ந்து கொள்ளலாம். உணர்வுக்கு ஒளி புரிந்து உயிர்க்கு உவகை சுரந்து அருளுதலால் மொழி விழுமிய சுவையாய் விளங்கி வருகின்றது. ஆன்ம ஒலி அதிக உவகை தருகிறது.

தமிழின் சுவையைத் தனிநுகர்வார் தம்பால்இனிதாய் வந்தாலும்
அமிழ்தின் சுவையைக் கருதாமல் அதையே பருகிஅகமகிழ்வார்.

என்பது இயல் தெளிந்த மொழியாய் இனிது வந்துளது.

தாங்கள் வாய்மொழிந்து வரும் தாய் மொழியை எந்த நாட்டாரும் வியந்து புகழ்ந்து பேசுவது இயல்பாய் நேர்ந்துள்ளது. வளமையாய்ப் பழகி வருகிற மொழி எவர்க்கும் கிழமையாய் உவகை புரிந்து உள மகிழ்வு தருகிறது.

இந்த நாட்டார் பெரும்பாலும் தங்கள் தாய் மொழியின் பெருமையை உணராமல் சிறுமையடைந்தே கழிகின்றனர். இவ்வளவு மடமையும் சிறுமையும் வேறு எந்த நாட்டிலும் யாரிடமும் காணமுடியா. யாண்டும் காணாத மொழி இழிவு ஈண்டு நீண்டு நிமிர்ந்து நிலவுகின்றது. தமிழ் வாழ்க; தமிழன் வாழ்க என்று பொது மக்கள் கூடியுள்ள கூட்டங்களில் சிலர் ஆரவாரமாய் வீணே கத்துகின்றனர். அந்த எத்து வழியிலேயே தமிழபிமானம் உடையவர் போல் வெளி வேடம் காட்டி விருதாவா மினுக்கிப் பரிதாபமாயுழல்கின்றனர். தாய் மொழியின் தகைமையை உண்மையா உணராமல் வாய் மொழி அளவிலேயே வளமையாய்ப் பேசி வாழ் நாளை வீழ்நாளாக்கிப் பலர் வறிதே கழிகின்றனர். மேலான மொழி நிலையை உணராமையால் கீழான புலைகளில் இழிந்து பாழான வழிகளிலேயே போகின்றனர்.

தமிழ் மொழியின் சுவையைத் தகவாய் நுகர்ந்தவர் உணர்வின் ஒளி மிகுந்து உவகை மீதூர்ந்து வாழுகின்றனர். அவர் துறவிகள் போலவும் தவசிகள் போலவும் இந் நாட்டில் ஒதுங்கி வாசம் செய்கின்றனர். அவருடைய மனம் மொழி மெய்கள் வனவாச நிலையில் தனியே நிலவுகின்றன. தம் தாய்மொழியை உரிமையோடு பலரும் பயிலாமையால் மாறுபாடான இந்தப் பிரிவினைகள் பெருகியுள்ளன.

அறிவின் சுவையை நுகருந்தோறும் மொழியின் பெருமையை விழுமியோர் பரவசமாய் வெளியிடுகின்றனர். உள்ளம் உவகை அடைந்த பொழுது உரைகள் வெள்ளமாய் விரிந்து விழுமிய நீர்மைகளை வெளியே வீசி வருகின்றன.

இனிய நன்மொழி தமிழ்என இயம்புதல் என்றும்
கனியும் அன்பொடு கலைதெரி புலவர்பால் கண்டாம்;
தொனிசெயும் சுவை பலபல தோன்றினும சுகியார்
துனிசெயும் நவை தோய்ந்துள சுமடர்கள்தொடர்ந்தே.

கலையின் சுவையை நுகர்பவர் அமரர்போல் தலைமையாளராய்த் தழைத்து வருகின்றார்; அதனை இழந்தவர் அவலராய் இழிந்து கழிந்து அசடராய் ஒழிந்து போகின்றார்.

வாழவுக்கு எவ்வழியும் இதம் செய்து வருகிற மொழியைச் செவ்வையாப் பயின்று தெளிந்தபோது தான் அந்த நாட்டு மக்கள் சிறந்து விளங்குவார். மொழியுணர்வு தெளிவா இல்லையேல் விழி ஒளி குன்றிய குருடர் போலவே இழிவுற நேர்வார் பேச்சு அளவிலேயே வாழ்ந்து வருபவர் பேசுகின்ற மிருகங்களாகவே மாசோடு தாழ்ந்து கழிவர்.

தமிழ்.

உலக மொழிகளுள் தமிழ் மிகவும் பழமையானது. அரிய

பல கலைகள் நிறைந்தது. சிறந்த இலக்கணங்களை யுடையது. இயல்பான எளிய ஒலிகள் இசைந்தது; தெளிவான மொழி வளங்கள் தோய்ந்தது; விழுமிய மேன்மைகள் வாய்ந்தது. இனிய நீர்மைகளோடு யாண்டும் சீர்மையாய் இயங்கி வருவது. இனிமை நயம் இயல்பான சுவையாய் விளைந்தது.

இனிமையும் நீர்மையும் தமிழ்எனல் ஆகும். (பிங்கலந்தை)

தமிழைக் குறித்துப் பிங்கல முனிவர் இங்ஙனம் விளக்கியிருக்கிறார். இனிமையும், நீர்மையும் தமிழ் என்றது அதன் இயல்பையும் உயர்வையும் ஓர்ந்து கொள்ள வந்தது. மொழியின் பேரைக்கொண்டு அதன் சீரையும் சிறப்பையும் தெளிவையும் கண்டு கொள்ளும்படி இது காட்டியுள்ளது.

தமிழ் தழிய சாயலவர். (சிந்தாமணி, சுர 32)

அழகிய இனிய மகளிரைத் திருத்தக்க தேவர் இவ்வாறு குறித்திருக்கிறார். இனிமை என்னும் பொருளில் தமிழ் இங்கே செழுமி வந்து இதன் வளமையைத் துலக்கியுளது.

இன் தமிழ் இயற்கை இன்பம். (சிந்தாமணி 2063)

கந்தருவ போகத்தை இந்தவாறு இது குறித்துள்ளது.

செந்தமிழ், பைந்தமிழ், தண்தமிழ், இன்தமிழ், என இன்னவாறு செம்மை இளமை தண்மை இனிமை முதலிய சீர்மைகளால் தமிழை விசேடித்து வருவது பழமையிலிருந்தே கிழமையான மரபாய் வளமை தோய்ந்து வந்துள்ளது.

தள்ளாப் பொருள் இயல்பின்
தண் தமிழாய் வந்திலார்
கொள்ளார் இக் குன்று பயன். (பரிபாடல் 9)

காந்தருவ இன்பத்தை அனுபவிக்க உரியாரைக் குன்றம் பூதனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் குறித்திருக்

கிறார். தமிழ் இயல்பு இனிய சுகபோகங்களோடு உயர் வாய் ஒளி மிகுந்து இயல்பா இசைந்து இனிது மிளிர்கிறது.

இமிழ்திரை வையத்து ஏயர் பெருமகன
தமிழ்இயல் வழக்கினன். (பெருங்கதை, 4, 17)

அன்பு நலம் சுரந்த இன்பவழி ஒழுகுபவன் என உதயண மன்னனைக் கோங்கு வேளிர் இங்ஙனம் உரைத்துள்ளார். தமிழின் இயல்பு அமிழ்தின் சுவையாய் அமைந்துளது.

கோன்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்தமிழ்ப்பாவை. (மணிமேகலை)

காவிரி நதியைச் சாத்தனார் இவ்வாறு சாற்றியுள்ளார். தண்மையான நீர்மையும் உண்மையான சீர்மையும் ஒண்மையான மேன்மையும் ஈண்டு இவ்வாறு உணர வந்தன.

பொன்பால் பொருவும விரை அல்லி
புல்லிப் பொலிந்த பொலந்தாது
தன்பால் தழுவும் குழல்வண்டு
தமிழ்ப்பாட்டு இசைக்குமதாமரையே!
என்பால் இல்லை அப்பாலோ
இருப்பார் அல்லர்; விருப்புடைய
உன்பால் இல்லை எனறக்கால்
ஒளிப்பாரோடும உறவுண்டோ?
(இராமா, கிட்கிந்தா, பம்பை 28)

தனது அருமை மனைவியைப் பிரிந்த இராமன் பம்பைப் பொய்கையை அடைந்தபோது அங்கே மலர்ந்திருந்த செந்தாமரையை நோக்கி இங்ஙனம் மறுகி உரையாடியிருக்கிறான். பொருள் நிலைகளைக் கருதி உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கே தமிழ்ப்பாட்டு என்றது இனிமையான இசையை. மொழியின் சுவை அமுதின் தெளிவா வந்தது.

குழுவு நுண்தொளை வேயினும் குறிநரம்பு எறிவுற்று
எழுவு தண்தமிழ் யாழினும் இனிய சொற்கிளியே!
முழுவதும்மலர் விரிந்தன முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவியது ஒப்பது பாராய்!
(இராமா, அயோத்தி, சித்திர 28)

சீதை சொல் யாழினும் இனியது என்று இது குறித்துள்ளது. விழுமிய வாய்மொழி வியனுய் விளைந்தது.

இங்கே தண்மையும் மென்மையும் இனிமையும் இயல்பாகவுடைய தமிழ் என வந்துள்ளது நன்கு சிந்திக்கவுரியது.

தமிழ் என்னும் சொல்லை இனிமை இன்பம் இதம் உதவி குளிர்ச்சி உவகை முதலிய உயர் நிலைகளிலேயே கவிகள் சுவையா வழங்கி வந்துள்ளனர்; அவ்வுண்மையை உள்ளம் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறேம். இருண்டு மருண்டு மனிதன் இழிந்து போகாமல் தெருண்டு தெளிந்து உயர்ந்து கொள்ளும்படி ஒளி மண்டலமாய் மொழி ஓங்கி ஒளிர்கிறது. அதன் வழியே யாவும் இயங்கி வருகின்றன.

"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள் அகற்றும---ஆங்கவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" (தொல்லியல்)

சூரியன் உலக இருளை நீக்கி ஒளி செய்கிருன்; தமிழ் மடமை இருளை நீக்கி மாந்தர்க்கு அருள்புரிகிறது என இது அருளியுளது. தனக்கு உவமையில்லாத இறைவன் போலத் தனக்கு நிகர் இல்லாதது எனத் தமிழை இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணரத்தக்கது.

நேர் இன்மையால் சீரிய தலைமை தெரிய வந்தது.

இத்தகைய உத்தம நிலையில் உலகம் புகழ ஒளி மிகுந்து உயர்ந்து இருந்த தமிழ் இன்று இருக்கும் நிலையும், இந்நாட்டவர் இதனைப் போற்றிவரும் புலையும் தொலையாத சோகங்களாய்த் தோன்றி நிற்கின்றன. அறிவொளி நிறைந்து விழுமிய நிலையில் கெழுமியுள்ளமொழியை உரிமையாளர் சரியாக் கவனியாமல் இருப்பது ஊனமான ஞான சூனியமேயாம்.

மானம்உள்ள ஒருமாமி வலியவாய்
மருமகள்முன் வாழ்வது என்ன
ஞானம்உள்ள நம்தமிழ்த்தாய் ஆங்கிலத்தின்
எதிராக நாவடங்கி
ஊனம் அடைந்து உள்ளம்உடைந்து ஒளியிழந்துஇங்கு
அயல்ஒதுங்கி உறைந்திருக்கும்
ஈனநிலை தனையுணர்ந்தால் எந்தமகன்
உள்ளம்தான் எரியாதம்மா!

(இந்தியத்தாய் நிலை 90)

தாயின் தளர் நிலையை உணர்ந்தால் அவர் உண்மையான சேயராவார். அவ்வாறு உணர்வார் யார்? எவரேனும் எண்ணி உணர நேரின் அவர் கண்ணீர் சொரிய நேர்வார்.

அரிய கலைஞானங்கள் நிறைந்த இனியமொழி இவ்வாறு பரிதாப நிலையில் இருப்பது கால வேற்றுமையேயாம்; மானமும் வீரமும் உடைய நல்ல மக்கள் தோன்றித் தாய் மொழியைத் தகவோடு பயின்று மிகவும் உரிமையோடு பேண நேர்ந்த போதுதான் தாய் நாடு உயர்ந்து விளங்கும். உள்ளங்கள் நல்லவழிகளை நாடி உயர்ந்த அளவு அந்த மனித இனம் பேசும் மொழி பெருமையாய்த் தேசு வீசி வருகிறது.

விழிக்கு ஒளிபோல் மனிதனது வழிக்கு மொழி.

உலக வாழ்க்கைக்குப் பொருள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் மொழி. பொருளை ஈட்டி வாழ்பவன் செல்வனாய்ச் சிறந்து திகழ்கிறான்; மொழியைப் போற்றி வாழ்பவன் நல்ல அறிஞனாய் உயர்ந்து விளங்குகிறான்.

தன் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் பிறர் கருத்தைத் தான் உணர்ந்து கொள்ளவும் மொழி துணையாய் நின்று மனிதனுடைய வாழ்வை இனிது நடத்தி வருகிறது. அவ் வரவை நுனித்து உணர்பவன் அதன் மகிமையை மதித்து மகிழ்வார். உணரும் அளவு ஒருவன் மனிதன் ஆகிறான்; உணர்வு ஒழியின் அவன் மிருகமாய் இழிகிறான். மொழி தெரியாதவன் விழி தெரியாத குருடனாய் இழிவுறுகின்றான்.

நமது மொழி பேச்சு வழக்கோடு மாத்திரம் நின்று விடவில்லை; அரிய பல அறிவு நலங்களை அருளிப் பெரிய மேன்மைகளை விளைத்து வருகிறது. சிறந்த மேதைகளுடைய மேதாவிலாசங்கள் எல்லா வழிகளிலும் நிறைந்து என்றும் உயர் தனிச் செம்மொழியாய் எங்கும் ஒளி வீசியுள்ளது.

இதன் பழைய மகிமை கழிய நேர்ந்தது ஆயினும் புதிய நிலையாலும் அதிசய மேதைகளை அடைந்து மதி நலங்கள் நிறைந்து எவரும் துதிசெய்து வரும்படி தொடர்ந்து நிற்கிறது. பழமையின் வளமையைக் கிழமை கூர்ந்து காண்பவர் உளம் மிக உவந்து உயர்வினை ஓர்ந்து கொள்ளுவர்.

விரிந்து பரந்த நிலமண்டலம் எங்கணும் அறிவொளி வீசி விழுமிய ஒளி மண்டலம் போல் இம்மொழி முன்னம் உயர்ந்திருந்தது. பண்டு விளங்கியிருந்த மேன்மையும் இன்று மழுங்கியுள்ள தாழ்மையும் கடலும் குளமும் போல் நேரே தோன்றி நிலைமைகளைத் துலக்கி நிற்கின்றன.

உயர்ந்தன தாழும்; தாழ்ந்தன உயரும்;
நடந்தன கிடக்கும்; கிடந்தன நடக்கும்;
பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்;
தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்.

என உலக நிலைகளைக் குறித்து வந்துள்ள இக்காட்சிகளுக்குத் தமிழ்மொழியும் ஒரு தெளிவான சாட்சியாய் நேர்ந்து நிற்கிறது. மொழியின் வழியை விழியூன்றி நோக்குவார் அரியராய் அருகியுள்ளமை பரிதாபமாப் பெருகியுளது.

எல்லை.

தமிழ் நாடு மிகவும் எல்லை சுருங்கி அல்லல் பல அடைந்து இன்று அவல நிலையில் உள்ளது. முன்னம் நீண்டு பரந்து நெடிது விரிந்து யாண்டும் செழித்துத் தழைத்துச் சிறந்து விளங்கி யிருந்தது. பழமை நினைவு மிகவும் பரிவு புரிகிறது.

இப்பொழுதுள்ள கன்னியா குமரிக்குத் தெற்கே ஏழாயிரம் சதுர மைல் பரப்பில் தமிழ் மண்டலம் சிறப்பாய்ச் செழித்து நின்றது. அந்த நாடு முழுவதும் தமிழே தாய் மொழியாய்ப் பீடும் பெருமையும் பெற்று நீடிய புகழோடு நிலவி வந்தது. இரண்டு முறை கடல் அடலோடு நீண்டு பரந்து மூண்டு விரிந்து யாவும் கவர்ந்து கொண்டது.

ஊழிகால வெள்ளமாய் ஆழிநீர் ஓங்கி விரைந்து விழுங்கிக் கொள்ளவே அங்கிருந்த தேசங்கள் யாவும் மறைந்து போயின. நிலமண்டலம் நீராழியாய் மாறிநின்றது. பிரளயங்களால் பேரும் சீரும் பிறவும் பிறழ்ந்து போயின.

தமிழ்ப் பெருநாடு, பாண்டியன் தேசம், வழுதி மண்டலம், குமரிக்கண்டம் எனப் பேரும் சீரும் பெற்றிருந்த நிலவலயம் அலைகடலாய் நிலை திரிந்து தலைபிரிந்துள்ளது. இந்து

மகா சமுத்திரம் என இப்பொழுது பேர் பெற்றுள்ள கடலின் பரப்பு அன்று செழியன் திருநாடாய்ச் செழித்திருந்தது. செழிப்பும் தழைப்பும் சிறப்பும் இருப்பும் மறப்புகளாயின. கடல்கோள் நிகழ்ந்த போது அங்கே முடிமன்னனுய்ப்படி புரந்து வந்தவன் சயமா கீர்த்தி என்னும் பாண்டியவேந்தன். இவன் சிறந்த நீதிமான்; அரிய பலகலைகளை அறந்தவன்; பெரிய போர்வீரன். இவனுடைய ஆட்சியில் இருந்த அந்த நில மண்டலம் நாற்பத் தொன்பது நாடுகளாய்ப் பிரிந்திருந்தது. அவற்றின் பேர்களையும் தொகைகளையும் அடியார்க்கு நல்லார் தெளிவாக விளக்கியிருக்கிறார். அவர் எழுதியுள்ள முறையை அடியில் வரும் மொழிகளால் அறியலாம்.

"அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வட எல்லை ஆகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழு நூற்றுக்காவத வாறும் இவற்றின் நீர்மலிவான் என மலிந்த ஏழ் தெங்கநாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன் பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குண காரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வட பெருங் கோட்டின் காறும் கடல் கொண்டு ஒழிந்தது."

பண்டு தென்பால் பரவியிருந்த தமிழ் நாடு அழிந்து போயுள்ள அழிவு நிலையை இதனால் ஓரளவு அறிந்து கொள்கிறோம். "வழுதி வளநாடு வன்கடலாய் மாறியதே; பழுது படியாத பாரழியச் சீரழிந்தோம்" என்று முழுவதும் அறிந்துள்ள ஒருவர் இப்படிப் பேரழுகையாய் அழுதுள்ளார்.

ஒரு நாடு என்பது பல ஊர்களையுடையது; தாலூகா, ஜில்லா என இக்காலத்து இங்கே வழங்கி வருவதுபோல் அக்காலத்து அங்கே நாடுகள் இருந்துள்ளன: தென்னை மரங்கள் நிறைந்திருந்த நில மண்டலம் தேங்க நாடு என

நின்றது; மலைவளங்கள் மலிந்திருந்தன குன்றநாடு என நேர்ந்தது. இன்னவாறே தம்பால் பெருகியிருந்த பொருள் நிலைகளை நோக்கியே நாடுகள் பேரடைந்துள்ளன. எழுநூற்றுக் காவதம் என்றதனால் அந்த நிலப் பரப்பின் அகல நீளங்களையும் நிலைமை தலைமைகளையும் யூகமாய்த் தெரிந்து கொள்ளலாம். பெரிய தமிழ்நாடு நெடிய கடலா முடிவாயது.

பஃறுளி என்பது ஒரு பெரிய நதி. அது அந்நாட்டின் வட எல்லையாயிருந்தது; குமரி என்பது அதன் தென் எல்லையாய் நின்றது. குமரி என்னும் ஒரு மலையிலிருந்து பெருகி வருகிற நதியின் கரையிலேயே தென்மதுரை என்னும் இராசதானி அதிசய நிலையில் விளங்கியிருந்தது; அதிலிருந்து தான் பாண்டிய மன்னர் வழி வழியே உலகை ஆண்டு வந்தனர். முதல்சங்கம் அங்கே தான் தலைமையாய் நிலவியிருந்தது. அது அழிந்து போகவே பஃறுளி ஆற்றுக்கு வடபால் வந்து குடி ஏறினர். கபாடபுரம் என்பது அதன் தலைநகரமாய் அமைந்திருந்தது; பல நூற்றாண்டுகளுக்குப் பின் அதுவும் கடலால் மூழ்கவே இப்பொழுதுள்ள நில மண்டலத்தை அடைந்தனர்; பெருமை நிறைந்த இந்த மதுரையை இராசதானியாக் கொண்டு பாண்டிய மன்னர் ஈண்டிய புகழோடு ஆண்டு வந்தனர். பழைய தென்மதுரையை நோக்க இது உத்தர மதுரை என உரையாட நேர்ந்தது. உத்தரம்=வடக்கு.

உறுதியும் ஊக்கமும் மானமும் வீரமும் ஞானமும் தீரமும் நன்கு வாய்ந்திருந்த சிறந்த மன்னர் ஆதலால் நேர்ந்த அழிவுகளுக்கெல்லாம் யாதும் தளராமல் நில மண்டலங்களைப் புதிது புதிதா வளைந்து கொண்டு விதி முறைகள் புரிந்து அதிசய நிலையில் ஆண்டு வந்துள்ளனர்.

கடலின் அடல்களைக் கண்டும் கலங்கா நெஞ்சராய் நிலம் புரந்து நலம் புரிந்து நின்றனர். பாண்டிய மன்னர்களுடைய ஆண்டகைமைகளை வியந்து அருந்தவர் முதல் யாவரும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வாழ்த்தி வந்தனர்.

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை:
ஊழிதோறு ஊழி உலகம் காக்க;
அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி.

(சிலப்பதிகாரம், **11**)

தெற்கே நெடிது பரவியிருந்த தன் நாட்டைக் கடல் கவர்ந்து கொண்டாலும் அடல் குன்றுமல் வட பால் வந்து கங்கா நதியும் இமயமலையும் தனக்கு உரிமையாக் கொண்டு நெடிய நில மண்டலத்தை ஆண்ட வேந்தன் ஆகிய தென்னவன் வாழி எனச் சேர மன்னன் இன்னவாறு துதித்திருக்கிறான். இந்த வாழ்த்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேல்சென்று மேவார்நாட்டு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்.

(முல்லைக்கலி, 4)

அலைகடல் தனது நிலமண்டத்தைக் கவர்ந்து கொண்டாலும் உள்ளம் மெலியாமல் ஊக்கி வந்து சோழ மன்னனையும், சேர அரசனையும் ஒருங்கே வென்று பெரும் பூமியைக் கைக்கொண்டு அருந்திறலோடு ஆண்ட பெருந்தகை எனப்

பாண்டிய மன்னனை நல்லுருத்திரனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் உளம் உவந்து வியந்து புகழ்ந்திருக்கிறார்.

தென்னவன் என்று பாண்டிய மன்னனுக்கு வந்துள்ள பெயரே முன்னை ஊழியில் தென்திசையில் அம்மரபினர் மாட்சியோடு ஆட்சி புரிந்து வந்துள்ளதைக் காட்சியாக் காட்டிக் கடல்கோள் நிலைகளைத் தெளிவா விளக்கியுள்ளது.

தென்திசையை ஆண்டுவந்த சீர்மையினால்
வழுதிமன்னர் தென்னர் என்ன
நின்றிசைகள் திசைகள்தொறும் நெடிதோங்கி
நிலைத்துவர நிலவி நின்றார்;
அன்றிசையின் தமிழ்மொழியை அவர்பேணி
ஆதரித்த அருமை யாலே
இன்றிசைநம் மென்மொழியைத் தென்மொழிஎன்று
எம்மொழியும் இயம்பு மன்றே.

ஆண்டு வந்த அரசும், நீண்டு நின்ற நிலமும், பூண்டிருந்த மொழியும் ஈண்டு நுண்ணிதா எண்ணி ஆராயவுரியன.

ஏழாயிரமைல்கள் அளவாயிருந்த நிலம் பாழாகி இப்பொழுது நீராழியாயுள்ளது. தென்கடல் என்றும் இந்து மகா சமுத்திரம் என்றும் அது வழங்கப்படுகிறது. பண்டு பாண்டிய மன்னருக்கு உரிமையாய்த் தென்பால் நீண்டு பரந்திருந்த நெடிய நில மண்டலத்தை லெமூரியாக் கண்டம் என ஆங்கிலேயர் இன்று வழங்கி வருகின்றனர். அந்தச் சலப்பிரளயம் நேர்ந்து ஏழாயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது என்று நில நூல் வல்லார் விஞ்ஞான முறையில் ஆராய்ந்து விவரமாக் கூறுகின்றனர்.

"There existed the great continent of Lemuria, which extended across the pacific Ocean from India to Australia, stretching westwards as far as Madagascar and Africa."

[Henry Proctor]

லெமூரியா என்னும் பெரிய கண்டம் இந்தியாவிலிருந்து ஆஸ்டிரேலியா வரைக்கும் கடலின் குறுக்கே நீண்டு மேற்கே ஆப்பிரிக்காவின் மடகாஸ்கர் வரையும் விரிந்து பரந்து இருந்தது என்னும் இது இங்கே ஊன்றி உணரவுரியது.

ஆழி நீரால் அழிவு நேர்ந்த கால நிலையை ஊழி என்று நாம் உரைத்து வருகிறோம். முதலில் மூண்ட கடல் கோளை முதல் ஊழி என்றும், இரண்டாவது நேர்ந்ததை இரண்டாவது ஊழி என்றும் மேலோர்கள் வழங்கி வந்துள்ளனர்.

முதல் இரண்டு சங்கங்களிலிருந்த அரிய பல நூல்கள் எல்லாம் கடலில் மறைந்து போயின. பெரிய மேதைகளுடைய இனிய மதிநலங்களை நாம் இழந்திருக்கும் பேரிழவைக் கருதியுணரும்தோறும் உள்ளம் மிகவும்உருகி மறுகுகிறது.

நம் முன்னோர்களின் புத்திகளிலிருந்து விளைந்த உத்தம வுணர்வு நலங்கள் வித்தக ஒளிகளாய் விளங்கி நின்றன.

எத்தனையோ இயலிசைகள் எவ்வளவோ
நாடகங்கள் இனிய வேந்தின்
ஒத்தமுறை நிறைபொருள்கள் உளநுல்கள்
உயிர்நூல்கள் உலக நூல்கள்
தத்துவத்தின் கலைநிலைகள் தருவிலங்கு
பறவைகளின தகவு நூல்கள்
அத்தனையும் கடல்வாரி அடல்வயிற்றில்
விழுங்கியதே அந்தோ! அந்தோ!

பொல்லாத கடல் அன்று புலமைநிறை
தமிழ்நூல்கள் பலவும் வாரி
ஒல்லாத அடிவயிற்றின் உள் ஒடுக்கி
ஒளித்ததே! உலகில் யாண்டும்
இல்லாத கலைகளையும் எண்ணாத
பொருள்களையும் இழந்திந் நாடு
கல்லாத புலைநிலையில் கலங்கிமருண்
டுள்ளதே கருமம் என்னே!

அரிய பல அறிவுச் செல்வங்களை அலை கடலில் இழந்து விட்டு வறிய நிலையில் இந் நிலமண்டலம் மறுகியுள்ளது. அவ் வுண்மையை உணருந்தோறும் உள்ளம் பரிவாய் உருகி வருகிறது. நீராழியுள் மறைந்து போன நூல்கள் பல; அவற்றுள் சிலவற்றின் பேர்களைப் பழைய நூல்களில் காணுகின்றோம். பெயர்கள உயர் கலைகளைக் காட்டியுள்ளன.

அகத்தியம்
அவிநயம்
இசை நுணுக்கம்
மயேச்சுரம்
மாபுராணம்
பூதபுராணம்
பனம்பாரம்
பல்காப்பியம்
பன்னிரு படலம்
முதுகுருகு
முதுநாரை
முறுவல்

சயந்தம்
பரதம்
செயிற்றியம்
பெருங்கலம்
பஞ்சமரபு
இந்திரகாளியம்
காக்கை பாடினியம்
நற்றத்தம்
வாய்ப்பியம்
வியாழ மாலை
பரத சேனாபதீயம்
சிற்றடக்கம்
பெரும் பொருள் விளக்கம்
வெண்டாளி
களரியாவிரை
வாமனம்
வையாபிகம்
சிகண்டியம்
பஞ்ச பார தீயம்
குண நூல்
மதிவாணம்
கழாரம்பம்
சங்கயாப்பு
துராலிங்கம்

இன்னவாறு சில நூல்களின் பெயர்கள் தெரிய வந்துள்ளன. பேரும் தெரியாமலே பல பேர்ந்து போயின. அளவிடலரிய சங்க நூல்களை எல்லாம் அவமே இழந்துள்ள நிலையை எண்ணி நோக்குவார் இரங்கி ஏங்குவார். கண்ணீர் சிந்திக் கசிந்து உருகுவார். சீரிய அறிவு நலங்களை வாரி விழுங்கினமையால் வாரி என்னும் பெயரைப் பாரறியச் செய்து கடல் அடலோடு நிமிர்ந்து மிடலா அமர்ந்துள்ளது.

> "ஏரணம் உருவம் யோகம் இசைகணக்கு இரதம் சாலம்
> தாரணம் அறமே சந்தம் தம்பநீர் நிலம் உலோகம்
> ஆரணம் பொருள் என்றுஇன்ன அரியநூல் பலவும் வாரி
> வாரணம் கொண்டது அந்தோ வழிவழிப் பெயரும் மாள."

அலை கடல் செய்துள்ள அழிவு நிலையை நினைந்து புலவர்கள் இவ்வாறு அழுது புலம்பியுள்ளனர். சீரிய அறிவுச் செல்வங்கள் வாரியுள் மறைந்தன. வாரணம் = கடல்.

நூல் என்றால் என்ன? சிறந்த மேதைகளுடைய அறிவின் சாரங்களே உயர்ந்த நூல்களாய் ஒளி பெற்றுள்ளன. சேர்ந்த சேர்க்கையின்படியே சீவர்கள் நேர்ந்து வருதலால் மேலோர்களுடைய உணர்வு நலங்களை ஓர்ந்து சிந்திக்கும் அளவு உயர்ந்து திகழ்கின்றார். மடமை மருள்களான பொல்லாத இருள்களை நீக்கி நல்ல வழிகளை விளக்கி மாந்தர்க்கு நலம் பல புரிதலால் நூல்கள் வான ஒளிகள் போல் வயங்கி நின்று யாண்டும் ஞான ஆனந்தங்களை நல்கி வருகின்றன.

Books are lighthouses erected in the great sea of time.
[E. P. Whipple]

காலம் ஆகிய பெரிய கடல் அருகே நிறுத்தியுள்ள தெளிவான ஒளிவிளக்குகளே நூல்கள் என இது குறித்துளது. மருள்களைநீக்குவதால் நூல்கள் தெருள் ஒளிகளாயின.

Books are masters who instruct us. [R. D. Burys]

நமக்கு நன்மைகளைப் போதிக்கின்ற உத்தமமான தலைவர்களே புத்தகங்கள் என இது உணர்த்தியுளது.

Books are those faithful mirrors that reflect to our mind the minds of sages and heroes. [Gibbon]

மேலான அறிவாளிகளுடைய உள்ளங்களை நம் உள்ளத்தில் தெளிவா விளக்கி யருளுகிற ஒளிமிகுந்த உண்மையான நல்ல கண்ணாடிகளே நூல்கள் என இது விளக்கியிருக்கிறது.

இத்தகைய நூல்களைச் செய்தருளுகிற உத்தம விவேகிகள் என்றும் அழியாத நித்திய சோதிகளாய் நிலைத்து நிற்கின்றனர்.

Books are immortal sons deifying their sires. [Plato]

தம்மை உண்டாக்கிய ஆசிரியர்களைத் தெய்வங்கள் ஆக்கி என்றும் சிரஞ்சீவிகளா வைத்தருளுகிற உத்தம புத்திரர்களே நூல்கள் என்று கிரீஸ் தேசத்துமேதை ஆகிய பிளாட்டோ புத்தகங்களைக் குறித்து இவ்வாறு கூறியிருக்கிறார்.

சங்க காலத்தில் தோன்றிய அகத்தியம் முதலிய நூல்கள் இருந்தால் அவற்றை ஆக்கியருளிய பெரியோர்களுடைய மகிமைகளை நாம் நோக்கி மகிழலாம். அந்தப் பாக்கியங்களை இழந்து விட்டோம். பழந்தனம் இழந்தனம் உழந்தனம்.

தொன்மையான தென்னாடு செம்மையா உயர்ந்து எவ்வழியும் செழித்துத் தழைத்துச் சிறந்து ஓங்கி நிறைந்த புகழோடு நிலவி யிருந்தது. முதல் இரண்டு சங்கங்களிலும் அதிசய மேதைகள் அமர்ந்து மதி நலங்களை விளைத்து வந்தனர். அரிய இருடிகளும் பெரிய முனிவர்களும் அதில் மருவியிருந்தனர். முழுமுதல் பரமனுடைய திருவருளும் அங்கே ஒளி புரிந்தது. எங்கும் உள்ளவன் சங்க நாயகன் ஆயினன்.

கலைக் கழகங்கள்.

பாண்டிய மன்னர்கள் அருந்திறலாண்மை யோடு சிறந்த மேதைகளாகவும் உயர்ந் திருந்தமையால் தாம் வாய் மொழிந்து வந்த தாய் மொழியைப் பேரன் புடன் பேண நேர்ந்தனர். நாட்டில் தலை சிறந்திருந்த அறிஞர்கள் எல்லா ரையும் தரம் தெரிந்து தேர்ந்து எடுத்து ஒருங்கு தொகுத்து மொழியை விழுமிய நிலையில் ஆராய்ந்து ஆதரித்து வந்தனர். அவ்வழியில்விளைந்துவந்தவிளைவுகளே தமிழ்ச்சங்கங்களாய்க் கிளர்ந்து எழுந்தன. அவை நீண்ட காலம் நிலவி வந்தன.

முதல் சங்கம்.

இது 4440 ஆண்டுகள் நன்கு நடந்து வந்தது.

இடைச் சங்கம்.

இது 3700 ஆண்டுகள் இனிது நடை பெற்றது.

கடைச் சங்கம்.

இது 1850 ஆண்டுகள் நெறிமுறையே நடந்துள்ளது.

இந்தக் கால நிலைகளைக் கருதி யுணருந் தோறும் நமக்கு வியப்பும் உவப்பும் ஒருங்கே தோன்றுகின்றன. அரிய அரசர் களும் பெரிய புலவர்களும் உரிமையோடு உவந்து பேணி வந்தமையால் தமிழ் உயர் நிலைச் செம் மொழியாய் ஒளி மிகுந்துள்ளது. உலக மொழிகளை ஆராய நேர்ந்த சில ஆங்கி லேயரும் நமது தமிழ் மொழியை வியந்து புகழ்ந்துள்ளனர்.

"It is one of the most copious, refined and polished languages spoken by man." (Taylor)

"மனிதன் பேசுகின்ற மொழிகளுள் இது சிறந்து தெளிந்து விரிந்து பரந்துள்ள உயர்ந்தமொழி" எனத் தமிழைக் குறித்து டேய்லர் என்பவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

முழுமுதல் பரமனும் இதனை இனிது பேணியுள்ளார்.

Acc. No: 925
031/1
கோவிலூர்-630 307

இரண்டாவது அதிகாரம்.

இறையனுர்.

உலக முதல்வன் கழக முதல்வனுய் நிலவியிருந்து அதிசய விஞேதங்களா அலகிலருளாடல்கள் புரிந்துள்ளான்.

முதல் சங்கத்தில் குழுமியிருந்த புலவர் எல்லாருக்கும் தலைவராய் அகத்திய முனிவர் நிலவியிருந்தார். அவர் சிவபெருமான் பாலும் முருகக் கடவுளிடத்தும் அரிய வர பலங்களை அடைந்தவர். அறிவின் பொருள்களை ஆராய நேர்ந்து புலவர்கள் அங்கே கூடும் போதெல்லாம் சிவபெருமானையும் முருக வேளையும் துதி செய்தே தொடங்குவர். ஆகவே பரமபதியும், குமரவேளும் சங்கப் புலவர்களுள் தனிமுதல் தலைவர் என நேர்ந்தனர். தலைமை தகவாய் நிலவியது.

செந்தமிழ்த் தெய்வம், செந்தமிழ்ப் பரமாசாரியன் என இந்தத் தந்தையையும் மைந்தனையும் உலகம் வந்தனை செய்து வருகிறது. அவ்வரவு உரிமையான மரபாய் உறவுதோய்ந்து வந்துள்ளது. எல்லா மொழிகளுக்கும், எல்லா உயிர்களுக்கும் என்றும் எங்கும் இறைவன் உரியவனே ஆனுலும் தமிழ்மொழிக்குத் தனி உரிமை நாயகனுய்ச் சிவபெருமான் இனிது அமர்ந்து நனி புரந்துள்ளார்.

தென் மொழிக்கும் தென்னர் குல மன்னர்களுக்கும் தென்னுட்டுக்கும் சிவன் உரிமையா யிருப்பதை அரச மரபு வரிசையா உணர்த்தி வருகிறது. பலநூல்களும் இத்தொடர் புகளைத் துலக்கி நிலைமைகளை விளக்கி வருகின்றன.

தென்னுடு உடைய சிவனே!
எந்நாட்டவர்க்கும் இறைவா! (திருவாசகம்)

மாணிக்கவாசகர் இவ்வாறு நாட்டுரிமையோடு ஈசனை உவந்து துதித்திருக்கிறார். காண முடியாத கடவுளைக் கருதி வழிபடும் பொழுது தாம் கண்ட நாடு மொழிகளோடு ஈடுபடுத்தி உரிமையுடன் அன்பர்கள் பெருமையாய்ப் பாடுகின்றனர். சார்ந்த சார்புகள் சேர்ந்து வருகின்றன.

அம்மையே! அப்பா! என்று இறைவனை ஆர்வத்தோடு அழைப்பது தம்மைப் பெற்ற தாய் தந்தையர் பால் நேர்ந்த தூய அன்புரிமையைத் துலக்கியுள்ளது. அனுபவ அறிவு இயல்பாகவே இனிமை சுரந்து தனியே வெளிவருகிறது.

அனுமான நிலையில் மனிதன் அரிய பல உண்மைகளை எளிதே தெரிய நேர்கிறான். யாரும் நேரே காணாத ஒரு பரம் பொருள் அதிசய நிலையில் உண்டு என்பதை உலகம் முதலிய காட்சிகள் நிலையான சாட்சிகளாய் யாண்டும் நிலைத்து நின்று என்றும் தெளிவா விளக்கிக் கொண்டிருக்கின்றன.

உலக நிலை

உலக நிலை பல படியாக நிலவியுள்ளது. அதன் வகையும் தொகையும் வரம்பிடலரியன. கருதியுணருந்தோறும் வியப்பும் விம்முதமும் பெருகி வருகின்றன. அலை எறி கடல்களும் நிலை தெரி மலைகளும் இலை செறி பொழில்களும் பலவகை உயிர்களும் நிலைபெற நிலையமாய் நிலைத்து வருதலால் நிலம் என ஒரு பெயர் தழைத்து வந்தது. இதன் விளைவும் தழைவும் வியத்தகு நிலையின. வையக நிலை வானக வரவாயுள்ளது.

உலகம் பூமி மாநிலம் மகிதலம் முதலிய பொருள்கள் யாவும் காரணங்களில் கனிந்து வந்துள்ளன. அளவிடலரிய அதிசயங்களை யுடையதாய்ப் பழமை படிந்து, வளமை சுரந்து, கிழமை தவழ்ந்து, புதுமை பொலிந்து, பெருமை

மலிந்து, நாளும் ஒருமையுடன் உறைந்து பலகோடி பொருள்கள் பரவி மிளிர இவ்வுலகம் நிலையாய் உலாவி வருகிறது.

கண் எதிரே காணப் படுகின்ற இம்மண்ணும் மேலே சேய்மையில் தோன்றுகின்ற அவ்விண்ணும் எண்ணி அளவிடமுடியாத நிலைகளில் இறும்பூதுகள் விளைத்துள்ளன. ஒளியும் இருளும் ஒளியாது வருவதை நாளும் நாம் தெளிவாகத் தெரிகிறோம். பகல் இரவு என வகை செய்து வைத்து வழிமுறையே தொழில் செய்து வருகிறோம். எல்லோன், அல்லோன் எனச் சூரியனையும் சந்திரனையும் சொல்லி வருகிறோம். வேத மந்திரங்களும் ஆதாரவுகளா ஓதியுள்ளன.

எண்ணரிய தொலையில் விண்ணில் ஒளிர்கின்ற ஓர் ஒளிப்பிழம்பைக் கண்ணில் காணுகின்றோம். அந்தக் காட்சியை அதிசய மாட்சியாத் துதிசெய்து தொழுகின்றோம். அதற்குச் சூரியன் என்று ஒரு சீரிய பெயரைச் சூட்டி வழிபாடுகள் புரிகின்றோம். அதன் பேரும் சீரும் பெருமிதமுடையன. யாரும் அறிய இயலாத அரிய நிலையது.

நீரும் நிலனும் நிலைத்து வர அது நிலைபெற்றுள்ளது. அது வெளிப்பட்டால் உலகம் விழிப்படைகிறது; உயிர்கள் களித்துத் தொழில்கள் புரிகின்றன. அவ் ஒளி மறைந்த பொழுது எல்லா உயிர்களும் தொழில் துறந்து விழி துயின்று கிடக்கின்றன. அது மீண்டும் குறித்த காலத்தில் உதயம் ஆகிறது; ஆகவே மாண்டு போயின போல் மயங்கிக் கிடந்த உயிரினங்கள் யாவும் விரைந்து எழுந்து வெளியே பரந்து விரிந்து யாண்டும் மூண்டு முனைந்து வருகின்றன.

இவ் வரவு செலவுகள் நாளும் நாளும் மீள மீள விரவி நிகழுகின்றன. இந்நிகழ்ச்சியின் அற்புத நிலைகளை எவரும்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE : 436846)

கருதியுணர்ந்து உறுதி காண்பதில்லை. இயற்கைவழக்கமாய் இசைந்து நின்றமையால் எளிதே மறந்து போகின்றனர்.

கதிரவன் எழுதல், கலைமதி ஒளிர்தல், மழைபொழிதல், வளி வழங்கல் ஆகிய இவ் விழுமிய தொழில்கள் நிகழவில்லையானால் உலகம் நிலையாது ஒழிந்து போம். உலகிற்கு உயிர் நிலையங்களாயுள்ள நலங்களை உயிரினங்கள் உணராது உழந்துவரினும் அவை முறையே தொடர்ந்து அருள் புரிந்து வருகின்றன. வானும் ஒளியும் வையம் வாழ அருள்கின்றன.

இவ்வாறு எவ்வழியும் எல்லாம் செவ்வையாய் இயங்கி வருதலால் இவற்றை நெறிமுறையே இயக்கி அருளுதற்கு வல்லான் ஒருவன் நலமா இருக்க வேண்டும் என்பதை மனிதனுடைய அறிவு உறுதியா முடிவு செய்துகொண்டது.

காற்று கண்ணுக்குத் தெரியாது; ஆயினும் மரம் கொடி செடிகள் அசைவதைக் கண்டு அது உண்டு என்று மனிதன் யூகித்துக் கொள்கிறான். யூகம் உயிரின் உயர் இயல்பாயுளது

காட்சியால் நோக்கிக் கருத்தால் ஓர்ந்து அனுபவத்தால் தேர்ந்து தெளிகிறான். தான் தெளிந்ததைப் பிறரும் தெரிந்து தெளிய உரிமையோடு உணர்த்தியருள்கின்றான்.

உடலின் தொழிலால் உயிர்உண்மை உணர்வாய்
நாற்றம் நுகர்ந்து நறுமலர் காண்பாய்
ஆற்றும் அசைவால் காற்றினை அறிவாய்
பொங்குதீ யுண்மை புகையால் தெரிவாய்
மண்டபம் கண்டு மயன்உளல் துணிவாய்
பிள்ளையை நோக்கிப் பெற்றவள் உண்டுஎன
உள்ளம் துணிந்தே உறுதிமீக் கொள்வாய்
கண்ட மட்கலம் காணாக் குலாலனை
உண்டுஎனக் காட்ட உணர்வுகொண் டுறுவாய்
வெளியே தெரிந்த வெமபுகை நோக்கி

உள்ளே ஒருதீ உளதுஎனத் தெளிவாய்
நீர்நிறை கூவம் நேரே காணின்
ஓர்மகன் அகழ்ந்ததை ஓர்ந்து கொள்வாய்
விளைபயிர் நிலையை விழியால் அறியின்
உழவன் ஒருவன் உளன்என ஓர்வாய்
இன்ன நிலைகள் இன்னவாறு உணர்தல்போல்
உலக இயக்கம் ஒருமுதல் உண்மையை
நலனுற உணர்த்தும் நயம்நீ தெளிந்து
கலக மயக்கம் களைந்து
அலகில் இன்ப அமைதியை அடைக.

இதன் பொருளை ஓர்ந்து உணர்ந்து பரம் பொருளைத் தேர்ந்து தெளிந்து சிறந்து உயர்ந்து கொள்ள வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உளன் என நம்புவதால் மனிதனுடைய உள்ளம் உறுதிநலங்களை நாடி உயர்ந்து கொள்கிறது. தெய்வ சிந்தனை திவ்விய நிலையில் உயர்த்துகிறது. எண்ணம் உயர மனிதன் எவ்வழியும் உயர்கிறான்.

தெய்வம் ஒன்றே.

எங்கும் நிறைந்து என்றும் உள்ள பொருள் ஒன்றே. அதற்கு மக்கள் இட்டுள்ள பெயர்கள் பல. தேசங்கள் தோறும் பாஷைகள் தோறும் வேறு வேறு பேர்களைச் சூட்டி மாந்தர் அதனைப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

சீவான்மா அன்புரிமையோடு கருதி வரும் அளவு பரமான்மா அருள் புரிந்து அதன்பால் ஒளி வீசிவருகிறது.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடுனத்த இடம் என்பது பழமொழி. தன்னைத் தழுவி எடுத்தவரை இளங்குழவி ஒட்டிக் கொள்ளும்; அதுபோல் உள்ளம் உருகித் தன்னைக் கருதுகின்றவரை இறைவன் இயல்பாமருவிக்கொள்கிறான்.

அன்பினில் விளைந்த ஆரமுதே! என்று ஈசனை மாணிக்க வாசகர் இவ்வாறு ஆர்வத்தோடு கூறியிருக்கிறார். இந்த அனுபவ வாசகம் நுணுகி ஓர்ந்து இனிது சிந்திக்கத்தக்கது.

பாண்டிய மன்னர் தருமநீதி யுடையவர்; தன் உயிரைப் போலவே மன்னுயிர்களை நன்னயமாப் புரந்து வந்தவர்; சிவபெருமானிடம் பேரன்பு பூண்டவர்; அரசியல் முறைகளிலும் அறிவியல் துறைகளிலும் யாதொரு குறையும் நேராதபடி இறைவனைக் கருதியே எவ்வழியும் தொழில் புரிந்து வந்துள்ளனர். நிலவணிந்த நின்மலனைத் தம் குல தெய்வமாக் கொண்டாடி யாண்டும் பேணியிருக்கின்றனர்.

உழுவலன்போடு வழுதி மன்னர் இங்ஙனம் தொழுது வந்தமையால் அவருடைய கல்விக் கழகத்தில் பரமன் பிரியமாய்த் தலைமை தாங்கி நிலையா அருள் புரிந்து வந்தான்.

இறைவன் வாலறிவன் ஆதலால் நூலறிவாளரோடு உரிமையாய்க் கூடியிருந்து சங்க நூல்களை நன்கு ஆய்ந்து தண்ணளி புரிந்து எண்ணரிய ஆடல்களை இசைத்தருளினன்.

"கண்ணுதல் கடவுள் அண்ணலங் குறுமுனி
முனைவேல் முருகன் என இவர் முதலிய
திருந்து மொழிப்புலவர் அருந்தமிழ் ஆய்ந்த
சங்கம் என்னும் துங்கமலி கடல்" (சங்கநிலை)

கண்ணுதல் கடவுளும் முருக வேளும் தலைமைப் புலவராய் வீற்றிருந்தமையை இது விளக்கியுள்ளது. தமிழ் மொழி தெய்வ ஒளிகளில் திவ்வியமாய் வளர்ந்து வந்துள்ளது; அவ் வுண்மையை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும்
பெருமலை பொடித்த பொருவரு முருகனும்
உரிமையின் மருவி ஒளிபுரிந் திருந்த

செந்தமிழ்க் கழகம் முந்தமிழ் தென்ன
வந்து விளைந்த மதியுயர் கலைகளை
வாரி விழுங்கி வாரி என்னும
பேரியல் துலக்கிப் பெருகிப்
பாரியல் துலங்கப் பரவி யின்றுளதே.

சிவபெருமான் தமிழ்ச் சங்கத் தலைவனுயிருந்து கலை வளர்த்துள்ள காட்சியை இங்கே கண்டு மகிழ்கின்ருேம். அரிய இனிய அமுதங்கள் என அறிவு நலங்கள் பெருகி யிருந்த சீரிய நூல்களை எல்லாம் வாரியில் இழந்து தமிழர் மறுகியுள்ளனர். இந்த மறுக்கம் பண்டைத் தமிழ் மக்களி டம் பெருக்கமாய்ப் பெருகியிருந்தது; தமிழின் அருமையை ஒரு சிறிதும் அறியாத இன்று அது அருகிப் போயது. கண் இருந்தவர் கண்ணேடி இரங்கினர்; அதனை இழந்தவர் யாதும் கவலாமல் ஏதும் தெரியாமல் உவந்து திரிகின்ருர்.

வாலறிவனுய் யாவும் அறிய வுரிய மேலான பரமன் தமிழ் மொழியைச் சாலவும் விழைந்து தனது இயல்பான அருவ நிலையை ஒருவி அழகிய உருவனுய் வந்து புலவர் பெருமான் என அமர்ந்து கலைகளை ஆய்ந்து கழகத் தலைவன் என்று உலகம் புகழ ஒளிபுரிந்து இருந்த நிலைமையை எண்ணி யுணர்வார் எவரும் தமிழின் புண்ணிய நீர்மையையும் புனித நிலையையும் எண்ணி மகிழ்ந்து இன்பம் மீதூர்வார்.

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.
(திருவிளையாடல், நாடு, 57)

தமிழின் மகிமையைப் பரஞ்சோதி முனிவர் இவ்வாறு செவ்வையா இனிது விளக்கியிருக்கிருர். சிவபெருமான்

தமிழ் மொழியில் உவகையாய் உரிமை கொண்டுள்ள அருமையைக் கருதி யுணரும்தோறும் பெரிதும் வியந்து வருகிறோம். உலகமுதல்வன் கழகமுதல்வன் என நிலவினான்.

பண்டிருந்த தமிழ்ச்சங்கம் பரமனருள்
ஒளிவழியே பல்லாண் டோங்கி
மண்டுபுகழ் ஒளிவீசி மதிநூல்கள்
பலபயந்து மகிமை தோய்ந்து
எண்டிசையும எவ்வழியும் இரவினனத்
தனிநிலையில் இனிது லாவிக்
கண்டிருந்த மாட்சியினைக் காட்சியால்
காணுவார் கதிமுன காண்பார்.

இதனை ஈண்டு உரிமையோடு கருதி யுணர வேண்டும்.

அந்தமும்ஆதியும் இல்லாத அந்தப் பரமபதி சேந்தமிழ்க் கவிஞன் என்னும் பேரைப் பெறப் பேராவல் பூண்டுள்ளார். அந்த ஆரா ஆர்வத்தை ஓர்ந்த பெரியோர்கள் உரிய மொழியோடு சேர்த்துத் தண்டமிழ்ப் புலவன், பசுந்தமிழ்ப் பாவலன், அருந்தமிழ் அறிஞன், பெருந்தமிழ்க் கவிஞன், தீந்தமிழ் வேந்தன், சேந்தமிழ்த் தெய்வம், என இந்தவாறு சிவபெருமானைச் சிறப்பாத் துதித்துப் போற்றி வரலாயினர்.

செந்தமிழ்த்திறம் வல்லிரோ?
அந்தி வானமும் மேனியோ? (தேவாரம்)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை இந்தவாறு உரிமையோடு வினவி யிருக்கிறார். எல்லாம் வல்ல அவரைத் தமிழில் வல்லவர் என்றது இந்த மொழியில் அந்த மூர்த்தி கொண்டிருக்கும் உறவுரிமையை உணர்த்தி நின்றது.

"குழலும் யாழும் அமிழ்தும் புகுத்த
பவளக் கடிகையில் தவளம் நிரைத்தொட்டத்
துவர்வாய்ப் பானகை அணங்கு அணங்குறுத்த

அகலத்து அரும்பிக் குவீஇக் கனன்ற
வார்பயன் நிறைத்த இருதனம் சிவண
வானீர் தலைப்பட்டு ஒருபிறைக் கண்ணிகொள்
பாசடை முக்கட் பசுங்கொடி கிளைத்திங்கு
ஆலவாய்ச் செய்க்கண் அமர்செங் கரும்பு
தனது அருள்விளைவில் ததும்பின இரண்டே;
சாறு சுவைஎனக் கூறநின்று இட்ட
ஆரியம் தீந்தமிழ் எனமனார் அவையே
ஓரிரு மகாரின் பேறுகண்டு அவற்றுள்
கன்னியந் தமிழின் செவ்வியைப் புணர்ந்தோய்!"

(பொய்கையார்)

இதில் வந்துள்ள உருவக நிலைகளை ஊன்றி உணர்பவர் அரிய பல உண்மைகளை ஓர்ந்து தெளிவர். கலையின் சுவையில் அறிவு மணம் கமழ்ந்து இனிய குணம்பெருகி வருகிறது.

பசுங்கொடி படர்ந்த ஒரு செங்கரும்பு மதுரை வயலில் வளர்ந்து நின்றது; அதிலிருந்து பாகு பாகமாய் வெளியே வந்தது; சாறும், சுவையுமாய் அது வேறு பிரிந்தது; முன்னது ஆரியம்; பின்னது தமிழ்; இந்த இனிய மொழியின் சுவையை நுகர்ந்து உவகை மீதூர்ந்தமையால் இதனையே இரவும் பகலும் பிரியாமல் மருவி இன்ப நுகர்வில் திளைத்து இறைவன் களித்துள்ளான் என இது தெளித்துள்ளது. இதில்குறித்துள்ள குறிப்புகள் கூர்ந்துசிந்திக்கத்தக்கன.

விரிந்து பரந்துள்ள இந்த நாவலந் தீவில் இரண்டு மொழிகளே தலை சிறந்துள்ளன. அவை ஆரியம், தமிழ் எனப் பேர் இசைந்திருக்கின்றன. நூலறிவு தோய்ந்த மொழிகள் யாவும் வாலறிவனுடையன ஆதலால் மொழிகளுக்கு அவனே மூலமுதல்; அந்த முதல்வன் தமிழையே தன் சொந்த உரிமையாக முந்த வைத்துச் சிந்தை மகிழ்ந்

துள்ளான் ஆரியத்துக்கு யாதொரு அடையும் கொடாமல் தமிழைத் தீந்தமிழ் என்று விசேடித்து விளம்பியிருப்பது இதன் இனிய நீர்மையைக் கூர்மையா உணர்ந்து கொள்ள வந்தது. இனிமை நிறைவால் இறைமை எய்தியது.

செந்தமிழோடு ஆரியனைச் சீரியானை.
முத்தமிழும் நான்மறையும் ஆனான். (தேவாரம்)

திருநாவுக்கரசு நாயனார் இறைவனை இவ்வாறு குறித்திருக்கிறார். இன்ப மயமான பரமன் உருவமாய்த் தமிழ் மருவியுளது. நாதப்பிரமம்என இதனை ஓதிஉணர்த்தியுள்ளார்.

தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாட்டி நாட்டானை.
(திருவாசகம்)

தமிழைக் காத்துவருகிற பாண்டியநாட்டான் எனச் சிவபெருமானை மாணிக்கவாசகர் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

தமிழ் மொழிக்கும் சிவபரம் பொருளுக்கும் உள்ள உறவுரிமைகளை இவற்றால் உணர்ந்து கொள்கிறோம். தென்னாடும் தென் மொழியும் சிவபெருமானுடைய தனியுரிமைகளாய்எந்நாளும் இனிதமைந்து இசை பெற்றுவந்துள்ளன.

வழிமுறையே தன்பால் பேரன்புடைய பாண்டிய மன்னர் பெரிய புண்ணிய சீலராயும் இருந்து வந்தமையால் புண்ணிய மூர்த்தியான பரமன் அவர் கருதிய படியெல்லாம் கருணை புரிந்துவந்தார்: அவ்வளவோடு அமையாமல் முடிவில் அந்தஅரசகுடியில் தானும்ஓர் அரசனாய்த் தோன்றினார்.

சவுந்தர பாண்டியன்.

ஈசன்பால் நேசமாய்ப் பூசனை புரிந்து வந்தமையால் மலயத்துவசன் என்னும் பாண்டிய மன்னனுக்கு உமாதேவி மகளாய்த்தோன்றினாள். தடாதகைப் பிராட்டி என்னும் பே

ரோடு பாண்டி நாட்டை ஆண்டாள். கன்னியாய் இருந்து அரசு புரிந்தமையால் இத்தேசம் கன்னிநாடு என மன்னி நின்றது. அதிசய நிலையில் விளங்கியிருந்த அந்த அரசிளங் குமரியை மணந்து கொள்ள விழைந்து இறைவன் வழுதி வேந்தனுய் விழுமிய நிலையில் வந்தான். சவுந்தரபாண்டியன் என்னும் பெயரோடு விளங்கி அரசியை மணந்து வரிசை யோடு அரசு புரிந்தான். அரிய பலவளங்கள் பெருகி வந் தன; உரிய ஒரு மகனும் பிறந்தான்; உக்கிரகுமாரபாண்டியன் என்று பேர் பெற்ருன். அத்திருமகன் முருகன் அமிசம். தாயும் தந்தையும் முன்னதாகவே மன்னர் குலத்தில் மருவி யுள்ளமையால் அச்சேயும் உரிமையோடு வந்து குமாரனுய்த் தோன்றினன். தென்னுடு சிறந்து விளங்கியது; எந்நாடும் ஏத்தி நின்றது; பொன்னுடும் இதனைப் புகழ்ந்து வந்தது.

பிறவா யாக்கைப் பெரியோன் என்று பேர் பெற்றிருந்த பெருமான் மாறனுய் மாறி இவ்வாறு உறவுரிமைகளோடு ஒளி பெற்றிருந்தது அம்மரபின்மகிமையை விளக்கிநின்றது.

பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
உடல்உயிர் என்ன உறைதரு நாயகன்
கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
ஐவாய்க் காப்புவிட்டு அணிபூண் அணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து
வழுதி ஆகி முழுதுலகு அளிக்கும்
பேரருள் நாயகன். (கல்லாடம்2)

முழுமுதல் பரமன் வழுதியாய் மாறி உலகை ஆண் டுள்ள நிலையைக் கல்லாடர் இவ்வாறு எழுதிக் காட்டியிருக் கிருர். கடுக்கை=கொன்றை. ஐவாய் என்றது பாம்பை. உரககங்கணன் என்னும்பழையபேர் இங்கேநீங்கிப்போயது.

கொன்றை மலரை மாற்றி வேப்பமாலை சூடினன்; அரவணியை அகற்றி அரிய மணியணிகள் பூண்டான்; விரிந்த சடையை நீக்கிச் சிறந்த முடியைப் புனைந்தான்; மாட்டுக் கொடியை மாற்றி மீனக் கொடியை ஏற்றினன்.

முன்னம் ஆண்டியாய் இருந்த அவன் பாண்டிய மன்னன் ஆனபோது இவ்வாறு வேண்டிய கோலங்களைப் பூண்டு கொண்டான். பழைய நிலைமையையும், புதிய தலைமையையும் அதிசயமாய் விழியூன்றி இங்கே விழைந்து காணுகிறோம்; விமலனை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து பேணுகிறோம்.

சோமனைத் தலையில் சூடிப் பண்டு சந்திரசேகரனுயிருந்த அந்த வாமன் அன்று சோமசுந்தரபாண்டியன் என நாமம் பூண்டு மதுரையில் அமர்ந்து மாநிலம் புரந்துள்ளான்.

சோமசுந்தரப் பெருமான்.

சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பம்
தொண்டைமுடித்து விடநாகக் கலன்அகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயல்எடுத்து வழுதிமரு
மகனுகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம். (1)

தடாதகைப் பிராட்டி.

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோல் ஓச்சி
முழுதுலகும் சயம்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்

தொழுகணவற்கு அணிமணமாலிகை சூட்டித்
தன்மகுடம் சூட்டிச் செல்வம்
தழைவுறுதன் அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்பாம். (2)
(திருவிளையாடல்)

பரமேசுவரனும் பார்வதியும் பாண்டிய மன்னர் குடியில் தோன்றி அரசாண்டுள்ள நீர்மையை இவை சீர்மையா விளக்கியுள்ளன. பெண்ணரசியோடு மண்ணரசையும் ஒருங்கே பெற்று மன்னர் மன்னவனாய் மன்னி நின்று முன்னவன் புரிந்த அருளாடல்கள் பல ஆதலால் அவை யாவும் காவிய ஓவியங்களா மேவிச் சீவியங்கள் காணவந்தன.

ஆட்சி முறைகளும் அரசியல் நிலைகளும் துறைகள் தோறும் சிறந்துவிளங்கி மாட்சி மிகுந்து வந்துள்ளன.

கறைநிறுத்திய கந்தர சுந்தரக் கடவுள்
உறைநிறுத்திய வாளினால் பகையிருள் ஒதுக்கி
மறைநிறுத்திய வழியினால் வழுதியாய்ச் செங்கோல்
முறைநிறுத்திய பாண்டிநாட்டு அணியது மொழிவாம்.

சுந்தர பாண்டியன் ஆண்டு வந்துள்ள நிலைமை தலைமைகளை இதனால் உணர்ந்து கொள்கிறோம். துன்ப இருள் நீங்கி இன்ப ஒளி ஓங்கி மன்பதை யாண்டும் மகிழ்ந்து வாழ முன்பன் முறை புரிந்து வந்தமையால் தென்னாடு எந்நாட்டினும் சிறந்து பொன்னாடு எனப் பொலிந்து விளங்கியது. கந்தரம்=கழுத்து. வந்துள்ளவன் இன்னான் என்பதைச் சிந்தனை செய்து அந்தரம் தெரிய இந்தக் கந்தரம் இங்கே சுந்தரனோடு தொடர்ந்து தோய்ந்து உரிமையாய் வந்தது.

தேவர் முதல் யாவரும் உய்ய ஆலம் உண்டு ஆண்டு நீலகண்டனாய் நின்றவன் ஈண்டு அரச கோலம் பூண்டு இஞ்ஞாலம் ஆள மூண்டு நீண்டு நலமாய் வந்துள்ளான்.

எல்லா உலகங்களையும் என்றும் தனக்கு உரிமையாக உடைய ஆண்டவன் ஈண்டு ஒரு பாண்டிய மன்னனாய்த் தோன்றி இந்நாட்டை ஆண்டருளிய அருமையை நூலோரும் மேலோரும் சால்போடு துதித்து வந்துள்ளனர். சில பொருள் மொழிகளை அயலே நயமாக் காண வருகிறோம்.

விண்அரசும் பிறஅரசும் சிலர்எய்த விடுத்துஒருநீ
பெண்அரசு தரக்கொண்ட பேர்அரசு செலுத்தினையே! (1)

தேம்பழுத்த கற்பகத்தின் நறுந்தெரியல் சிலர்க்கு அமைத்து
வேம்பழுத்து நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே! (2)

வான்ஏறும் சிலபுள்ளும் பலர்அங்கு வலன்உயர்த்த
மீன்ஏறே ஆன்ஏறும விடுத்துஅடிகள் எடுப்பதே! (3)

மனவட்டம் இடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டம் தினவட்டம இடக்கண்டு களிப்பதே! (4)

விண்ஆறு தலைமடுப்ப நனையாநீ விரைப் பொருநைத்
தண்ஆறு குடைந்துவையைத் தண்துறையும் படிந்தனையே! (5)

பொழிந்துஒழுகு முதுமறையின் சுவைகண்டும புத்தமுதம்
வழிந்துஒழுகும் தீந்தமிழின மழலைசெவி மடுத்தனையே! (6)

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்குஎன்று அறியேமால் திருமுடிமண் சுமந்ததே! (7)

அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னைஅவள்
தரும்பிட்டுப் பிட்டுஉண்டாய் தலைஅன்பிற் கட்டுண்டே. (8)

முலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்துஎன்நீ வளைகொண்டு சுமந்ததே? (9)

ஊன்வலையில் அகப்பட்டார்க்கு உட்படாய் நின்புயத்துஓர்
மீன்வலைகொண் டதும்ஒருத்தி விழிவலையில் பட்டன்றே. (10)

(மதுரைக்கலம்பகம்)

பரமபதியா யிருந்த சிவபெருமான் பாண்டி நாட்டின்

பதியாய் வந்து மதுரையில் பிரியமாய் மருவியிருந்து அரிய பல அதிசய ஆடல்களைச் செய்துள்ளான்; தெய்வீகமான அந்த உண்மைகளை இவை சுவையாக் காட்டியுள்ளன. கலையறிவோடு கலந்து வந்துள்ள நிலைகளை ஓர்ந்து உணர்பவர் உண்மைகளைத் தேர்ந்து உள்ளம் உவந்து வியந்து திகழ்வர்.

"விண்ணுலகில் இந்திரன் பிரமா முதலானவர்களுக்குப் பெரிய அரச பதவிகளை நல்கி அருளுகிறநீ இம் மண்ணுலகில் வந்து ஒரு பெண்ணரசியிடம் அரசைப் பெற்றுப் பாண்டி நாட்டை ஆண்டனையே ஆண்டவா! உனது செயல்கள் யாவும் விசித்திர விநோதங்களா யுள்ளன; அற்புதமான கற்பக மலர்களைப் பிறர்க்குக் கொடுத்துவிட்டு அற்பமான வேப்பம் பூ மாலையைச் சூடிக் கொண்டாய்; இடிக்கொடி அன்னக் கொடி கருடக் கொடிகளைத் திருமால் முதலானவர்களுக்கு அளித்தநீ மீனக் கொடியை எடுத்துக் கொண்டாய்; வேதங்களைக் குதிரைகளாக வுடையநீ மிருகங்களைப் பரிகளாக மருவி நின்றாய்; கங்கை நதியைத் தலையிலுடைய நீ அதை ஒதுக்கி வைகை நதியை உரிமையாப் படிந்தாய்; வேத கீதங்களைக் கேட்டு மகிழ்ந்த நீ இனிய தமிழின் சுவைகளை மிகவும் விரும்பி நுகர்ந்து மகிழ்ந்தாய்; பிட்டுக்கு மண் சுமந்தாய்; வளையல் விற்றாய்; வலையனாய் மீன் பிடித்து ஒரு வலைச்சியை மணந்தாய்! என்னே உன் திருவிளையாடல்!" என்று இந் நூலாசிரியர் ஈசனோடு பாச உறவு கொண்டாடிப் பேசியிருக்கும் அன்புரிமைகள் இன்ப நலங்களை விளைத்து வருகின்றன. குறித்துள்ள குறிப்புகளைக் கூர்ந்து நோக்கிப் பொருள் நிலைகளை ஓர்ந்து கொள்ள வேண்டும்.

புத்தமுதம் வழிந்து ஒழுகும் தீந் தமிழின்
மழலை செவி மடுத்தனையே!

என்றதனல் தமிழ் மொழியின் இனிய சுவையையும், அதனை இறைவன் மறையினும் விழைந்து வியந்து நுகர்ந்திருக்கும் நிலையையும் நேரே தெரிந்து கொள்கிறேம். வேத கீதங்களினும் தமிழின் மதுர நாதத்தை அதிகமா உவந்தமையால் மதுரை நாயகனய் நாதன் ஈங்கு ஆதரவாய் வர நேர்ந்தான் தென் மொழி முன்னவன் தன் மொழியாயுள்ளது.

தமிழின் அரிய பண்பாடுகளையும் பெரிய இன்ப நலங்களையும் விரும்பியே தன் குடுபத்தோடு ஆண்டவன் பாண்டிய மன்னனய் ஈண்டு வந்து ஆட்சி புரிந்திருக்கிறன்.

தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈனருள்
　　தடாதகா தேவிஎனறு ஒருபேர்
தரிக்கவந் ததுவும, தனிமுதல் ஒருநீ
　　சவுந்தர மாறன் ஆனதுவும,
குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பேர்
　　கொண்டதும், தண்தமிழ் மதுரம
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
　　கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்?
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் புளிக்கும்
　　பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பாணிலா முன்றில் தூநிலா முத்தின்
　　பந்தரில் கண்இமை ஆடாது
அமரர்நா டியரோடு அம்மனை ஆட
　　ஐயம்நுண் நுசுப்பள வல்லஎன்று
அமரரும மருளும் தெளிதமிழ்க் கூடல்
　　அடலரா அலங்கல் வேணியனே!

(மதுரைக் கலம்பகம், 93)

உலக மாதாவாகிய உமாதேவியும், தனி முதல் தலைவ

ஞன சிவபெருமானும், குமரக் கடவுளும் தடாதகைப் பிராட்டி, சவுந்தர பாண்டியன், உக்கிர குமார பாண்டியன் என முறையே பேர் பெற்றுப் பாண்டிய மன்னர் குடியில் மானுடராய்த் தோன்றியது தமிழ் மொழியின் விழுமிய இனிமையை நன்கு நுகரலாம் என்ற ஆசையாலேயாம் என ஈசுரன் வரவை இப் பாசுரம் இனிது குறித்துள்ளது.

தமிழின் மதுரத்தையும் மகிமையையும் தகவா விளக்கி யுள்ள இக் கவி அழகும் சுவையும் வளமா மருவி வந்துளது.

தண் தமிழ் மதுரம் கூட்டு உண எழுந்த வேட்கையே.

அண்டரும் அறியமுடியாத அரிய நிலையில் இருந்தவனை இந்த மண்டலத்துக்குக் கொண்டு வந்துள்ளது இங்ஙனம் கண்டு தெளிய நேர்ந்தது. கோழிதமிழ், தெளி தமிழ் என்றது மொழியின் விழுமிய கொழுமையும் மேவிய செழுமையும் வியத்தகு தெளிவும் நயத்தகு தேசும் நன்கு தெரியநின்றது.

சாமகானப் பிரியன் ஆதலால் தமிழின் இனிய ஞான கானத்தை அவாவித் தமிழ் நாட்டை நேரே அடைந்தான்.

கடுக்கவின்பெறு கண்டனும் தென்திசை நோக்கி
அடுக்கவந்துவந்து ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்கவும்தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ.
[திருவிளையாடல்]

கண்டம் கரிய சிவபெருமான் முதலில் தில்லைக் கனக சபையில் ஆடினன்; அதன்பின் மெல்லத் தென்திசை வந்து மதுரை வெள்ளியம்பலத்தில் ஆடினன்; பின்பு குற்றாலம் போய்ச் சித்திர சபையில் ஆடினன்; வெளியே நேர்ந்த இந்த ஆட்டங்களுக்கு எல்லாம் உள்ளே நாட்டங்கள் உள்ளன; அவை எவை? சுவையான தமிழைச் செவியில்

மாந்தி, மந்த மாருதமான தென்றலை நன்று அனுபவித்து அகமும் புறமும் இனிது மகிழலாம் என்று கருதியே யாம்.

தமிழின் சுவை ஆண்டவனை ஆனந்தக் கூத்தாடச் செய்கின்றது. தமிழ் வேந்தன் என்று பாண்டியன் பெயர் பூண்டான்; தமிழ்ச் சோக்கநாதன் என்று ஆண்டவனும் நீண்டு நின்றான். இம் மொழியின் இனிய கவிகளின் சுவைகளில் அப் பெருமான் உளம் மிக உருகி அரிய அருளாடல்கள் புரிந்துள்ளான்; ஆட்டுக்கு உரிய நாயகன் பாட்டுக்கு உருகி யிருக்கும் அவ்வுண்மைகளைச் சரிதங்கள் காட்டியுள.

பாட்டுக்கு உருகும் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகும்மெய்ந் நாணும்விட்டாள்; வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாள்என்செய் வாள்அனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்குளன் குலக் கொழுந்தே.

(செவிலி)

தன் காதலனைக் கருதி உருகிய ஒரு காதலி நிலையை அவளுடைய செவிலித்தாய் இவ்வாறு நயமாக் கூறியிருக்கிறாள். பாட்டுக்கு உருகும் தமிழ்ச் சோக்கநாதர் என இறைவனைக் குறித்துக் காட்டியிருக்கும் இது கூர்ந்து காணத்தக்கது. தமிழ்ப் பாட்டில் அவருக்கு உள்ள பிரியமும் ஆர்வமும் உருக்கமும் உருகும் என்றதனால் தெரிய வந்தது.

தமிழால் வைதாரையும் வாழ வைப்போன்.

(கந்தர் அலங்காரம் 22)

முருகப் பெருமானை அருணகிரிநாதர் இவ்வாறு உல்லாச விநோதமா உவந்து கூறிப் புகழ்ந்து துதித்துள்ளார்.

தமிழால் போற்றிப் புகழ்ந்து வாழ்த்த வேண்டாம்; வைதாலுமே போதும் உங்களுக்கு அப் பெருமான் உயர்ந்த வாழ்வை அளித்தருளுவார் என்றதனால் தமிழ்

மொழியில் இந்தப் பிள்ளைக்கு இருக்கும் பிரியம் தெரிய நின்றது. இவ்வுரிமை நம் உள்ளத்தை உருக்குகிறது.

தமிழை வேட்டே கூட்டோடு இங்கு வந்துள்ளமையால் அந்தத் தந்தை போலவே இந்த மைந்தனும் செந்தமிழ் மொழியில் அந்தமில் இன்பத்தை அனுபவித்து வருகிறார்.

குழகன் குகன் வேள் அழகன் குமரன் கழகம் மருவிக் கருதி விழைவாப் பழகும் தமிழ் போல் இனிதோ அமிழ்து? என வியந்து வினவி வருவது வியந்து சிந்திக்க வுரியது.

மனிதன் பேசி வருகிற மொழியைத் தெய்வம் ஆசையோடு பேணிவருவது அதிசய நிலையாக் காண வருகிறது. அறிவின் ஒலி அறிவானந்தமான பரமனுக்குத் தனியுரிமை ஆகிறது; ஆகவே அதன் இனிமையில் இன்பம் உறுகிறான்.

முதல் சங்கம் தென் மதுரையில் இருந்தது. ஆதலால் தென்னவர் எனப் பாண்டிய மன்னருக்கு அன்னவகையில் அன்ன நாளே அன்னவாறு நன்னயமாப் பேர் அமைந்தது.

ஆதிமுதல்வனான இறைவன் அந்த ஆதிச் சங்கத்தில் இருந்தே தமிழை ஆதரித்து அருளினான். பின்பு மூன்றும் சங்கத்தில் நேரே அரசன் ஆய் அந்த மரபில் வந்து அவதரித்தான். அவதார முறை அதிசய நிறையாய் நிலவியுள்ளது.

முன்னவன் நிலையிலும் மன்னவன் நிலையிலும் இறைவன் என்ற பெயர் அவனுக்குத் தனியுரிமையாய் அமைந்தது. இறைமை தமிழ்த் துறையில் முறைமை தோய்ந்து முதன்மைவாய்ந்து நிலைமை தலைமைகளை நேரே விளக்கி நிற்கிறது.

இறை என்னும் பெயர் கடவுளுக்கும், அரசனுக்கும் பொதுவாய் இசைந்துள்ளது. முன்னது இயலை விளக்கி எழுந்தது; பின்னது செயலை நோக்கி வந்தது. எங்கும் தங்கி

யிருப்பவன் எனக் கடவுளையும், எதையும் நாடிக் காப்பவன் என அரசனையும் அந்நாமம் நேமமாத் துலக்கியுள்ளது. இயல் செயல் என்னும் இந்த இருவகை நிலையிலும் இறைவன் என்ற பெயர் இப்பெருமானுக்கு உரிமையாய் அமைந்தது. அந்த உரிமையில் கருமம் விரிந்து, தருமம் சுரந்து வர நாடும் மொழியும் நீடிய ஒளியோடு நெடிது நிலவியுள்ளன.

எல்லாம் வல்லனாய் யாவும் இயல்பாக உடைய பரமன் தமிழ் மொழியைத் தனி யுரிமையோடு பேணியிருப்பது அதிசய வியப்பை விளைத்து வருகிறது.

அலகிறந்தனை தலைசிறந்தனை
அருள்சுரந்தனை இருள் துரந்தனை
உலகு அளித்தனை தமிழ்தெளித்தனை
ஒன்றும் ஆயினை பலவும் ஆயினை! (காசிக்கலம்பகம்)

உலகைப் பாதுகாத்து அருளுகிற தனி முதல் பரமன் தமிழைப் போற்றி வந்துள்ளதை இது காட்டியுள்ளது. இதனால் இம் மொழியின் விழுமிய நிலைகள் தெளிவாகி நின்றன. தமிழ் தெளித்தனை என்றது இயலைத் துலக்கி, இலக்கணம் இயற்றிக் கவிகள் பாடிச் சுவைகளை யூட்டித் தமிழ்மொழியைப் பல வகையிலும் தெளிவு படுத்தி உலகில் ஒளிபெறச் செய்துள்ள நிலைமைகளை நினைந்து தெளியவந்தது.

பிள்ளைமதி சூடும் பெருமான் அருள்நலனைக்
கொள்ளைகொண் டுள்ள கொழிதமிழை—உள்ளம்
கருதி வரினே கருதரிய இன்பம்
பெருகி வருமே பெரிது.

இதன் பொருளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

மூன்ருவது அதிகாரம்.

இறையனுர் அகப்பொருள்.

சங்கப்புலவர் தலைவராயிருந்த இறைவனுர் இந்த நூலைச் செய்திருக்கிருர். அவர் பெயரால் இயங்கி வருகிறது; இது அறுபது சூத்திரங்கள் அமைந்தது; அகப்பொருளை விரித்து உரைப்பது: அழகிய ஒரு தருண மங்கையும் அறிவு நலங் கனிந்த விழுமிய ஒரு குமரனும் ஒருநாள் இயல்பாய் நேரே கண்டனர்; காணவே இருவரும் ஒருங்கே காதல் மீக்கொண்டனர்; பருகு காதலோடு ஒருவரை ஒருவர் பிரியமாய் விரும்பவே உருகிய அன்போடு மருவி மகிழ்ந்தனர். கொடுப்பாரும் அருப்பாரு மின்றித் தாமாகவே உவந்துவிழைந்து இவ்வாறு கலந்து மகிழ்ந்தவர் பின்பு உலகம் அறியமணந்து அலகிலின்பங்களை நுகர்ந்து மனை வாழ்க்கை புரிந்தார். அங்ஙனம் புரிந்து வருங்கால் தலைவன் பொருள் முதலியன ஈட்டி வரும் பொருட்டு அயலே பிரிந்தான்; அந்தப் பிரிவில் தலைவி பெரிதும் மறுகியிருந்தாள்; காரியங்களை முடித்துத் தலைவன் மீண்டு வந்தான்; வரவே மழை கண்ட பயிர் போல் புயல் கண்ட மயில்போல் தலைவி உவகை மீதூர்ந்து அவனை இனிது பேணிஞள்; அதன்பின் உழுவலன்புடையராய்க் கிழமையோடு தழுவி இன்புடன் வாழ்ந்தார். அன்பு நலங்கனிந்த அந்த இன்ப வாழ்வுகளை இந்த நூல் இனிது விளக்கியுள்ளது.

திருக்குறள் போல் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிந்துள்ளமையால் இந்நூல் தமிழின் நீர்மை முழுவதும் சீர்மையாய்த் தழுவி வந்தது எனத் தனிச் சிறப்படைந்துள்ளது. இதற்கு நக்கீரனுர் சிறந்த உரை செய்திருக்கிருர்.

அன்பின் ஐந்திணைக் களவுஎனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர். (1)

களவு கற்புஎனக் கண்ணிய ஈண்டையோர்
உளம்நிகழ் அன்பின் உயர்ச்சி மேன. (இறையனார் 60)

முதலும் ஈறும் இவ்வாறு மருவி யுள்ளன.

அந்தமும் ஆதியும் அவ்வுனவ் வுந்நின்று அமலன்தந்த
செந்தமிழ் என்னும் திறம்காட்டி ஈதுஐந்திணை யகநூல்
வந்தன யாவும் வளர்அன்பின் மேனஎன் வாய்மைக்கன்றே
முந்தும் அன்பின் முதலாய் மேன என்று முடிந்ததுவே.

இது இந்த நூலின் நிலைமை நீர்மைகளைச் சீர்மையா விளக்கியுள்ளது. அமலன் தந்த செந்தமிழ் என்றது நூலாசிரியருடைய மேலான மகிமையைஉணர்ந்து கொள்ளவந்தது.

உலகியல் நிறுத்தும் பொருள்மரபு ஒடுங்க
மாறனும் புலவரும் மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்த வாக்கால்
அன்பின் ஐந்திணைஎன றுஅறுபது சூத்திரம்
கடல்அமுது எடுத்துக் கரையில் வைத்ததுபோல்
பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டி மற்றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்தமிழ்க் கடவுள்.
(கல்லாடம், 3)

இறைவன் செய்தருளிய நூலைக் குறித்துக் கல்லாடர் இவ்வாறு புகழ்ந்து போற்றியுள்ளார். கடலுள் இருந்து அமுதம் எழுந்ததுபோல் தமிழிலிருந்து இந்த இன்ப நூல் எழுந்துள்ளது. தேன்தமிழ்க் கடவுள் என இறைவனை உரிமையா இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

தென்னாட்டு மொழியாகிய தமிழில் இம் முன்னவன் பிரியம் கொண்டுள்ளமையால் தென்னவனாய் வந்து மன்ன

வனை அமர்ந்து பலவகையிலும் இம்மொழியைப் பேணி வருகிறான். அரிய ஒரு நூலும் செய்து தன் பெயரால் அதனை வெளியிட்டுப் பெரிய கவியாய் விளங்கினான்.

மறைமுதல் கிளந்த வாயால் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பில்பாடை அனைத்தும்வென்று ஆரியத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உள்நினைந்து ஏத்தல் செய்வாம்.

[சீகாளத்திப் புராணம்]

தம் பெயரை நாட்டி இறைவர் ஒரு இலக்கண நூல் செய்து தமிழ் மொழியையும் தம் பேரையும் சீரோடு துலக்கியிருக்கும் நிலையை இது நேரே விளக்கி யிருக்கிறது.

கடவுள் பாடிய நூல் எந்த மொழியிலும் இல்லை; அந்த மகிமையைச் செந்தமிழ் ஒன்றே அடைந்துள்ளது. ஆகவே தெய்வத் தமிழ் என்னும் திவ்விய மேன்மையை எய்தி நிற்கின்றது. அரியநிலைமை பெரியதலைமையாய் மிளிர்கிறது.

தமிழ்த் தெய்வத்தை ஏத்துவாம் என்று இந்தக் கவிஞர் போற்றியிருப்பது கடவுள் வாழ்த்து வகையோடு தொடர்பு கொண்டுமொழியின்ஏற்றத்தைத்தெளிவா விளக்கியுள்ளது.

கற்றதனால் ஆய பயன் எல்லாம் கடவுளை உரிமையோடு கருதி வருவதே யாம்: வாலறிவனை மருவி வரும் அளவே நூலறிவு சால்புறுகிறது. மருவாவிடின் விருதா வாகிறது.

கண் ஒளி யுடையது ஆயினும் கதிர் ஒளி இலையேல் அது யாதும் காணாமல் இளிவடையும்; அதுபோல் உயிர் உணர்வுடையது ஆயினும் உயர் பரமன் அருள் ஒளி இல்லையேல் இது மருளாய் மயங்கி இருள்வாய் இழிவுறும்.

கண்ணுக்குக் கதிர் ஒளிபோல் உயிர்க்குப் பரமன் ஒளி

புரிந்துள்ளார். அவ்வளவு பெரிய பேரறிவும் பேராற்றலும் உடைய இறைவன் தமிழ் மொழியில் இவ்வளவு பிரியமும் பேரன்பும் பெருகித் திவ்விய மகிமையை அருளி யிருக்கிறார்.

கவிஞன்.

மொழி அறிவு விழுமிய மகிமை யுடையது; பலதுறை களிலும் பரவி மனிதனுக்கு இது ஒளி புரிந்து வருகிறது. நிலைகளுக்குத் தகுந்தபடி பெயர்கள் அமைந்திருக்கின்றன.

புலவர் பண்டிதர் நாவலர் பாவலர் கவிஞர் என இன்ன வாறு நாமங்கள் நேமங்களாய் வந்துள்ளன. காரணங்கள் தோய்ந்து பேர்கள் பூரணமாய் வெளியே வந்திருக்கின்றன.

கலை அறிவை நலமாக வுடையவர்	புலவர்.
கலையின் பண்பாடுகளை நன்கு தெரிந்தவர்	பண்டிதர்.
கலையறிவோடு நயமாப் பேச வல்லவர்	நாவலர்.
கலைநிலை படியப் பாக்களைப் பாடுபவர்	பாவலர்.
கலையுணர்வின் சுவை கனியக் கவிகளை அருள்பவர்	கவிஞர்.

புலமை தலைமையாய் அமைந்திருந்தாலும் கவி இயற்றும் தகைமை நலமா அமையவில்லையானால் அந்தப் புலவன் சிறந்த நிலையில் உயர்ந்து விளங்கான். ஒருவனிடம் செல்வங்கள் நிறைந்திருந்தாலும் நல்ல பிள்ளைப் பேறு இல்லையாயின் அவன் எள்ளப்படுகிறான். அவ்வாறே சிறந்த கவித்தன்மை இல்லை ஆனால் அந்தப் புலவனும் இழிந்த நிலையில் நிற்கிறான்.

உலகம் நலமுற உணர்வு நலங்களை உதவித் தன் பேரைச் சீரோடு என்றும் நிலைநிறுத்துகிறவன் கவிஞனே; ஆகவே எவ்வழியும் அவன் திவ்விய நிலையில் சிறந்து திகழ்கிறான்.

The poets are liberating gods. (Emerson)

கவிஞர் சுதந்தர தேவதைகள் என இது குறித்துள்ளது.

மேல் நாடுகள் கவிஞர்களை எவ்வாறு மதித்து வணங்கி வருகின்றன என்பதை இதனால் உணர்ந்து கொள்கிறோம்.

கவி என்று சிவபெருமானுக்கு ஒரு பெயர்.

உயர்ந்த கவிகள் தெய்வத் திருவருள் மருவியுள்ளமையால் அவை மெய்யான பலன்களை அருளி வருகின்றன.

மாசில் பனுவற் புலவர் புகழ்புல
நாவில் புனைந்த நன்கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல். (பரிபாடல் 6)

மாசற்ற கவிஞருடைய நாவிலிருந்து வருகிற கவிதை போல மாறாத இனிமையோடு நீர் பரந்து பாய்ந்து உழவு முதலிய தொழில்களை வளமுறச் செய்தது என இது குறித்திருக்கிறது. நன்கவிதை என்றது நலம் தெரிய நின்றது.

சங்கத் தமிழ்க் கவிகள் வாழுகின்ற மதுரை அருகே மதுரமாய் ஓடுகின்ற ஆறு ஆதலால் கவிதையை அதற்கு உவமை ஆக ஆசிரியர் நல்லந்துவனார் இங்ஙனம் கூறியருளினார். வையை நீர் செய்யுள் நீர்மை போல் சீர்மையது.

பாடுகின்ற பனுவலோர்கள்
தேடுகின்ற செல்வமே! (தாயுமானவர்)

பாடுகின்ற கவிஞர் தேடுகின்ற செல்வம் எனச் சிவபெருமானை இவ்வாறு தாயுமானவர் பாடியுள்ளார். அன்பர்கள் பாடுகிற பாடல்களைக் கேட்டு இன்பம் மிக அடைவது இறைவன் பண்பாய் என்றும் மருவி வருகின்றது.

வேத மந்திரங்களைக் கொண்டு தன்னைப் பூசிப்பதினும் செந்தமிழ்க் கவிகளை வாசிப்பதே தனக்குப் பேரானந்தம் என்று பலமுறையும் சிவபெருமான் பேசியிருக்கிறார்.

4

மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.
[பெரிய புராணம்]

சுந்தர மூர்த்தி நாயனாரை நோக்கி ஆண்டவன் இவ்வாறு வேண்டியிருக்கிறார். நமக்கு அருச்சனை பாட்டே; நம்மைத் தமிழால் பாடு என்று இறைவன் இப்படி ஆவலோடு விரும்பி இருப்பதால் தமிழ் மொழிமேல் இவர் கொண்டுள்ள அன்பும் ஆர்வமும் உலகம் தெளிவா அறிய வந்தன.

செங்கண்மால் தடக்கையில் சங்கம் நாண
முள்தாள் தாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்
மலைமகள் தழுவ மனம்மகிழ் வோனே.
(நால்வர் நான்மணி)

மாணிக்க வாசகருடைய வாயால் தமிழ்ப் பாட்டைக் கேட்கும் பொருட்டு ஈசன் பட்டுள்ள பாடுகளைச் சிவப்பிரகாசர் இப்படி எடுத்துக் காட்டியிருக்கிறார். திருவாசகத்தை இறைவனே நேரே வந்து கையால் உவந்து எழுதினர்.

செய்யுள்போல் செய்த திருக்கோயில் உள்இருந்துஎம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி.
[திருவெங்கையுலா]

தமிழ்ச் செய்யுளே தனக்கு இனிய இருப்பிடமாக

என்றும் உவந்துள்ளவன் ஆதலால் இறைவன் கோவிலுக்கு இது உவமையாய் வந்தது. தென்மதுரையிலிருந்த தலைச் சங்கத்திலிருந்தே தமிழ்ச் சுவையைப் பருகி வந்திருத்தலால் கவிகளில் அதிக இன்பம் அடைய நேர்ந்தான். சுவைத்துச் சுவைத்துப் பழகின இனிமை நாளும் தழைத்துச் செழித்துப் பெருகி வந்துளது. மொழியின் சுவை விழுமிய நிலையது.

சிங்கத் துரிபுனை கோடிச் சுரமித்தர் தென்மதுரை
தங்கத் தமிழ்ச்சங்கத் தார்சொல் தவறினும் சார்ந்துநந்தம்
சங்கத் திருந்து தமிழ்ஆய்ந் தவர்சொல் தவறுவரோ
இங்கிற்றை யேவரு வார்மன மேதெளி இன்னதுவே.

(கோடிச்சுரக் கோவை 31)

தொழில் மேல் பிரிந்து போயுள்ள தலைவர் விரைந்து இன்றே வருவார் என்று ஒரு தலைவி தன் நெஞ்சோடு தெளிவு கூறுங்கால் இவ்வாறு தெளித்துள்ளாள். இறைவன் தலைமையாய்த் தங்கியிருக்கத் தென் மதுரைச் சங்கத்தில் அமர்ந்து தமிழை ஆய்ந்த அந்தச் சங்கப் புலவர்கள் சொன்ன சொல் தவற மாட்டார்; ஒரு வேளை அவர் தவறினும் நம் நாயகன் வாக்குமாருர்; குறித்தபடி வந்தேவிடுவார் என்று இந்தவாறு அவள் உள்ளத்தோடு பேசியிருக்கிருள். உரைகளில் உள்ள பொருள்நயங்களை உணரவேண்டும்.

நம் சங்கத்து இருந்து தமிழ் ஆய்ந்தவர் = நம்மோடு கூடியிருந்து இன்ப நலங்களை நுகர்ந்தவர். தமிழ் என்பது இன்பம் என்னும் பொருளிலே ஈண்டு இனிது வந்துள்ளது.

பழைய தமிழ்ச் சங்கமும் அதன் தலைவரும் அங்கிருந்த புலவர்களும் இங்கே சிந்தனைக்கு வந்துள்ளனர். சங்கப் புலவர்கள் எல்லாரும் சத்திய சீலரா யிருந்து வந்துள்ளனர்; அந்த உண்மையை ஈங்கு உய்த்து உணர்ந்து கொள்கிறேம்.

பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப. (புறம் 168)

கருவூர்ச் சாத்தனார் இவ்வாறு பாடியுள்ளார்.

பொய்யா நாவின் கபிலன். [புறம், 174]

நப்பசலையார் இவ்வாறு கூறியிருக்கிறார்.

பண்டைக் காலத்துப் புலவர்கள் பொய்யா நாவினரா யிருந்து வந்துள்ளமையை ஈண்டு அறிந்து மகிழ்ந்து கொள்கிறோம். போய் இல் புலவன் என்பது நாயனார் பெயர்.

வெறும் புலமையால் மட்டும் எவரும் பெருமை அடையமுடியாது; வாய்மை முதலிய தூய்மைகள் தோய்ந்த அளவே மேன்மைகள் மேவி வருகின்றன. அரிய நீர்மைகளை உடையவரே பெரிய சீர்மைகளை அடைகின்றனர்.

மனித குலத்துக்கு இனிய அறிவு நலங்களை அருளவுரியவர் ஆதலால் புலவர்கள் புனித நிலையில் பொருந்தியிருக்க வேண்டும். அவ்வாறு செவ்வையாய் அமைந்த பொழுது தான் அவருடைய வாய்மொழிகள் வலிமை யுடையனவாய் ஒளிமிகுந்து வையம் உய்ய நேரே வழிகாட்ட நேரும்.

ஆத்திரையன் பேராசிரியன் என்னும் சங்கப் புலவர் தலைமையான புலவர்களின் நிலைமைகளைக் குறித்து ஒரு முறை பெரிய பிரசங்கம் செய்தார். பின்பு அதன் சாரத்தைச் சுருக்கி உலகம் காணக் காட்டியருளினார். விழுமிய நிலைமைகளைக் குறித்து வந்துள்ள அதனை அயலே காண வருகிறோம்.

வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்,
வானயாறு அன்ன தூய்மையும், வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்,
திங்கள் அன்ன கல்வியும், திங்களொடு
ஞாயிறு அன்ன வாய்மையும், யாவதும்

அஃகா அன்பும் வெஃகா உள்ளமும்
துலைநா வன்ன சமன்நிலை உளப்பட
எண்வகை உறுப்பினர் ஆகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாளாண்மையும்
உலகியல் அறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொல்வன்மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்
இன்னோர் அனன தொல்நெறி மரபினர்
பன்னரும் சிறப்பின் நல்லாசிரியர்;
அறனே பொருட்பயன் இன்பெனும் மூன்றின்
திறனறி பனுவல் செப்பும் காலை
முன்னர்க் கூறிய எண்வகை உறுப்பினுள்
ஏற்பன உடையர் ஆகிப் பாற்படச்
சொல்லிய பொருண்மை சொல்லியாங்கு உணர்தலும்
சொல்லிய பொருளொடு சூழ்ந்துநன்கு உணர்தலும்
செய்ந்நன்றி அறிதலும் தீச்சார்பு இன்மையும்
மடிதடு மாற்றம் மானம் பொச்சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை இன்மையும் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்பறிந்து ஒழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினவலும் விடுத்தலும் உரைத்தலும்
உடையர் ஆகி நடையறிந்து இயலுநர்
நன்மாணாக்கர் என்ப மண்மிசைத்
தொன்னூல் புலமைத் துணிபுஉணர் வோரே.

(ஆத்திரையன்)

புலமையாளரும் புலமை நலனைப்பெற வுரியவரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இவ்வாறு ஆசிரியர்

உணர்த்தியிருக்கிறார். உரைகளில் மருவியுள்ள பொருள் நிலைகளையும் குண நலங்களையும் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். நிலைமை தெரிவது தலைமை தருவதாம்.

அரிய கலைகளை ஆய்ந்து வருகின்ற புலவர்கள் பெரிய நிலைகளில் தோய்ந்து வந்துள்ளனர். கழகம், சங்கம், அவை, சபை என வருவன யாவும் சால்புடைய மேலோர்கள் குழுமியுள்ள இடத்தையே குறித்து வந்துள்ளன. கூடிய கூட்டத்தின் நீர்மையால் இடம் நீடிய சீர்மையாய் நிலவி நின்றது. குணங்களையுடைய துமணங்களை அடைகிறது.

ஆறுஉட் பகைசெற்று அருங்கலை ஓர்ந்து
பாரில் கீர்த்தி படைத்தோர் வைகுதல்
நல்லவை; அடக்கம் வாய்மை நடுநிலை
சொல்லும் நன்மை யுடையோர் தொகைஇ
வல்லார் மொழியினும் வல்லுநர் ஆக்கிக்
கேட்போர் உறைஅவை நிறைஅவை ஆகும்.
[இலக்கண விளக்கம்]

அழுக்காறு இலாமை அவாவின்மை தூய்மை
ஒழுக்கம் குடிப்பிறப்பு வாய்மை—இழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய எட்டுறுப்புக் காண். [வீரசோழியம்]

புகழும் தருமநெறி நின்றோர்பொய் காமம்
இகழும் சினம்செற்றம் இல்லோர்—நிகழ்கலைகள்
எல்லாம் உணர்ந்தோர் இருந்த இடம்அன்றோ
நல்லாய் அவைக்கு நலம். (நல்லவை)

நலனடக்கம் செம்மை நடுநிலை ஞானம்
குலன்என்று இவையுடையோர் கோதில்—புலனில்லோர்
சென்று மொழிந்தனவும் கேட்போர் செறிந்தஇடம்
அன்றோ நிறைந்த அவை. [வச்சணந்தியம்]

நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லார் ஆயினும் புறமறைத்துச் சென்றேரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்கும் அவன் சுற்றம். [மலைபடுகடாம்]

நல்ல புலவர்கள் கூடியிருக்கும் சங்கங்களின் நிலைமைகளை இவை துலக்கியுள்ளன. மொழியறிவு நிறைந்தபொழுது மனிதர் விழுமியராய் விளங்குகின்றனர். உள்ளமும் உணர்வும் உயர உயிர் ஒளி மிகுந்து வெளியே சிறந்துதிகழ்கிறது.

நல்ல பண்புடையவர் எங்கே பிறந்தாலும் எந் நிலையில் இருந்தாலும் உள்ளம் கலந்து உறவாய்க் கூடி உவந்து கொள்ளுகின்றனர். அவ்வுறவால் உலகம் நலமுறுகிறது.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி ஆங்கே என்றும்
சான்றேர் சான்றேர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலரா குபவே. (கண்ணகனர்)

மேலோருடைய நிலைமை நீர்மைகளைக் கண்ணகனர் இவ்வண்ணம் சீர்மையா வரைந்து காட்டியுள்ளார்.

மனிதனுடைய அறிவு புனிதமாய் இனிய நீர்மை தோய்ந்தபோது அவன் தெய்வம் ஆகிறன்; ஆகவே தேவதேவனும் அவன் எதிரே காட்சி தந்து மாட்சி புரிகிறன்.

சீரியோர் சேர்ந்திருந்து செந்தமிழை ஆய்ந்தமையால்
பாரில் உயர்ந்த பரமனும்—நேரில்
தலைமைப் புலவனுய்ச் சார்ந்திருந்தான் சார்பின்
நிலைமை தெரிக நினைந்து.

நான்காவது அதிகாரம்.

தருமிக்கு அருளியது.

தரும தேவதையும் தமிழில் தனியுரிமை கொண்டாடி யுளது. இறைவனுடைய தொடர்பு தோய்ந்தமையால் தமிழ் மொழி மறுபுலங்களிலும் புகழ் ஒளி வீசியது. தேச மன்ன ரும் ஈசன் அருளை நினைந்து நாட்டு மொழியை நன்கு பேணி வந்தனர். வேந்தர் வழியே மாந்தரும் விழைந்து நின்றனர்.

வங்கிய சூடாமணி என்னும் பாண்டிய மன்னன் வரன் முறையே வந்து செங்கோல் தாங்கினன். இவன் சிறந்த நீதிமான்; நிறைந்த மதிமான்; உயர்ந்த கலைஞன்; இவனு டைய அருமை மனைவி பெயர் பதுமவதி; அதிசய அழகி. அந்தக் கோமகளோடு அமர்ந்து அரிய போகங்களை நுகர்ந்து இக் கோமகன் அரசுபுரிந்து வந்தான். அவ்வாறு வருங்கால் இளவேனில் பருவம்வந்தது. பங்குனி சித்திரை மாதங்களில் நகர் அயலே குளிர் பூம் பொழிலில் அமைந்திருந்த வசந்த மாளிகையில் வாசம் செய்வது வழக்கம் ஆதலால் அந்த முறைப்படியே தனது பரிவாரங்களோடு மன்னன் அங்கே போய்த் தங்கியிருந்தான். இனிய மனைவியோடு மருவிக் கந் தருவ சுகங்களைச்சுகித்துக் களித்துத் திளைத்து வந்தான். ஒரு நாள் தாமரைப்பொய்கைஅருகே செய்குன்றில் தேவியுடன் அமர்ந்திருக்கும் பொழுது அரிய பரிமளம் தென்றலோடு சேர்ந்து வீசியது. அந்த வாசனை வீசவே மன்னன் வியந் தான்; இந்த அதிசய நறுமணம் எங்கிருந்து வருகிறது? என்று அயல்எங்கும் நோக்கினன்; சண்பகம் மகிழம் சந்தனம் முத லிய மரங்களிலிருந்து வீசுகிறதோ எனமுதலில்திகைத்தான்; பின்பு தனது மனைவியின் கூந்தலில் இருந்தே அவ் வாசனை வீசுவதை உணர்ந்து வியந்தான்; மலர் முதலியன யாதும்

சூடாமல் இயல்பாயிருந்த அந்தக் கோதையில் நின்று அத் தகைய மணம் விளைந்து வருவதை நினைந்து சிந்தனை செய்தான்: செயற்கையால் அன்றிப் பெண்கள் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் உண்டா? என்று ஐயம் மீக்கொண்டு ஆராய்ந்தான். மனைவியின் மயிர் வாசனையில் மன்னன் உயிர் ஊசலாடியது. வாசக் குழலியோடு நேசமாய் இன்புற்றிருந்தவன் வேனில் பருவம் கழியவே நகர்க்கு வந்தான். தன் உள்ளத்தில் தோன்றிய ஐயத்தை யாரிடமும் நேரே கூறி உசாவவில்லை; சிந்தையில் எழுந்த அந்தச் சந்தேகத்தைத் தெளியச் செய்பவர்க்கு ஆயிரம் பொன் தருவதாக முன் அறிவித்து அப் பொன் முடிப்பைச் சங்க மண்டபத்தின் நடுவே தொங்க விட்டான். சங்கப் புலவர் எல்லாரும் ஆலோசித்து யாதும் தெரியாமல் மறுகினர்; மன்னன் கருதியுள்ள கருத்து என்னதோ? யாதோ? என இன்னவாறு எண்ணி எண்ணி இளைந்தாரே அன்றி யாதொரு விடையும் யாரும் கூற முடியவில்லை. அரசனுடைய மானச மருமம் சிறிதும் தெரியவில்லையே! என்று புலவர்கள் எல்லாரும் பரிவு கூர்ந்து படருழந்திருந்தார். திங்கள் இரண்டு கழிந்தும் ஆயிரம் பொன் தங்க முடிப்பு சங்க மாளிகையில் தங்கியே தொங்கியது. எங்கும் ஆலோசனைகள் எங்கி நின்றன.

தருமி.

தருமி என்னும் வாலிபன் ஒரு நாள் அங்கே வந்தான். அந்தப் பொன் முடிப்பைக் கண்டான்; அதன் மேல் ஆசை கொண்டான்; அவன் ஆதி சைவர் மரபினன். சதாசிவ பட்டர் என்பவருடைய மகன்; மிகவும் ஏழை; தாய் தந்தையரை இளமையிலேயே இழந்து விட்டான்; இருபத்தேழு வயது முடிந்தும் அவனுக்கு மணம் முடியவில்லை; கோயிலில் பூசை செய்யும் அருச்சகருக்கு அவன் உதவி புரிந்து வந்

தான்; பூசனை புரியும் உரிமை அவனுக்கும் உண்டு. இந்தப் பணத்தைக் கண்டதும் தன் மணத்தை நினைந்து அவன் மையல் மீதூர்ந்தான். மண ஆசையால் பண ஆசை மிகவே உணவின் ஆசையும் அவனை ஒருவி நின்றது. ஆள் அழகன்; காளைப் பருவம்; இவ்வேளையில் அவனுக்கு உறுதியும் ஊக்கமும் பெருகி வந்தன. கோயிலுள் புகுந்தான்; ஈசன் எதிரே நின்றான்; பாசமான அன்புரிமையோடு முறையிட நேர்ந்தான்.

முறையீடு செய்தது.

தந்தை தாய்இலேன்; தனியன் ஆகிய
மைந்தனேன்புது வதுவை வேட்கையேன்;
சிந்தை நோய்செயும செல்லல் தீர்ப்பதற்கு
எந்தையே! இது பதம எனறு ஏத்தியே. (1)

நெடிய வேதநூல் நிறைய ஆகமம
முடிய ஓதிய முறையில் நிற்கெனும்
வடுவில் இல்லற வாழ்க்கை இனறினின
அடி அருச்சனைக்கு அருகன் ஆவனோ? (2)

ஐய யாவையும் அறிதியே கொலோ
வையை நாடவன மனக்கருத்து உணர்ந்து
உய்ய ஓர்கவி உரைத்து எனக்கு அருள்
செய்ய வேண்டும என்று இரந்து செப்பினன். (3)

தெய்வ சந்நிதியில் நின்று தருமி இவ்வாறு பேசியிருக்கிறான். இவனுடைய தணிவும் பணிவும் பேச்சுத் திறமும் கலியாண ஆசையும் உரைகளில் தெளிவா ஒளிவீசி நிற்கின்றன.

தந்தை தாய் இலேன் என்றது சிந்தையில் இரக்கம் தோன்ற வந்தது. எந்தையே என்று அன்புரிமையுடன் இறைவனை அழைத்திருக்கிறான். உன் பிள்ளைக்கு நீ கலியாணம் செய்து வைக்க வேண்டாமா? என்று கடமையைக்

குறிப்பித்துக் காரியத்தை நயமா விளக்கியிருக்கிருன். இது பதம் என்றது இந்தச் சமையம் மிகவும் நல்லது; சரியான வாய்ப்பு வந்து வாய்த்திருக்கிறது; காலத்தைக் கடத்தி விடக் கூடாது என்று விரைவாத் துரிதப்படுத்தியிருக்கிருன்.

ஐய! யாவையும் அறிதியே! நீ எல்லாம் அறிய வல்ல வன்; உனக்குத் தெரியாதது யாதும் யாண்டும் இல்லை; நம் அரசன் கருதியுள்ளதை நீ முன்னமே தெளிவாய்த் தெரிந் திருப்பாய்; அதனை ஒரு பாட்டில் அமைத்துக் கொடுத்து விடு என்று நளினமாய்க் கேட்டிருக்கிருன். ஓர் கவி அருள் என்றது கருதிய பொருள் யாவும் அதில் மருவியுள்ளமை தெரிய வந்தது. தன் உள்ளக் கருத்தைப் பாட்டில் தெளி வாக் காட்டுவார்க்கே பொன் திரள் உரியதுஎன்று வேந்தன் குறித்திருத்தலால் "உய்ய ஓர் கவி செய்து அருள்" என் ருன். சைவ வேதியனது தெய்வ அன்புஈண்டு உணரவந்தது.

கவி நல்கியது.

இன்னவாறு அவன் தொழுது வேண்டவே ஆண்ட வன் உடனே அருள் புரிந்தான். மூலத்தானத்திலிருந்து ஒரு ஓலைச் சீட்டு அவன் எதிரே துள்ளி விழுந்தது. உள்ளம் களித்து உவந்துஎடுத்தான். படித்தான். மீண்டும்வாசித்துப் பொருளை யோசித்தான். அந்தப் பாட்டு அயலே வருகிறது.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே?" [இறையனர்]

பூந்தாதுக்களின் மணத்தைத் தேர்கின்ற வாழ்க்கை யையும் அழகிய சிறகுகளையும் உடைய வண்டே! என்

பிரியத்துக்காக யாதும் சொல்லாதே; நீ கண்டதையே உண்மையாகச் சொல்; நெருங்கிப் பழகிய நண்பும் மயிலின் சாயலும் வரிசையாய்ச் செறிந்த தந்தங்களையும் உடைய இந்த மங்கையின் கூந்தல்போல் நீ அறிந்த பூக்களுள் நறும் மணம் உண்டா? இருந்தால் யாதும் ஒளியாமல் யாருக்கும் அஞ்சாமல் உண்மையை உறுதியாகச் சொல்லிவிடு என்னும் பொருளைப் பொதிந்து இந்தக் கவி அருளோடு வந்துள்ளது.

"தென்னவன்குல தெய்வம் ஆகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்தமிழ்
சொன்னலம்பெறச் சொல்லி நல்கினன்
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினன்."

பாண்டிய மன்னனின் குல தெய்வம் ஆகிய பரமன் தருமி உருகிவேண்டிய வேண்டுகோளுக்கு இரங்கி கொங்கு தேர் வாழ்க்கை என்று தொடங்குகின்ற இந்தச் செந்தமிழ்ச் செய்யுளைப் பாடி அவன் எதிரே வீசி அருளினன்.

சங்கநூல் ஆகிய குறுந்தொகையுள் இரண்டாவது பாட்டாக இறையனார் பாடியது என்னும் தலைப்பின் கீழ் இது சேர்க்கப்பட்டுள்ளது. சங்கப் புலவர் பெருமான் செய்த கவி ஆகலால் இது அங்கே தலைமையாய் நின்றுளது.

பரிசில் பெறப் போனது.

இந்தப் பாசுரச் சீட்டைப் பெற்றதும் தருமி ஆனந்த பரவசமாய் இறைவனைத் தொழுது துதித்துவிட்டுத் தங்கப் புதையல் கிடைத்தது என்று உள்ளம் களித்து விரைந்து சங்க மண்டபத்துக்குப் போனன். சங்கப் புலவர்களைக் கண்டு சீட்டை நீட்டினன். மருதன் இளநாகனர் என்னும் புலவர் அதனை வாங்கினர். உற்று நோக்கினர்; உள்ளம் உவந்தார்; மற்றைப் புலவரும் பார்த்தார்; உவகை மீக்

கூர்ந்தார். ஐந்து புலவர்கள் தருமியை அழைத்துக்கொண்டு அரசனிடம் போயினர். கவியின் நிலைமையை உரைத்தார்; மன்னன் கண்டான்; மகிழ்ச்சி மீக் கொண்டான். தான் கருதியமருமம் கவியில் அழகாய் உருவாகியிருப்பதை ஓர்ந்து ஓர்ந்து உள்ளம் உவந்தான். பேரின்ப வெள்ளத்தில் மிதந்த வனாய் வியந்து களித்தான். மயில் இயல்; பயிலியது கெழீஇய நட்பு; அரிவை; கூந்தல்; நறிய என்ற இந்த மொழிகளை விழியூன்றி நோக்கித் தன் அருமைத் தேவியை ஒவிய உருவமாக் கருதி மகிழ்ந்தான். தான் எண்ணியன யாவும் கவியுள் நண்ணியுள்ளமையால் இவர் ஒரு தெய்வீகமான புண்ணியக் கவிஞராயிருப்பார் என்று தருமியை மரியாதையோடு பிரிய மா மன்னன் மலர்ந்து நோக்கி உள்ளம் உவந்து வியந்தான்.

புலவரோ, அரசனோ கவியைக் குறித்து அவனிடம் யாதொரு விவரமும் கேட்கவில்லை. அவனும் ஒன்றும் பேசாமல் மவுனமாய் நின்றான். அந்த நிலை அவனுடைய சாதுரிய சாகசத்தையும் சமைய விவேகத்தையும் விளக்கி நின்றது.

பந்தயமாய்ச் சங்கமண்டபத்தில் தூக்கியுள்ள ஆயிரம் பொன்னையும் தருமிக்குக் கொடுத்து மரியாதை செய்து அனுப்பும்படி அரசன் பணித்தான். அவனை அழைத்துக் கொண்டு புலவர்கள் மீண்டு போய்ச் சங்க மண்டபத்தை அடைந்தார். பொன் முடிப்பை எடுத்துக் கொள்ளும்படி தருமியை வேண்டினர். அவன் உவந்து எடுக்கச்சென்றான்.

நக்கீரர் தடுத்தது.

தருமி பெருமகிழ்வுடன் பொற்கிழியை நெருங்கிய பொழுது "ஏ! நில்; அதைத் தொடாதே" என்று நக்கீரர் கடுத்துத் தடுத்தார். பாவம்! அவன் பதறி நின்றான். "இந்தக் கவி குற்றம் உடையது; இப்பரிசைப் பெறத்தக்க தகுதி

உனக்கு யாதும் இல்லை; விலகி வெளியே போ!" என்று வெருட்டி விலக்கினர். அவன் வெருண்டு மருண்டான்.

கடும்பசி யுடையவன் இனிய அமுதத்தை உண்ண நேர்ந்தபோது கொடிய ஒரு பூதம் கடிது கடிந்தது போல் அவர் கடுத்து சிறுத்தவே அவன் கலங்கி வெளியே வந்து விரைந்து கோயிலை அடைந்தான். கதறி அழுதான்: "ஆண்டவா! அங்கே மூண்ட இழிவை நினைந்து என் உள்ளம் துடிக்கிறது; கொடிய மிடியனை எனக்குப் பொருள் கிடைக்கவில்லையே என்று நான் வருந்தவில்லை; தேவதேவரான உங்கள் கவி குற்றம் உடையது என்று ஒரு மனிதன் இகழ்ந்து சொன்னதை எண்ணும்போதெல்லாம் என் உயிர் பதைக்கிறது; இப்படி ஒருவன் அவமதித்தால் உங்களை இனிமேல் யார் மதிப்பார்? ஐயோ! வறுமையுடைய நான் உங்களுக்குச் சிறுமை அடையும்படி செய்துவிட்டேனே!" என்றுகூம்பிய கையனாய்த்தொழுதுநின்றுதேம்பி அழுதான்.

வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
 வழிபடும் அடியேன் நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று
 பேசிலேன்; யார்க்கும் மேலாம்
கறைகெழு மிடற்றோய்! நின்றன்
 கவிக்குற்றம் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால்
 ஆருனை மதிக்க வல்லார்? (1)

எந்தையிவ் இகழ்ச்சி நின்ன
 தல்லதை எனக்குயாது என்னாச்
சிந்தைநோய் உழந்து சைவச்
 சிறுவன் நின்றிரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப்
 பனுவலும் பயனும் ஆன

சுந்தர விடங்கன் அங்குஓர் புலவனாய்த்
தோற்றம் செய்தான். (திருவிளையாடல்)

தருமி வந்து மறுகி வருந்தவே இறைவன் விரைந்து ஒரு புலவனாய்த் தோன்றினார். சகல கலா வல்லவனான புலமைக் கோலத்தோடு பொலிந்து விளங்கினார். உயர்ந்த ஆடை அணிகள் புனைந்து சிறந்த பீதாம்பரத்தை ஏகாசமாத் தோளில் அணிந்து ஞான கம்பீரமாய் நடந்து சங்கத்தை அடைந்து புலவர்களை நோக்கி எம்முடைய கவிக்கு இங்கே குற்றம் கூறினார் யார்? என்று வீறோடு கேட்டார். கேட்கவே நானே கூறினேன் என்று கீரன் நேரே எழுந்து நின்றான். அந்த நிலையில்கலையின் கம்பீரம் தலைமையாய்நிலவியது.

இறைவன்: என்ன குற்றத்தைக் கண்டீர்!

நக்கீரன்: அதில் சொல் குற்றம் இல்லை; பொருளில் மருளான ஒரு குற்றம் உள்ளது.

இறைவன்: பொருளில் யாது குற்றம்?

நக்கீரன்: பெண்கள் கூந்தலுக்குச் செயற்கையான மணமே அன்றி இயற்கையில் அதற்கு நறு மணம் கிடையாது.

இறைவன்: சங்கினி பதுமினி என்னும் உத்தம சாதிப் பெண்கள் கூந்தலில் இயற்கை மணம் உண்டு என்று சாமுத்திரிகம் கூறியுள்ளதே.

நக்கீரன்: அது தவறு.

இறைவன்: தேவ சாதிப் பெண்கள் கூந்தலோ?

நக்கீரன்: அதுவும் மந்தாரம் முதலிய தெய்வ மலரால் நேர்ந்த வாசனையே அன்றி; இயல்பாக இல்லை. இல்லாததைச் சொல்லலாகாது.

இறைவன்: அகிலலோக நாயகியான உமாதேவியின் கூந்தல் தெய்வ மணம் கமழுமே.

நக்கீரன்; அதுவும் பொய்; அவ்வாறு கமழாது.

இறைவன்: நான் யார் தெரியுமா?

நக்கீரன்: நீர் யாரா இருந்தாலும் சரி; பொய் பொய்யே; மெய் மெய்யே.

இறுதியில் இறைவன் நெற்றிக் கண்ணைச் சிறிதுகாட்டினர். "சாமி! நெற்றியில் மட்டும் அல்ல; உடம்பெல்லாம் கண்களாக நீர் காட்டினுலும் உம்முடைய பாட்டு குற்றம்; குற்றம்; குற்றமே." என்று முற்றிய வீரேடு நின்ருன்.

இவ்வாறு கீரன் கூறி முடிக்கு முன் நெற்றித் தீ நேரே பாய்ந்தது; பாயவே வெப்பம் தாங்க முடியாமல் அலறிப் பொற்ருமரைப் பொய்கையில் அவன் வீழ்ந்து ஆழ்ந்தான்.

கீரனைக் கரை ஏற்றியது.

புலவராய் வந்த இறைவன் உருவமும் விரைந்து மறைந்து போயது. போகவே சங்கப் புலவர் எல்லாரும் அதிசய பரவசராய்க் கோயிலுள் புகுந்து அழுது தொழுது ஆண்டவனை நோக்கிஉரிமையுடன்வேண்டிமுறையிட்டனர்.

வேண்டவே ஆண்டவன் அருள் புரிந்து கீரனைக் கரை ஏற்றினர்; இலக்கண நூல்களை அகத்தியரிடம் வரன் முறையாக் கற்றுத் தெளிக என அறிவுறுத்தி விடுத்தார்.

அதன் பின் கபிலர், பரணர் முதலிய சங்கப் புலவர்கள் எல்லாரும் தருமியை அழைத்து வந்து மரியாதைகள் பல செய்து அரிய அந்தப் பொற்கிழியை உரிமையுடன் கொடுத்தார். அரசன் அவரை அரண்மனைக்கு அழைத்து வந்து வரிசைகள் பல புரிந்து வேறு பல பரிசில்களும் அணிகளும் மணிகளும் ஆடைகளும் தந்து அன்பா உவந்து அனுப்பினன்.

இந்தத் தருமியால் தரும மூர்த்தியான பரமனை நேரே காணப் பெற்றோம் என்று மன்னனும் புலவரும் அவரை மகிழ்ந்து வாழ்த்திப் புகழ்ந்து போற்றினர்.

கற்ற கீரனும் கலைஞரும் கழகமண் டபத்தில்
உற்ற ஆடகக் கிழியறுத்து அந்தணற்கு உதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்து
அற்றம் நீங்கிய கல்வியின் செல்வராய் அமர்ந்தார். [1]

சம்பக மாறன் என்னும் தமிழ்நர்தம் பெருமான் கூடல்
அம்பக நுதலி னானை அங்கயற் கண்ணி னாளை
வம்பக நிறைந்த செந்தா மறையடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த அன்பால் பல்பணி நடத்தி வைகும். [2]

[திருவிளையாடல்]

நடந்துள்ள செயல் இயல்களை நினைந்து சிந்திக்கின்றோம். வியந்து மகிழ்கின்றோம். புலவராய்ப் பொலிந்து விளங்கியும், கவிஞராய்ச் சிறந்து தோன்றியும், கவிகள் புனைந்து சுவைகளை ஊட்டியும் தமிழ் மொழியில் கெழுமிய மகிழ்வாய் இறைவன் அருளாடல்கள் புரிந்து வருவது விழுமிய காட்சிகளாய் விரிந்து வியப்பையும் நயப்பையும் வியனு விளைத்து உணர்ச்சிகளை நயமா உயர்த்தி வருகிறது.

வழுதி மன்னனும், சங்கப் புலவர்களும் முழு முதல் பரமனுடைய கருணை நிலைகளைக் கண்டு கண்டு களித்துக் கலைகளை வளர்த்து உளம் மிக உவந்து உயர்ந்து வந்துள்ளனர். அறிவும் பண்பும் அவர் பால் இனிது பெருகி நின்றன.

யாருக்கும் தெரியாமல் தான் மருமமாக் கருதியிருந்த கருத்தைப் பெருமான் உரிமையோடு ஒரு கவியில் பொதிந்து உலகம் அறியச் செய்த அந்த நிலைமையை நினைந்து நினைந்து நெடிது மகிழ்ந்து ஆண்டவனைத் தொழுது பாண்டிய வேந்தன் நீண்ட புகழோடு நீதி நெறியே பூண்டு நிலவி வந்தான்.

சவுந்தர பாண்டியன் எனத் தன் குலத்தில் மூதாதை யாய் முன்னே தோன்றியிருந்து அரசு புரிந்த பரமன் இடை இடையே நேரே தோன்றி அருள் புரிந்து வருவது அந்த மன்னன் மரபுக்கு அதிசய ஆனந்தமாய்ப் பெருகி வந்தது.

"பொன்னகர்க் கூடல் சென்னியம் பிறையோன்
பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி
என்உளம் குடிகொண்டு இரும்பயன் அளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணைஎம் பெருமான்."

(கல்லாடம்)

இளமதியைத் தலையில் சூடிய பெருமான், வழுதி மதி யில் மருவியிருந்த மருமத்தை விழுமிய ஒரு கவியில் விளக்கி முழுமதிக் கவிஞனாய் நேரே தோன்றிச் சங்கப் புலவர் களுக்குக் காட்சி தந்து, தருமிக்குத் தங்கத் திரளையை அருளி யுள்ள அருள் நிலையைக் கல்லாடர் இவ்வாறு தம்முடைய கவியில் சுவையாப் பொதிந்து உலகம் உவந்து காணக் காட்டியிருக்கிறார். இந்தக் காட்சியில் உள்ள மாட்சியைக் கருத்து ஊன்றி ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

சொல்லாடும் திறத்தில் கல்லாடர் வல்லவர் என்பதை அவருடைய உரைகள் தெளிவா உணர்த்தி வருகின்றன.

பொதியமலைத் தலைவன் எனப் பாண்டிய மன்னனை ஈண்டுக் குறித்தது, தென்றல் அன்று தந்த நறுமணத்தால் இந்தப் பெரு மணங்கள் எல்லாம் விளைந்து வந்துள்ள உண் மையை உரிமையோடு நுண்மையா உணர்ந்து கொள்ள.

குறிப்பு மொழிகள் கூர்ந்து சிந்திக்கத்தக்கன.

இறைவன் ஒரு கவிஞனாய் அன்று எழுந்தருளிய

கோலத்தைக் கவியுலகம் என்றும் பெருமையாக் கண்டு களித்து உவகை மீதூர்ந்து உரிமை கூர்ந்து வருகிறது.

கண்டிகை மதாணி ஆழி
கதிர்முடி வயிரம வேய்ந்த
குண்டலம் குடிகொண்டு ஆகத்து
அழகுஎலாம் கொள்ளைகொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன்
தானஎனக் குறியிட்டு ஆங்கே
புண்டர நுதலில் பூத்துப்
பொய்யிருள் கிழித்துத் தள்ள. (1)

விரிகதிர்ப் படாத்தில் போர்த்த
மெய்ப்பையுள் அடங்கிப் பக்கத்து
எரிமணிக் கடகத் திண்டோள்
இளையவர் அடைப்பையோடும்
குருமணிக் களாஞ்சி அம்பொற்
கோடிகந் தாங்க முத்தால்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்கால்
கவரிபால் புரண்டுதுள்ள. (2)

சொல்வரம்பு இகந்த பாதம்
என்பது தோன்ற வேதம்
நல்லபா துகையாய்ச் சூட,
நவின்றன கற்றுப் பாட,
வல்லவர் மறையின் ஆறு
மனுமுதல் கலைபோல் பின்பு
செல்லநூல் ஆய்ந்தோர் வைகும்
திருந்தவைக்களத்தைச் சேர்ந்தான். [3]

(பரஞ்சோதிமுனிவர்)

இறைவன் கவிஞன் ஆய் வந்திருக்கும் காட்சியை ஓவிய உருவமா இவை வரைந்து காட்டியுள்ளன. செந்நிறத் திருமேனியின் தெய்வப் பொலிவும், அணி மணிகளின்

அலங்காரங்களும், பொன் ஆடைகளுடைய சாடைகளும், உளம் கனிந்து உரிமையோடு ஏவல் புரிகிற இளம் புலவர்களும், அரிய மரியாதைகள் மருவிய ஆரவாரங்களும், வீர கம்பீரமான விழுமிய நடையும், வியத்தகு எழிலும் கருதிக் காணுந்தோறும் கழிபேருவகைகளை விளைத்து வருகின்றன.

யாராலும் காணமுடியாத ஒருவன் எல்லாரும் காணும் படியாய் ஆலயத்திலிருந்து வெளியேறி மதுரை வீதி வழியே நடந்து அதிசய கம்பீரமாச் சங்கத்தை அடைந்திருக்கிறான்.

இத்தகைய உத்தமக் கவிஞனை உரிமையாப் பெற்றிருக்கும் தமிழ் மொழி எத்தகைய பெருமையுடையது? எத்தனை அருமை தோய்ந்தது? எவ்வளவு மகிமை வாய்ந்தது? அவ்வளவையும் மானச விழிகளால் கருதிக் காண்பவர் உள்ளம் உருகி உவகை சுரந்து உயர்வு மிகுந்து திகழ்வர்.

சிவபெருமான் கவிஞர் பெருமானாய் வந்த இந்தச் சுவையான சரிதையைச் சங்க காலப் புலவர் முதல் பலரும் புகழ்ந்து மகிழ்ந்துள்ளனர். பல நூல்களும் வியந்து வரைந்துள்ளன. சில கவிகளை அயலே காண வருகிறோம்.

வெள்ளைத் தாமரைச் செல்விதன்
பெண்மையை விடுத்திட்டு
எள்ளற் பாடில் ஆண் உருஎடுத்து
எனமுடி ஏந்தும்
பிள்ளைப் பால்மதி யான் தமிழ்
ஒருவனுப் பெருஞ்சீர்
வள்ளற் பாண்டியற்கு ஆருயிர்த்
துணைவராய் வாழ்ந்தார். (1)

இன்னவாறு அவர் வாழுநாள்
ஓர்பகல் எரிகால்

மின்னு வாட்படைச் சேல்வலன்
உயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் மேல்நிலைக்
குழையடர் பூங்கண்
அன்னம் அன்னவள் ஒடுஇனிது
ஏறினன் அமர்ந்தான். (2)

ஆய காலையில் மந்தமா
ருதத்தொடும் அரிக்கண்
வேயை வென்றதோள் அணங்கின்வார்
குழல்மணம் வீசச்
சேய ஞன்குவி முகிழ்முலைச்
செய்யவாய்த் தேவி
மாயி ருங்குழ லின்மணம்
ஆம் என மதித்தான். (3)

மதித்த காவலன் அதுமனம்
கொண்டுதன் மனத்தில்
ததைத்த நுண்பொருள் தரஒரு
செய்யுள்செய் புலவன்
இதைக்கொள் கென்றுபொன் ஆயிரம்
ஒருகிழி இயற்றி
அதைப்பொற் சங்கமண் டபத்தின்முன்
தூக்கினன் அன்றே. (4)

புலவர் யாவரும் தாம்கண்ட
வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய
அனைத்தையும் தண்தார்
மலைகொள் தோளினன் மறுத்தலின்
வறிதகன் றனர்அவ்
இலகு பொற்கிழி இருந்ததங்கு
அறுப்பவர் இன்றி. (5)

குழவியந் திங்கள் வேணிக்
குரிசில் மற்றதனைக் கேளா
அழுதகம் குழையல் வாழி
அன்பஒன்று அறைவல் கேட்டி
வழுதிதூக் கினன்ஓர் பாத்தன்
மனம்கொள உரைத்தோர்க்குஎன்று
கிழியது ஆயிரம்பொன் சங்கக்
கிளர்மணி மண்டபத்தே. [6]

அங்கதை இப்பா வேந்தற்கு
அறைந்தனை பெறுதி என்று
கொங்குதேர் வாழ்க்கை என்னும்
கோதில்தூக்கு ஈந்துவிட்டான்
பொங்கிய களிப்பி னனும்
போய்த்தொடர்பு அமுதம் தன்னைத்
திங்கள்வெண் குடையி னன்தன்
செவிப்புலத்து ஊற்றி னனல். (7)

மற்றது கேட்டுத் திங்கள்
மருகன்தான் நினைந்த வண்ணம்
சொற்றலின் இனிதுவந்து
தொகுசங்கத் தவர்பால் போய்இப்
பொற்றபாட்டு இசைவி என்றான்
பொருக்கெனத் தருமி சென்று
கற்றவர் அவைமுன் சொன்னான்
கவிகள் கேட்டலும உவந்தார். (8)

ஆங்கவர் தம்முட் கீரன் அரும்பெறல்
கல்விச் செல்வத்து
ஓங்கிய தருக்கி னல்இவ் உரைத்தபாக்
குற்றம் என்றான்

தாங்கிய உவகை சிந்தித் தருமிதான்
துணிவில் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச் செல்வனோடு
இதனைச் சொன்னான். [9]

கேட்டலும் அங்க யற்கண் கிளியுறழ்
கிளவி பங்கன்
பாட்டியல் புலவன் ஆகிப் பாவலர்
தம்பால் போய்எம்
கோட்டமில் கவிக்குக் குற்றம் கூறினர்
யாவர்? என்றான்
நாட்டிய புகழ்நக் கீரன் நான்எனத்
தருக்கிச் சொன்னான். (10)

சொல்லலும் குற்றம் யாது சொல்? என
நெடுங்கண் நல்லார்
சில்லிருங் குழற்கு நாற்றம் செயற்கைஅன்று
இயற்கை உண்டோ
இல்லது கூறலால்மற்று இதுகுற்றம்
என்றான்; அண்ணல்
மல்லல்விண் மகளிர் கூந்தல் மணம்
இயல்பு அன்றோ என்றான். [11]

என்றலும் அரம்பை யர்க்கும் இருங்குழல் நறிய நாற்றம்
இன்றென உரைத்தான்; ஐயன் இறைவிஎன்று உலகம் ஏத்தும்
குன்றிறை பயந்த செல்வி கூந்தல்எற்று? என்றான்; கீரன்
தன்தனித் தருக்கால் அம்மை தனதுகூந்தலும் அற்றுஎன்றான்.

ஏற்றினன் நெற்றிக் கண்ணும் எரிமருள் சடையும் காட்ட
மாற்றரு மருட்சி யான்கண் வடிவெலாம் காட்டி னாலும்

சாற்றிய செய்யுள் குற்றம் சடைகொண்டு வெருட்டல்வேண்டா
தோற்றிலன் இதனுக்குஎன்றான் தொலைவிலான் வெகுண்டு
[சொல்வான். [13]

எம்மொடு முரணிவான்தோய் இமயமால் வரைப்பூங்கொம்பின்
மைம்மலி மறைசொல் ஆன மணம்கமழ் குழல்பழித்த
செம்மைகொள் அறிவிலாய்நீ தீர்ப்பருங் குட்ட நோய்கொண்டு
இம்மையில் அலைக என்றான் இறப்பநக் கீரன் அஞ்சி. (14)

முழுமெய்யும் பனித்துஇரங்கி முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக் கருணையங் கடலே! எந்தாய்!
இழிபுடை நாயின் அன்னேன் இலங்கறி விலாதுசெய்த
பிழைபொறுத்துஅருளிச் சாபப்பிணிகெட அருள்வாய்என்றான்.

என்றலும் கருணை வள்ளல் எரிசினம் தணிந்து கீர
சென்றுநீ கயிலை காணின் தீருமிக் கொடுநோய் என்று
குன்றுறழ் புரிசை விண்தோய் கோயிலில் புகுந்து ஒளித்தான்;
தென்றலம் பொதிய வெற்பின் தென்னர்கோன் அதிசயித்தான்.
[சீகாளத்திப் புராணம்]

தருமிக்கு அருள்புரிந்து ஒரு கவி வரைந்து தந்து கவிஞனாய் வந்து இறைவன் செய்த திருவிளையாடல்களை இக் கவிகள் சுவையா விளக்கியுள்ளன. பாடல்களை ஊன்றிப் பார்த்தால் நிகழ்ச்சிகளை நேரே தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். வாலறிவன் நூலறிவனாய் ஞாலமறிய வந்துள்ளான்.

வங்கிய சூடாமணிப் பாண்டிய மன்னனும், தருமிப் பட்டனும், இறையனாரும், நக்கீரனாரும் இந்தக் காட்சிக்கு மாட்சியான பாத்திரங்களாய் மருவி ஆட்சி புரிந்துள்ளனர்.

அரசியின் கூந்தல் வாசனையால் இவ்வளவு அதிசயங்கள் விளைந்திருக்கின்றன. மன்னன் எண்ணிய ஓர் எண்ணம் கண்ணுதல் கடவுளைக் கவிஞன் ஆக்கி, உலகிற்கு அரிய ஒரு கவியை உதவித், தருமிக்குப் பெரிய நிதியைத் தந்து, தமிழ்

மொழிக்கு விழுமிய மகிமையை விரித்துப் புலமைக்குத் தலைமை நிலையை அருளி வினையாளர்க்கு விதி நியமங்களை விளக்கி இன்னவாறு பல நன்னயங்களை விளைத்துள்ளது.

மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளி னோன்காண்
பொன்காட்டும் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவன்என் சிந்தையானே.
(தேவாரம்)

அப்பர் சுவாமிகள் இந்தச் சரித்திரத்தை இப்படிக் குறித்திருக்கிருர். நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்க கனகக் கிழி தருமிக்குஅருளினோன் எனப் பொருள்பொதிந்த மொழிகளால் இறைவனைத் துதித்திருக்கிருர். நல்ல பாட்டுப் புலவனை உள்ளம் கருதி என்றும் உரிமையோடு உருகிப் பாடுகின்ருர் ஆதலால் இவருடைய பாடல்கள்யாவும் தமிழ் வளம் சுரந்து நலம் பல கனிந்து நயமாய் வந்துள்ளன.

அரிய புலவன் பெரிய கவிஞன் என உலகம் தெரிய இறைவன் தமிழ் மொழியில் ஒளி புரிந்து விளங்கி யிருந்தார். அந்த நிலைமை தலைமைகள் புலவர் உலகில் புதிய சோதிகளை வீசி அதிசய நீதிகளாய் நிலவி நிற்கின்றன.

ஈசனும் கவிஞனாய் எதிரில் வந்தொரு
நேசனுக் கருளிய நிலையை நீணிலம்
யோசனை செய்துளம் உணரின் ஓகையாய்ப்
பூசனை புரிந்துசெந் தமிழைப் போற்றுமே.

ஐந்தாவது அதிகாரம்.

பாணருக்கு உதவியது.

வரகுண தேவன் என்னும் பாண்டிய மன்னன் அரசு புரிந்து வருங்கால் மதுரையில் இசைவாணர் பலர் இசை பெற்றிருந்தனர். அவர்களுள் பத்திரன் என்பவன் மிகவும் சிறந்து விளங்கினன். உத்தம குணங்கள் பல இவனிடம் நிறைந்திருந்தன. சோமசுந்தரக் கடவுள்பால் பேரன்புடையவன். நாளும் அந்தத் தெய்வ சந்நிதியில் நின்று யாழ் வாசித்து வருவான். இவனுடைய யாழ்இசை தேவகானமாய் யாவரையும் பரவசப்படுத்தி வந்தது. பொருளை விரும்பி யாரிடமும் போய்ப் பாடாமல் இறைவன் அருளை அவாவியே நாளும் உருகிப்பாடி யாழ் இசைத்து வந்தான். அவ்வாறு வரவே வாழ்வு வறுமையாய் ஓங்கி வந்தது.

பட்டினியாயிருந்தாலும் பரமன் முன்னிலையில் நாளும் பண்ணோடு பாடி மண்ணோரையும் விண்ணோரையும் இவன் மகிழ்வித்து வந்தான். அதனால் பாணபத்திரன் என நேர்ந்தான். பண் படிந்த இசைப்பாட்டு பாண் என வந்தது; அதனைப் பாடுபவர் பாணர் எனப் பேற்றார். செவிக்கு இனிய சுவை யூட்டிப் புவிக்கு இனியனாய் நின்ற இவன் வாய்க்கு இனிய உணவூட்டம் இன்றி மறுகியிருந்தான். பசித்தாலும் பரமனைப் பரசிப்பாடி வந்தவன் ஒருநாள் இரவு பட்டினியோடு படுத்திருந்தான். இறைவன் அவனுடைய கனவில் இனிது தோன்றினர்: "அப்பா! உன்போல் என்பால் பேரன்புடைய ஒருவன் பெரிய அரசனாய் இருக்கிறான்; நீ வறியனாயுள்ளாய்; நானே ஆண்டியாய் நீண்டு நிற்கிறேன்; ஆனாலும் உனக்கு நான் ஒரு ஓலைச் சீட்டைத் தருகிறேன்;

இதில் ஒரு பாட்டு எழுதியிருக்கிறேன்; இதனைக் கொண்டு போய்ச் சேரமன்னனிடம் கொடு; அவன் உனக்கு எல்லாம் கொடுப்பான்; குறித்துள்ள மேல் விலாசத்தின் படியே காலையில் எழுந்துபோ” என்று சொல்லி விட்டு விரைந்து மறைந்து போனார். பாணர் பயந்து விழித்தார்; பக்கத்தில் ஒரு ஓலைச் சுருள் கிடந்தது; வியந்து எடுத்தார்; தன்பால் பரமன் கொண்டுள்ள கருணையை நினைந்து நெஞ்சம் உருகி அழுதார். சூரியன் உதயமாகவே அந்த முடங்கலை ஒரு தூய வெள்ளைத் துணியில் பொதிந்து எடுத்துக் கொண்டு ஆலயத்தை வலம் வந்து தொழுது விட்டுக் காரியம் கருதிப் போனார். அந்தச் சீட்டில் தீட்டியுள்ள பாட்டு அயலே வருகிறது.

திருமுகம்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்:
பருவக் கொண்மூப் படிஎனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

(ஆலவாய்ச்சிவன்)

திருவஞ்சைக்களத்தில் இருந்து அரசு புரிந்த சேரமன்னனுக்குச் சொக்கப் பெருமான் இப்பாசுரத்தை இவ்வாறு எழுதியிருக்கிறார். அவ்வேந்தன் சாந்தசீலன்; சிறந்த சிவ பத்தன்; நாளும் மதுரையைத் திசைநோக்கி உழுவலன்

போடு தொழுத பின்பே உணவு கொள்வான்; தருமமும் நீதியும் தண்ணளியும் உடைய அப்புண்ணிய வேந்தனுக்கு இப்புனித நாதன் இதனை இவ்வண்ணம் எழுதியருளினர்.

இது பதினோராந் திரு முறையில் முதலில் சேர்க்கப் பட்டுள்ளது. திருவாலவா யுடையார் அருளிச் செய்த திரு முகப் பாசுரம் என உலகம் ஒரு முகமாய் இதனை உவந்து புகழ்ந்துவருகிறது.சிவபெருமான் கவிசுவைபெருகிநின்றது.

சீட்டுக்கவி என்று ஒருவகைப் பாட்டு செய்யுள் முறை யில் உண்டு; அதற்கு இது மூல முதல். ஓலைச் சீட்டிலேயே தம்கருத்தைக் கவிஞர் காட்டி விடுவதால் சீட்டுக்கவி என நேர்ந்தது. நமது கவிஞர் பெருமான் முதலில் இதனை இப்ப டிக் காட்டியிருக்கிறார். தமது பெருமித நிலையை முன்ன தாக விளக்கி விட்டு அதன்பின் இன்னவாறு செய்ய வேண் டும் என்று மன்னனுக்குக் கட்டளை யிட்டுள்ளார். கவியின் பொருள் நிலையைக் கருதி உணர்ந்து கொள்ள வேண்டும்.

நிருபனது நிருபத்தின் நிலை.

"உயர்ந்த மதில்கள் புடைசூழ்ந்த சிறந்த மாடமாளி கைகள் நிறைந்த மதுரையம் பதியிலே மன்னியுள்ள சிவ பெருமான் ஆன நான் சேரர் பெருமான் ஆன உனக்கு உரிமையோடு மொழிகின்றேன்: நீ பெரிய கொடையாளி; கார்கால மேகம் போல் கவிஞர்களுக்குப் பொன்மாரி பொழிபவன்; உள்ளம் உவந்து அவ்வாறு உதவுகின்ற வள்ளன்மையால் உனது புகழ் திசைகள் தோறும் ஒளி களை வீசி வருகிறது; கொடையோடு போர் வீரமும் உடைய சீரிய அரசே! ஒரு காரியம் கருதி எழுதியுள்ள எனது திருமுகத்தை நீ கருதிக் காண வேண்டும்; இனிய யாழை இனிது பயில்கின்றவன்; இசையில் வல்லவன்;

பாணபத்திரன் என்னும் பேரினன்; என்பால் உன்போல் பேரன்பு உடையவன்; உன்னை அன்போடு நேரே காண வருகிறான்; அந்தக் காட்சிக்கும் உனது மாட்சிக்கும் உரிய தகுதியான பொருளை உவந்து உதவி இவனை ஈண்டு அனுப்பி அருளுக" என்பது இந்தக் கவியில் அமைந்துள்ளது.

தக்கவரிடம் உரிமையோடு பரிசில் பெறுவது கவிஞர் மரபு என்பதை இக்கவிஞர் பிரான் இங்கே காட்டியிருக்கிறார். கலையின் காட்சி அதன் நிலையையும் நீர்மையையும் நேரே விளக்கிக் கவிஞரின் சீர்மையைத் துலக்கியுளது.

இறைவன் அருளிய திருமுகத்தை மிகவும் பத்திரமா வைத்துக் கொண்டு பாணபத்திரன் சேரநாட்டை நோக்கி விரைந்து சென்றான்; திருவஞ்சைக்களம் என்னும் இராசதானியை அடைந்தான். பொழுதும் அடைந்தது; விடிந்த பின் அரசைக் காணலாம் என்று கருதி ஒரு தரும சத்திரத்தில் பத்திரன் தங்கியிருந்தான். பத்திரம் பத்திரமாயிருந்தது.

அன்று இரவு சேரமன்னன் ஒரு கனவு காண நேர்ந்தான். கண்டது நீலகண்டனுடைய கோலக் காட்சியே.

மண்புகழ் அந்நகர் மறுகின் மாடுஒரு
தண்புனல் சாலையில் சார்ந்துளான்; இப்பால்
விண்புகழ் நீதிஅவ் வேந்தற்கு அன்றுஇராக்
கண்புனை நுதலினர் கனவில் தோன்றினர். (1)

தென்னவன் மதுரையில் இருக்கும் சித்தர்யாம்
நின்னிடை வந்துளேம்; நின்னைக்கண்டு தான்
நன்னிதி வேண்டநம் ஓலைகொண்டு நம்
இன்னிசைப் பாண பத்திரன் இங்கு எய்தினன். (2)

மற்றவற்கு அருநிதி கொடுத்து மன்னநீ
தெற்றென வரவிடு கென்று சித்தர் தாம்

சொற்றனர் போயினர்; சுரக்கும் தண்ணளி
ஒற்றைவெண் குடையினன் உறக்கம் நீங்கினன். (3)
(திருவிளையாடல், திருமுகம் 15—17)

சேரமன்னன் கனவு கண்டிருக்கும் நிலைகளை இதில் நாம் தெளிவாக் கண்டு கொள்ளுகிறோம். "நான் பாண்டிய மன்னனுடைய மதுரை மாநகரில் இருக்கிற சித்தன்; என் பெயர் சோக்கன்; உன்பால் அன்பால் வந்துள்ளேன்; என் அன்பன் ஒருவன் உன்னிடம் பொருள் கருதி வருகிறான்; அவனுக்குப் பிரியமாய் அரிய நிதிகளைக் கொடுத்து அனுப்பி யருள்" என்று ஒலித்து விட்டு மறைமுதல் மறைந்து போயது. மன்னன் எழுந்தான்: வியந்தான்; இயல்பாகவே சிவபெருமானிடம் பேரன்புடையவன் ஆதலால் இவ்வுரைகளைக் கேட்டதும் உள்ளம் உருகினன். கடவுளின் கருணையை நினைந்து கண்ணீர் மல்கினன். பொழுது விடிந்தது; விடியவே தன்நகரில் யாரேனும் மதுரையிலிருந்து புதியராய் வந்துள்ளாரா? எங்கேனும் யாராவது தங்கி யிருக்கிறாரா? என்று பரிவாரங்களை அனுப்பி ஆவலோடு தேடச்செய்தான்.

அவ்வாறு அவர் தேடிவருங்கால் பாணன் அரண்மனையை நாடிவந்தான். அழகிய மாளிகையுள் நுழையவே அரசன் எதிரே ஓடிவந்து அவனைத் தொழுது வணங்கினன்; பாணன் நாணித் திருமுகத்தைக் கொடுத்தான்; அதனை மன்னன் வாங்கினன்; உவகையில் ஓங்கினன்; தலைமேல் வைத்தான்; கண்ணில் ஒற்றினன்; உள்ளம் களித்துக் கண்ணீர் வெள்ளம் துளித்து அதிசய பரவசனாய் இறைவனைத் துதிசெய்து நின்றான்.

கண்டனன் முகிழ்த்தகைக் கமலம் சென்னிமேல்
கொண்டனன் பாடினன் கூத்தும் ஆடினன்

தண்டுஎன வீழ்ந்தனன் அன்பின் தண்ணரு
வண்டுஎன மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே. (1)

வாங்கினன் திருமுகம் மலர்க்கண் ஒற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போல் மகிழ்
தூங்கினன் தடங்கணீர் துளிப்ப மெய்எலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே. (2)

பாணனைக் கண்டதும், திருமுகம் கொண்டதும், அரசன் பரவசமாய் உள்ளம் உருகி நின்றதும், கண்ணீர் பெருகிய மெய்ப்பாடும் இங்கே நன்கு தெரிய வந்துள்ளன.

நெஞ்சம் களித்து நெடிது வியந்து நின்றவன் பின்பு திருமுகத்தைப் பிரித்துப் பார்த்தான். பிரியமானவசனங்கள் பெரிய வியப்புகளுடன் அரிய பேரின்பங்களை விளைத்தன.

திருமுகவாசகம்.

மின்னவிரும் செம்பொன் மணி மாடக்கூடல்
மேயசிவன் யாம்எழுதி விடுக்கு மாற்றம்
நன்னர்முகில் எனப்புலவர்க்கு உதவும் சேர
நரபாலன் காண்க தன்போல் நம்பால் அன்பன்
இன்னிசையாழ்ப் பத்திரன்தன் மாடே போந்தான்
இருநிதியம் கொடுத்துவர விடுப்பது என்னத்
தென்னர்பிரான் திருமுகத்தின் செய்தி நோக்கிச்
சேரர்பிரான் களிப்பு எல்லை தெரியான் ஆகி.

(திருவிளையாடல்)

பாண பத்திரன் கொண்டு வந்த முடங்கலில் முடங்கி இருந்த வாசகங்கள் அடங்கலும் வாசித்தவுடன் மடங்கல் ஏறனைய மன்னன் அடங்காத ஆனந்தத்தால் ஆவி பூரித்து அதிசயம் மீதூர்ந்து இறைவனைத் துதி செய்து தொழுதான்.

பாணனைத் தனது பட்டத்து யானை மேல் ஏற்றி இராச வீதிகளில் பவனிவரச் செய்து இராச மரியாதைகளோடு

அரண்மனைக்குள் அழைத்துப் போய் அரிய பல உபசாரங்கள் புரிந்து அறுசுவையான உணவுகள் வரிசையா ஊட்டினுன். பின்பு நிதியறையைத் திறந்து காட்டி யாவும் எடுத்துக் கொள்ளும்படி ஆர்வத்துடன் வேண்டி நின்றுன். வேந்தனுடைய சித்த சுத்தியையும் பத்திப் பரவசத்தையும் பார்த்துப் பத்திரன் உள்ளம் உருகினுன். "அரசர் பெருமி! உங்கள் கையால் கொடுத்தது போதும்; நான் எடுத்துக் கொள்ளேன்" என்று பாணன் கூறவே சேரமன்னன் அரிய பல நிதிகளை வாரி வாரிக் கொடுத்தான். தேர் யானை குதிரை சிவிகை முதலியன யாவும் குவிகையனுய்த் தந்ததோடு அமையாமல் அவன் பின்னே நடந்து நெடிது தூரம் தொடர்ந்து சென்று உழுவலன்போடு தொழுது வழி அனுப்பினுன். மரியாதை முறைகள்பிரியம்பெருகி நின்றன.

மன்னன் தான்எண் ணியவாற்ருல்
　　வழங்கவழங்க மறுத்து மறுத்து
இன்னல் தீரும் இசைக்கிழவன்
　　இலங்கும் பொலம்பூண் இருநிதியம்
பொன்னஞ் சிவிகை கரிபரிமான்
　　பொற்பட்டாடை பல பிறவும்
தன்ன தென்னும் அளவாற்ருல்
　　தானே கொள்ளத் தார் வேந்தன். (1)

பின்ஏழ் அடியோ சேட்சென்று
　　பெருமைசான்ற வரிசையினுல்
தன்னேர் இசையான் தனைவிடுத்து
　　மீண்டான்ஆகத் தமிழ் மதுரை
மின்னேர் சடையார் இசைத்தொண்டன்
　　தானுமீண்டு வெயில் விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன்
　　போல மதுரை நகர்புக்கான்; (2)

வந்து மதுரைப் பெருமானை
வணங்கிக் கொணர்ந்த நிதிஎல்லாம்
இந்து மருமான் நகர்உள்ளார்
யாரும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும்
புலவோர் தமக்கும் முறைநல்கிச்
சந்த யாழின் இசைப் பாணர்
தருமம்அனையான் வைகினன்.

[திருவிளை, திருமுகம் 28-30]

பாணபத்திரன் சேர மன்னனிடம் சென்று பரிசில் பெற்று மீண்டு மதுரையை அடைந்து பரமனைத் தொழுது வணங்கி அரிய பல தருமங்கள் புரிந்து உரியவர்களுக்கு உதவிச் செல்வ வளங்களோடு சிறந்து வாழ்ந்து வந்தான்.

தருமிக்கு ஒரு கவியைத் தந்து வழுதியின் தங்கத் திரளைச் சங்கத்திலிருந்து வாங்கிக் கொடுத்தான்; பாண னுக்கு ஒரு பாட்டை நீட்டிச் சேர வேந்தனிடமிருந்து யானை தேர் பரிகள் முதலிய அரிய பல நிதிகளை அளித்து அருளினன். கவிஞர் பெருமானுயிருந்து இறைவன் புரிந்து வருகிற திருவிளையாடல்கள் அளவிடலரிய அதிசயங்களை விளைத்து வருகின்றன. இயலும் செயலும் உயர் கலைகளை வளர்த்து உணர்வுகளை விரித்து ஒளிபுரிந்து மிளிர்கின்றன.

"குழகன் குன்றக் கூடலம் பதிநிறை
மஞ்சடை குழற்பெறு செஞ்சடைப் பெருமான்
அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியில் கேட்ட காவியங் களத்தினன்
திருக்கண் கண்ட பெருக்கினர்" [கல்லாடம், 51]

இறைவன் நெற்றித் தீ பாய முன்னம் பொற்றாமரை

யில் வீழ்ந்த கீரன் துதித்தான்; அத் துதி மொழிகளைத் கேட்டு அருள் புரிந்த நீலகண்டனது கோலம் கண்டவர் ஞாலம் ஆளும் பெருந்திருவை மருவுவர் என இது குறித் துள்ளது. அரிய பரனைக் கருதுபவர் பெரிய நிலையுறுகிறார்.

> பரிபுரக் கம்பலை இருசெவி யுண்ணும்
> குடக்கோச் சேரன் கிடைத்துஇது காண்கென
> மதிமலி புரிசைத் திருமுகம் கூறி
> அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
> பெறநிதி கொடுக்கென உறவிடுத்து அருளிய
> மாதவர் வழுத்தும் கூடற்கு இறைவன்
> இருசரண் பெருகுநர் போலப்
> பெருமதி நீடுவர் சிறுமதி நுதலே. (கல்லாடம், 13)

சேர மன்னனுக்கு ஒரு திருமுகம் தந்து பாணபத்தி ரனைப் பெருநிதியாளனச் செய்த மதுரை இறைவன் திருவடி கருதினர் பெருமதி நீண்டு விழுமிய கல்விச் செல்வராய் விளங்குவர் எனக் கல்லாடர் இங்ஙனம் நன்கு விளக்கி யிருக்கிறார். தெய்வ சிந்தனை திவ்விய நிலைகளை அருளுகிறது.

பொருட் செல்வம் கல்விச் செல்வம் அறிவுச் செல்வம் அருட் செல்வம் ஞானச் செல்வம் முத்திச் செல்வம் யாவும் நிறைந்த மதுரைப் பரமனைப் பத்தியுடன் கருதி வருவார்க்கு அவை உறுதியாய் உளவாம் என உணர்த்தியுள்ளார்.

செந்தமிழ் சோமசுந்தரப் பெருமானுக்குச் சுயமான சொந்த மொழியாய்த் துலங்கி வந்துள்ளது. அந்த மொழி யை உரிமையோடு சிந்தை தெளிந்த புலவர்கள் பால் இந்த இறைவன் காட்டியிருக்கும் பந்தபாச உறவுகள் அதிசய நிலைகளில் நீண்டு யாண்டும் துதிகொண்டு நிலவுகின்றன.

ஆருவது அதிகாரம்.

இடைக் காடர்க்கு இசைந்தது.

குலேச பாண்டியன் என்பவன் வழுதி மரபில் விழுமிய நிலையில் விளங்கியிருந்தான். இவன் இராசேச பாண்டியனு டைய அருமைத் திருமகன். நல்ல அழகன். அரிய பல கலை கள் தெளிந்தவன். இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்த் துறைகளிலும் ஆன்ற புலமையுடையவன். எதையும் கூர்ந்து ஓர்ந்து உணரும் நுண்ணிய மதிமாண்பினன். ஆட்சி முறைகளில் மாட்சி மிக நிறைந்தவன். இவன் அரசு புரிந்து வருங்கால் நாடு நலம் பல பெற்றுவிளங்கியிருந்தது.

இவனுடைய புலமை தலைமைகளை அறிந்து வியந்திருந்த இடைக்காடர் இவனை நேரே வந்து காணவேண்டும் என்று வேணவாவோடு நெடுநாள் விழைந்து நின்றார். இவர் சிறந்த புலவர்; உயர்ந்த கவிஞர்; நெறியும் நீர்மையும் நிறைந்தவர்; உறுதியும் மானமும் உள்ளத் துணிவும் உடையவர்; எதை யும் விரும்பாதவர்; எவரையும் போய் எளிதே பாராத இவர் பெரிய அறிவாளி என்ற அந்த உரிமையால் இந்த அரசனை வந்து கண்டார். மன்னன் மேல் பாடியிருந்த பனுவல்களை இனிமையாகப் பாடினர். சொல் அழகும் பொருள் அழகும் நிறைந்து சுவை சுரந்திருந்த கவிகளைச் செவி குளிரக் கேட் டும் செழியன் முகம் மலர்ந்து நோக்காமல் கழி பெருஞ் செருக்கோடு அகம் திரிந்திருந்தான். தமிழ்ச் சுவை தெரிந் தவன், கலைஞானம் வாய்ந்தவன் என்று நம்பி வந்த புலவர் அவனது நிலைமையை உணர்ந்து நெஞ்சம் கவன்றார். மாறு பாடு மண்டி மன்னன் வேறுபட்டிருப்பதைக் கண்டதும் புலவர் மானத்தால் மறுகி நொந்து விரைந்து வெளியே வந்

தார். சாலவும் பரிந்து ஆலயம் புகுந்தார். பெருமான் சந்நிதியில் நின்று உள்ளம் உருகி ஓலமிட்டு அழுது பாடினர்.

இடைக் காடர் முறையிட்டது.

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்து அருந்த வல்லோன் உள்ளத்து
அழுக்காற்ருல் சிரம்துளக்கான் அகமகிழ்ச்சி
சிறிதும் முகத்து அலர்ந்து காட்டான்
எழுக்காயும் திணிதோளான் ஒன்றும்உரை
யான்வாளா இருந்தான் ஆய்ந்த
குழுக்காதல் நண்புடையான் தனைமானம்
புறம்தள்ளக் கோயில் புக்கான். (1)

சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழறியும்
பெருமானே! தன்னைச் சேர்ந்தார்
நன்னிதியே! திருவால வாயுடைய
நாயகனே! நகுதார் வேம்பன்
பொன்னிதிபோல் அளவிறந்த கல்வியுமிக்
குளன்என்று புகலக் கேட்டுச்
சொன்னிறையும் கவிதொடுத்தேன் அவமதித்தான்
சிறிதுமுடி துளக்கா னகி. (2)

பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்கு
அகமகிழ்ந்து ஓர் பயனும் நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே
அடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான்
தொடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே என இவற்ருேர்
அஃறிணைஒத் திருந்தான் எந்தாய்! (3)

என்னை இகழ்ந் தனனேசொல் வடிவாய்நின்
இடம்பிரியா இமயப் பாவை
தன்னையும்சொற் பொருளான உன்னையுமே
இகழ்ந்தனன்; என்றனக் கியாதென்று
முன்னைமொழிந்து இடைக்காடன் தணியாத
முனிவீர்ப்ப முந்திச் சென்றான்
அன்னவுரை திருச்செவியின் ஊறுபாடு
எனஉறைப்ப அருளின் மூர்த்தி; (4)

போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும்
அகத்துவகை பொலியு மாற்றான்
ஞானமயம் ஆகியதன் இலிங்கவுரு
மறைத்து உமையாம் நங்கையோடும்
வானவர்தம் பிரான்எழுந்து புறம்போய்த்தன்
கோயிலினேர் வடபால் வைகை
யானநதித் தென்பால்ஓர் ஆலயம் கண்டு
அங்கண் இனிது அமர்ந்தான் மன்னோ. [திருவிளையாடல்]

இடைக்காடருடைய உள்ளக் கொதிப்புகளையும், உற்றுள்ள நிலைகளையும் இவை உணர்த்தியுள்ளன. தம்முடைய பாட்டைக் கேட்டும் மன்னன் மதித்து மரியாதை செய்யாமல் அவமதித்திருந்தான் என்ற மன வேதனையும் மான உணர்ச்சியும் புலவரை எரித்திருக்கின்றன. சினமும் சீற்றமும் வீறோடு சீறி எறியிருத்தலால் மொழிகள் நெருப்புகளை கக்கி வெளி வந்திருக்கின்றன. தமிழ் அறியும் பெருமானே! என்று இறைவனை நோக்கிக் கூவியிருக்கிறார். தமிழ் மொழி சிவபெருமானுக்குத் தனியுரிமையானது; அத்தகைய தெய்வ மொழியைப் பயின்று தெளிந்த புலவர்களை எவன் அவமதித்தானோ அவன் சிவத்துரோகி ஆகிறான்; மண்ணுளும் மன்னனாயிருந்தாலும் விண்ணுளும் தேவனாயிருந்தாலும் தமிழ்க் கவிஞரை எண்ணி மதித்து ஏற்றிப் போற்றாதவன்

இழிந்தவனே ஆவான்: "ஆண்டவா! இந்தக் குலேச பாண்டியன் படித்தவன்; தமிழருமை தெரிந்தவன் என்றே கருதிச் சிறந்த கவிகளை அவன் மேல் பாடினேன்; கேட்டான்; கேட்டும் மாட்டு மதியாய்க் காட்டு விலங்காய் நீட்டு மரமாய் நெடிய கழியாய்க் கடிய மண்ணாய்க் கொடிய மடமையோடு கொழுத்துச் செருக்கியிருந்தான். மொழி அருமை தெரியாமல் புலவர்களுடைய பெருமையை உணராமல் விழி கண் குருடனாய் அவன் இருந்த நிலையை எண்ணுந்தோறும் என் நெஞ்சம் எரிகிறது. இந்த இகழ்ச்சி என்னைச் சேராது; சொல் வடிவமாயுள்ள உமாதேவியையும், பொருள் உருவமாயிருக்கின்ற பரமேசுவரனாகிய உன்னையுமே சேரும்; செந்தமிழ்த் தெய்வம் நீ; இந்த நிந்தை உனக்கே; நிந்தை கேளாமல் நான் நொந்து வருந்துகிறேன்; ஈசா! இனி நான் இவ்வூரில் இரேன்; தமிழின் அருமை தெரியவில்லையானால் அது அமிழ்தம் தரும் வானகம் ஆயினும் நான் அதனை மதியேன்; மானம் உயிரினும் பெரியது" என இவ்வாறு பரமபதியிடம் முறையீடு செய்து விட்டு மூண்ட முனிவோடு புலவர் வெளியே போய் விட்டார்.

இறைவன் போனது.

புலவர் இவ்வாறு புலந்து வெளியே போகவே இறைவனும் அவர் பின்னே தொடர்ந்து போயினர். இறைவியும் மறைந்து போனாள். கோவிலுள் இருந்த சிவலிங்கம் கரந்து போயது. மூல நிலையம் காலியா யிருந்தது. ஆலயம் அருள் இழந்து ஒளி மழுங்கிச் சாலவும் பரிதாபமாய்க் கிடந்தது. திருவிழந்த தாமரை மலர்போல் ஊர் முழுதும் சீர் அழிந்து சிறுமை அடைந்தது. அந்த இரவு அவலமாய்ப் பெருகி நின்றது. தெய்வ ஒளி நீங்கியதால் வெய்ய இருள் ஓங்கியது.

வைகறையில் பள்ளி எழுச்சிப் பூசை புரிய அருச்சகர்கள் முறையே வந்தனர். கதவைத் திறந்து உள்ளே புகுந்தார்; சிவலிங்கத்தைக் காணேம்; உள்ளங்கலங்கினர்; திகில் அடைந்து திகைத்து யாதும் தெரியாமல் மறுகி மயங்கினர்; உருகி உளைந்தார்: என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கித் திகைத்த அவர் பின்னர் மன்னனிடம் வந்து இன்னலோடு இசைத்தார்: "அரசர் பெரும! காலை வழிபாடு செய்ய இன்று ஆலயத்துள் புகுந்தோம்; ஆண்டவனை அங்கே காணேம்; நெஞ்சம் கலங்கி நெடிது மறுகினேம்; யாது செய்வது ஐயனே!" என்று கைகளை உதறிக் கண்ணீர் சொரிந்து அழுதார். பரிதாப நிலையில் யாவரும் பதறி நின்றார்.

சிவலிங்கத்தைக் காணேம் என்று பட்டர்கள் பதறிக் கதறவே வேந்தன் உள்ளம் துடித்து உயிர் பதைத்துக் கீழே வீழ்ந்தான். துயரத்தீயில் உயிர் அலமந்தது; செயலிழந்து மயலுழந்து அயல் யாதும் அறியாமல் மறுகிப் புலம்பினன்.

மன்னன் மறுகி விழுந்தது.

வழுதிஅரி யணையிலிருந்து அடியிற வீழ்
பழுமரம் போல் மண்மேல் யாக்கை
பழுதுற வீழ்ந்து உயிர்ஒடுங்க அறிவொடுங்கி
மட்பாவை படிந்தாங்கு ஒல்லைப்
பொழுது கிடந்து அறிவுசிறிது இயங்களழுந்து
அஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதுஇருகண் ணீர்வெள்ளத்து ஆழ்ந்தடியேன்
என்பிழைத்தேன் அண்ணல்! அண்ணல்! [1]

பரிந்து புலம்பியது.

கொலையினைஓர் அவுணர்புரம் நொடிவரையில்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ! பழையசிவ புரத்தினையோ
அருவிமணி தெறிக்கும் வெள்ளி

மலையினையோ! தம்மைமறந் துனைநினைப்பார்
மனத்தினையோ! வாழ்த்தும் வேதத்
தலையினையோ! எங்குற்றாய்? எங்குற்றாய்?
என்றென்று தளரும் எல்லை. [2]

அரசன் அடைந்துள்ள பரிதாப நிலைகளை நம் விழி தெரிய இவை தெளிவா விளக்கியுள்ளன. இக்கோமக னுடைய அறிவு அன்பு நெறி நேர்மை நிலைமை தலைமை முதலிய நீர்மைகள் எல்லாம் இங்கு நேரே தெரிய நின்றன.

ஈசன்பால் இவன் கொண்டுள்ள பாசமும் பத்தியும் ஈண்டுக் கூறியிருக்கும் வாசங்களால் நன்கு தெரிந்து கொள் கிறோம். உரை செயல்கள் உண்மைநிலையைவெளிசெய்தன.

சிவலிங்கத்தைக் காணோம் என்று வேதியர் வந்து கூறிய வுடனே அரியணையிலிருந்து அலமந்து கீழே வீழ்ந்தி ருக்கிறான். உயிர் ஒடுங்க அறிவு ஒடுங்கி என்றதனால் அது பொழுது இவன் அடைந்துள்ள துயர நிலைகளையும் உயிர் வேதனைகளையும் ஓர்ந்து எவரும் உணர்ந்து கொள்ளலாம்.

படித்தலத்தில் இவ்வாறு துடித்து விழுந்து கிடந்தவன் பின்பு உயிர்த்து எழுந்து உள்ளம் உருகிக் கண்ணீர் வெள் ளம் பெருகி ஓட மறுகி அழுது மதிமருண்டு புலம்பியிருக் கிறான். சோகத்தில் விவேக ஒளிகள் வெளி வீசியுள்ளன.

சோமசுந்தரப் பெருமானை இவன் எவ்வாறு கருதியிருந் தான்? உழுவலன்போடு எப்படி வழிபட்டுத் தொழுது வந் துள்ளான்? என்பதை ஈண்டு நிகழ்ந்துள்ள செயல்களும் நீண்டு மொழிந்துள்ள உரைகளும் உலகறிய வெளிப்படுத்தி யுள்ளன. கலைஞானங்கள் கதி நிலை ஓங்கி நிலவுகின்றன.

இத்தகைய பத்தியும் ஞானமும் சித்த சுத்தியும் உடைய உத்தம வேந்தன் செந்தமிழ்க் கவிஞரிடம் சிறிது பிழை

செய்ய நேர்ந்தமையால் பெரிய துயரங்களை அனுபவிக்க நேர்ந்தான். நல்ல மனம் நொந்ததால் அல்லல்கள் மூண்டன.

மன்னன் பிழை மன்னுயிர்க்கெல்லாம் இன்னலாய் எழுந்தது. மதுரைமா நகர் மதுரம் இழந்து மறுகியிருந்தது.

தனது குலதெய்வம் குடிவாங்கிப் போனமையால் இக் குலமகன் குலை துடித்து நிலைகுலைந்து நெடிது பதைத்து அழுதான். அழிதுயரங்கள் யாண்டும் நீண்டு விரிந்தன.

புலமை என்பது தலைமையான அறிவு ஆதலால் அதனை என்றும் தனக்குத் தனியுரிமையாகவுடைய பரமன் அந்த நிலைமையை இங்கே உலகம் அறிய உணர்த்தியருளினான்.

மேலான நூலறிவோடு நிலையான வாலறிவு யாண்டும் தொலையாத தொடர்பு உடையது; ஆகவே அந்த நூலறிவ னோடு தொடர்ந்து இந்த வாலறிவனும் உறவுரிமையாய்ப் போக நேர்ந்தான். ஆண்டவன் போனது அதிசயமானது.

இடைக்காடனோடு இனமாய்ச் சடைக்காடன் சடையாமல் போயிருப்பது படைக்காடனை பாண்டிய னுக்கு நீண்ட துயரமாய்ப் படர்ந்து நெடிது ஓங்கி நின்றது.

கவிராசரை மதித்துவரும் அளவே புவிராசர் செழித்து வருவர்; மதிகெட்டு மதியாமல் நின்றால் அவர் பதிகெட்டுப் பாழாய் அழிவர் என்பதை இச்செழியன் ஈண்டு விழி தெரிய விளக்கினான். தெய்வமும் தெளிந்து நின்றது.

சிறந்த கற்புடைய மகளிர்க்குத் தேவரும் ஏவல் செய் வர்; அவர் வாய் திறந்து "மழையே! பெய்" என்றால் அது உடனே பெய்துவிடும்; உயர்ந்த கற்புடைய கவிஞர்க்கு அற்புத மூர்த்தியான கடவுளும் உறவுரிமையாய் நின்று உதவி புரியும். மகவைப்போல் கவியைப் பரன் பேணுகிறான்.

அந்த உண்மையை இறைவன் இங்கே எண்மையாய்த் துலக்கி உலகம் நன்மையுற நன்கு உணர்த்தி யருளினன்.

நம் புலவர் பரமனோடு உரிமையாய்ப் புலந்து மொழிந்துள்ள உரைகள் விநயமான ஞான ஒளிகளை வெளியே வீசி மானம் மரியாதைகளை மருமமாத் துலக்கி யுள்ளன.

என்னை இகழ்ந்தன னோ?

என்றது மன்னன் என்னை இகழவில்லை; உன்னையும் உன் மனைவியையுமே இகழ்ந்துள்ளான்: எனக்கு இதில் என்ன வந்தது? எனத் தன்னை நன்னயமாய் விலக்கியிருப்பது தெரியவந்தது. உண்மையைஉறுதியா விளக்கியருளினர்.

சொல்வடிவாய் நின் இடம் பிரியா அன்னையையும்
சொற்பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்.

மன்னவன் இகழ்ந்தது என்னை அன்று; உங்கள் இருவரையுமே எனப் புலவர் ஒருவியுள்ள நிலையை இது உணர்த்தியுள்ளது. ஞான மூர்த்திக்கு மான உணர்ச்சியை இவ்வாறு மூட்டியிருக்கிறார். சொல்லின் சுவை உள்ளியுணர வுரியது.

சொல் ஒலி வடிவமானது. ஒலி இருவகை நிலையது; பொருளுடையது, பொருள் இல்லது என அது மருவியுளது. பொருள் உடைய ஒலியே மொழி ஆகிறது. பெண்மை ஆண்மை என்னும் இருபாலால் உலகம் இயங்கி வருகிறது. வரவே சொல் சத்தி ஆகவும் பொருள் சத்தன் ஆகவும் உய்த்துணரவந்தது. நாத தத்துவங்கள்போதங்களுடையன.

புலமை, மொழியால் ஒளி பெற்று வருகிறது.
மொழி, சொல்லும் பொருளும் தோய்ந்துளது.
சொல்லோ, பொருளோடு பொலிந்துள்ளது.

புலவரை மதியாதவன் புலமையை இகழ்ந்தான்; அதனை இகழ்ந்தவன் மொழியை இழிவு செய்தான்; அந்த இழிவால் சொல்லையும் பொருளையும் எள்ளி நின்ருன்; அந்நிலை சத்தியையும் சிவனையும் அவமா இளிவு செய்த பழியாயது.

இந்தக் கொடிய பழியை வேந்தன் வீணே செய்து விட்டான் எனப் புலவர் ஈண்டு உலக விழிதெளிய உணர்த்தியருளினர். வாதமுறை போத நிறையாய் மேவியுள்ளது.

ரகுவம்சம் என்னும் அரிய காவியத்தை வடமொழியில் இயற்றியுள்ள காளிதாசர் முதலில் கடவுளை வணங்கி நூலைத் தொடங்கியிருக்கிருர். அவர் தொழுது துதித்துள்ள வகையை அயலே வருகிற சுலோகத்தால் அறிய வருகிறேம்.

வாகர்த்தாவிவ ஸம்பிருக்தௌ வாகர்த்தப்ரதி பத்தயே
ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ.

(ரகுவம்சம், 1)

சொல்லும் பொருளும் போல் நன்ருய் ஒன்று சேர்ந்திருப்பவரும், உலகத்திற்குத் தாயும் தந்தையுமாயுள்ளவரும் ஆகிய பார்வதீ பரமேசுவரரை மொழி அறிவும் பொருள் உணர்வும் எனக்குத் தெளிவாக உண்டாகும் பொருட்டு நான் வணங்குகிறேன் என இவ்வாறு அக் கவிஞர் ஈசனைத் துதி செய்து பின்பு காவியத்தை ஆரம்பித்திருக்கிருர்.

இந்த மங்கள சுலோகத்தை மகிழ்ந்து வியந்து ரைடர் என்னும் அறிஞர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிருர்.

God Siva and his mountain bride,
Like word and meaning unified,
The world's great parents, I beseech
To join fit meaning to my speech. (A. W. Ryder)

சத்தி யாய்ச்சிவம் ஆகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே. (திருவிளையாடல்)

சத்தியும் சிவமும் ஆன பரம்பொருளை நான் துதி செய்ய நல்ல சொல்லும் பொருளும் எனக்கு நல்க வேண்டும் என விநாயக மூர்த்தியைப் பரஞ்சோதி முனிவர் இவ்வாறு உரிமையோடு போற்றி வேண்டியிருக்கிறார்.

சிவனே எல்லா வற்றையும் இயக்கி வருகிறான்.

அவன் அன்றி ஓரணுவும் அசையாது

என்பது பழமொழி வழக்காய் வந்துள்ளது.

சிவநி ஆக்ஞ லேக சீம கறவது.

சிவனுடைய ஆணை இல்லாமல் எறும்பும் கடியாது.

தெலுங்கு மொழியிலும் இவ்வாறு சிவ பெருமானுடைய அதிசய மகிமையைத் துதி செய்து வருகின்றனர்.

எல்லாம் வல்ல இறைவன் சொல்லும் பொருளுமாய் நின்று அகில உலகங்களையும் நலமா ஆட்டியருளுகின்றான்.

சொல் வடிவமான சத்தியைத் தன் இடத்தே வைத்துப் பொருள் வடிவமாய்ப் பொலிந்துள்ள சிவபரம் பொருளைச் செழியன் இழிவாய் இகழ்ந்து விட்டான் எனப் புலவர் அவன் மேல் பழியை ஏற்றி விட்டு வெளியே போய் விடவே பரமனும் உறவுரிமையுடன் கூடவே போய்விட்டார்.

ஆண்டவனைக் காணுமையால் பாண்டிய மன்னன் பரிதாபமாய் அழுது மறுகினான். அப்பொழுது சிலர் ஓடிவந்து "மன்னர் பெரும! வைகை நதியின் தென்பால் நம் ஐயன் கோயில் கொண்டுள்ளார்" என்று ஆவலோடு மொழிந்தார்.

அதனைக் கேட்டதும் வேந்தன் விரைந்து சென்றான்; நேரே கண்டான்; படியில் நெடிது விழுந்து தொழுதான்; உழுவலன்போடு விழி நீர் சொரிந்து அழுதான். அடியேன் என்ன பிழை செய்தேன்? யாது தவறு இழைத்தேன்? என்று இன்னல் மீதூர்ந்து புலம்பி ஏங்கித் தவித்தான்.

உள்ளம் உடைந்து உணர்வு கலங்கி அரசன் உருகி மொழிந்த உரைகள் அரிய பரிபவங்களாய்ப்பெருகிவந்தன.

படர்ந்துபணிந்து அன்புகுக்கும் கண்ணீர் சோர்ந்து
ஆனந்தப் பௌவத்து ஆழ்ந்து
கிடந்துஎழுந்து நாக்குழறித் தடுமாறி
நின்றிதனைக் கிளக்கும்: வேதம்
தொடர்ந்தறியா அடிசிவப்ப நகர்புலம்ப
உலகு ஈன்ற தோகையோடுஇங்கு
அடைந்தருளும் காரணம்என்? அடியேனால்
பிழையுளதோ? ஐயா! ஐயா! (1)

அல்லதைஎன் தமரால்என் பகைஞரால்
கள்வரால் அரிய கானத்து
எல்லைவிலங்கு ஆதிகளால் இடையூறின்
தமிழ்நாட்டில் எய்திற் றுலோ?
தொல்லைமறை யவர்ஒழுக்கம் குன்றினரோ?
தவம்தருமம் சுருங்கிற் றுலோ?
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ?
யான்அறியேன் எந்தாய்! எந்தாய்! (2)

இந்தவாறு சிந்தை நைந்து மன்னன் மறுகிப் புலம்பினன். மனம் உருகி வந்துள்ள வார்த்தைகள் அவனுடைய குணநலங்களை வார்த்துக் காட்டியுள்ளன. மறுகிப் புலம்பும் பொழுது வானிலிருந்து ஒரு ஒலி எழுந்தது: "குலேச! நீ கிலேசம் அடையாதே! புலவரை மதித்து நீ மரியாதை செய்யாமல் இருந்தது பெரிய பிழை; நூலறிவனை உவந்து போற்

ருதவன் வாலறிவன் ஆன என்னை இகழ்ந்தவன் ஆகின்ருன்; ஆகவே வெளிஏற நேர்ந்தேன்" என்று இவ்வாறு அசரீரி கூறவே அரசன் உணர்ந்து உள்ளம் வருந்தினன். "மடமையால் அடிமை செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்; எம்பெருமானே! இனிமேல் நான் இவ்வாறு செய்யேன்; அந்தப் புலவர் பெருமானை அழைத்து வந்து நான் இழைத்த பிழையை மன்னித் தருளும்படி தொழுது வேண்டுவேன்; ஆண்டவா! மீண்டு வந்து கோயிலுள் எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிநின்ருன்; உடனே இறைவன் அருள் புரிந்து பழைய படியே ஒளி செய்து விளங்கினன். ஆலவாய் ஆலயம் புகுந்து யாவரும் துதி செய்து தொழுதனர். பெருமான் அன்று போயிருந்த இடம் பழைய சோக்கநாதர் கோவில் என்று இன்றும் விளங்கி வருகிறது. பூசை முதலிய வழிபாடுகள் ஒழுங்காய் நடந்து வருகின்றன. புலவர் புகழ் உலகில் ஒளி மிகுந்து நிலவியது.

வேந்தன் இடைக்காடரை அழைத்து வந்து தான் செய்த பிழையைப் பொறுத்து அருளும்படி தொழுது வணங்கி உபசரித்து மரியாதைகள் பல செய்தான். பொன் மணி முதலிய பரிசில்கள் பல தந்தான். "பொருள் எனக்கு வேண்டாம்; நீ வரிசை யறிந்து புரிந்த வழிபாடே போதும்" என்று புலவர் தடுத்தும் சிவிகையில் ஏற்றி அவரைப் புகழ்ந்து துதித்துப் பின் தொடர்ந்து போய் வழி அனுப்பினன். பாவலர் மகிமையைக் காவலன் தெளிந்தான்.

சங்கப் புலவரிடமும் சென்று தான் செய்த சிறுமையைச் சிந்தையில் கொள்ளாதபடி அருள் புரிய வேண்டும் என்று பொருள் பொதிந்த மொழிகளால் அரசன் பரசி வேண்டினன். அவனது பணிவும் பண்பும் இனிமையாவந்தன.

அறிவுடைக் காடனுக்கும் அருமைமாண் புலமையோர்க்கும்
முறைமையால் ஆரம் தூசு முகிழ்முலைக் கொடிமின் அன்னார்
நிறைநிதி வேழம் பாய்மான் விளைநிலம் நிரம்ப நல்கி
அறைகழற் காலிற்பின்ஏழ் அடிநடந்து இதனை வேண்டும்: [1]

புண்ணியப் புலவீர்! யான்இப் போழ்து இடைக் காடருக்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்கெனப் பரவித்தாழ்ந்தான்;
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீ தணிந்தது என்னு; (2)

இன்னமும் ஆலவாய் எம் இறையவன் கருணை நோக்கால்
பன்னரும் புகழ்மை குன்றுப் பாக்கியம் உனக் குண்டாக
என்னநல் ஆக்கம் கூறி ஏகினு ராக அந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவம்உருத் திரிந்தாலென்ன. (3)

(திருவிளையாடல்)

வழுதி வேந்தனுடைய விழுமிய நீர்மைகளைப் புலவர் பலரும் புகழ்ந்து மகிழ்ந்தனர். மேலே நடந்துள்ள நிகழ்ச்சிகள் வியப்புகளையும் மகிழ்ச்சிகளையும் ஒருங்கே விளைத்திருக்கின்றன. அரிய விளைவுகள் இனிய அறிவுகளாயுள்ளன.

தமிழ்மொழியும் புலமையும் இறைவனுக்கு எவ்வளவு பிரியம் உடையன! எத்தனை உறவுரிமைகள் தோய்ந்தன! என்பதை ஈண்டு உய்த்துணர்ந்து உவந்து கொள்கிறோம்.

புலவர்களிடம் எவ்வளவு கருணை! எவ்வளவு ஆர்வம்! இறைவன் கொண்டுள்ளான். நிலைமைகளைக் கருதியுணரும் தோறும் நெஞ்சம் உருகுகிறது; நெடிது மகிழ்கிறது.

திருக்குறளின் சிறப்பு.

திருவள்ளுவ தேவர் தமது நூலைச் சங்கத்தில் அரங்கு ஏற்றினர். சங்கப் புலவர்கள் அதனை வியந்து புகழ்ந்தனர். தலைமைப் புலவரான இறையனுர் அந் நூலின் நீர்மை சீர்

மைகளைக் குறித்து ஒரு கவி பாடியுள்ளார். அரியபல சுவைகளை இனிது காட்டியுள்ள அப்பாட்டு அயலே வருகின்றது.

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்---குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். (இறையனார்)

திருக்குறளின் மகிமையை இது இவ்வாறு வரைந்து காட்டியுள்ளது. என்றும் குன்றுமல் எவ்வழியும் புதுமையாய்ச் சுவை சுரந்து உயிர்களுக்கு உணர்வு நலங்களை உதவி இன்பம் புரிந்து வரும் என அதன் அதிசய மேன்மைகளைத் துதிசெய்து அருளியிருக்கிருர். உருவகம்கருதியுணரவுரியது.

செந்தளிர்க் கற்பகம்: தெய்வத் திருமலர் என்றது அதனைச் சிந்தித்து ஒழுகி வருபவர் இருமையும் பெருமையாய் இன்பம் எய்தி வரும் திவ்விய நிலையை உணர்த்தி நின்றது. நூலின் சால்பை ஞாலம் அறிய அருளினுர்.

தமிழ் மொழியையும் அதன் கலைகளையும் புலவர்களையும் இறைவன் இனிது புரந்து வந்துள்ள நிலைகளை மேலே வந்துள்ள செயல்கள் தெளிவா விளக்கி ஒளி புரிந்துள்ளன.

செந்தமிழின் பாவலனைத் தென்னவன் முன்
மதியாமல் செருக்கி நின்றுன்
அந்தமன வேதனையால் அப்புலவன்
அயல் அகன்றுன்; அவன்பின்னே போய்ச்
சந்ததமும் ஆனந்த வடிவான
உமையோடு சார்ந்தான் ஈசன்;
எந்த மொழி இந்த மொழி இறைஒளியை
எய்தியுளது? இயம்பு வீரே!

இதனைச் சிந்தனை செய்து பதில் சொல்ல வேண்டும்.

ஏழாவது அதிகாரம்.

இசை இசைத்தது.

இறைவன் மூன்று சங்கங்களிலிருந்து மொழியை ஆதரித்தது போல் மூவகையான தமிழையும் ஆதரித்துள்ளார். இயல் இசை நாடகம் எனத் தமிழ் மூன்று பிரிவுகளையுடையது. மனம் மொழி மெய் என முறையே இவை மருவியுள்ளன, நாடகக் கலையைப் பரமன் ஆதரித்திருப்பதை ஆடக மன்றம் அறிவித்துளது. கூத்தப் பெருமான், அற்புதக் கூத்தன், ஆடலரசு, நடராசன் என்னும் பேரால் நாடகம் இறைவனுல் பீடு பெற்றுள்ளமை தெரிய நின்றது.

இறையனுர் அகப் பொருள் முதலிய இலக்கண நூல்களால் இயலை வளர்த்துள்ளமை அறியலாம். மாகேசுரம் என்னும் அரிய இயல் நூல் முதல் சங்கத்தில் முதல்வனுல் செய்யப் பெற்றிருந்தது. அது முதல் ஊழியில் நேர்ந்த பிரளயத்தால் மறைந்து போயது. இசை நுணுக்கம் என்னும் நூல் இசையைச் சுவை செய்து வந்தது; அதுவும் ஆழியுள் ஆழ்ந்து போயது. போயினும் வாயினுல் இசையை வையம் உய்யச் செய்து அதன் தெய்வ நீர்மையைத் துலக்கியிருக்கிருர்.

சாம கானப் பிரியன் என்னும் பேர் இவர்க்கு என்றும் உரிமையாய் அமைந்துள்ளது. இயலில் உயர்ந்து, இசையில் சிறந்து, நாடகத்தில் தேர்ந்து எவ்வழியும் திவ்விய நிலையில் ஆண்டவன் அருளாடல் புரிந்து வருகிருர். முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிகளுக் கெல்லாம் இவ்வித்தகர் நித்திய சத்தராய் நெடிது நிலவி நிற்கின்ருர்.

இயலாளரை உரிமையோடு பாதுகாத்து வந்ததுபோல் இசையாளரையும் பெருமான் ஆதரித்து அருளியிருக்கிருர்.

ஏமநாதன் வந்தது.

ஏமநாதன் என்பவன் சிறந்த இசைவாணன். வாய்ப் பாட்டோடு யாழிலும் வல்லவன்; சங்கீதக் கலையில் அதிசய நிபுணன். கந்தருவகானன் என வடநாடு முழுவதும் பேர் பெற்றிருந்தவன். அக் காலத்தில் அவனுக்கு நிகரான புலவர் யாரும் இலர் என்று சீரும் சிறப்புமாய்ச் சிறந்திருந்த அவன் மதுரை மன்னனிடம் பரிசில் கருதி வந்தான். அப்பொழுது வரகுண பாண்டியன் அரசு புரிந்திருந்தான். பெயர் இயல் புக்கு ஏற்ப இவன் உயர்ந்த பெருந்தகைமையாளன்; இயலி லும் இசையிலும் பெரும் புலவன். தெளிந்த கலைஞானங்கள் நிறைந்தவன். இந்த மன்னனைக் கண்டு வணங்கி அந்த இன் னிசையாளன் இனிய கானங்களை இசைத்தான். அவனு டைய வியனுன இசையைக்கேட்டு வேந்தன் வியந்து மகிழ்ந் தான்; சிறந்த பரிசில்கள் பல தந்தான்; உயர்ந்த சன்மானங் களை அடைந்து கொண்ட அவன் மீண்டும் ஒருமுறை அரச சபையில் தனது இசையின் கலையைக் கேட்க வேண்டும் என்று வேண்டினன்; பாண்டியன் இசைந்தான்; அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து விடுத்தான். குறித்த மனையில் அவன் தங்கியிருந்தான். நல்ல இசையில் வல்லவன் ஆயினும் தனக்கு எவரும் எங்கும் நிகரில்லை என் னும் உள்ளச் செருக்கு அவனிடம் ஓங்கியிருந்தது. அதனை அரசன் உணர்ந்து தனது ஆதீனப் புலவர்களை அழைத்தான். இசை வல்லுநர் பலரும் வந்து மன்னனை வணங்கி நின்ற னர். "வடநாட்டிலிருந்து வந்துள்ள இசை வாணனோடு இணையாய் நீவிர் பாடுவீரா?" என்று அரசன் கேட்டான். கேட்கவே, "வேந்தர் பெரும! ஆண்டவன் அருளால் அந்த வாணன் நாண இந்தப் பாணன் பாடுவான்" என்று பத்திரன் என்னும் வித்தகன் விசித்திரமாப் பதில் சொன்னுன். சொல்

லவே அரசன் உவந்து நாளை வந்து பாடுக என்று பரிந்து அனுப்பினன். பிரிந்து போன அவன் நேர்ந்திருக்கும் நிலைமைகளை ஓர்ந்து சிந்தித்தான். கூர்ந்து உணர்ந்தான்.

வடதிசையிலிருந்து வந்துள்ள இசை வாணனுடைய கானம் அதிசய நிலையது என்று அறிந்து கொண்ட பாணன் இறைவன் சந்நிதியை அடைந்து முறையீடு செய்து தொழுது துதித்தான். "ஆண்டவா! எனக்கு ஓர் இசைப் போர் மூண்டுள்ளது; எனது மானத்தைக் காத்து அருள்; கானத்தில் நான் தோல்வியடைந்தால் என் பேருக்கும் இவ் வூருக்கும் நாட்டுக்கும் அவமானமேயாம்; என் இசையில் வசை நேராமல் இசை ஏறச் செய்தருள்" என்று உள்ளம் உருகிப் போற்றி விட்டுப் பாணன் வீட்டுக்குப் போனன்.

இசைவாணன் ஆனது.

இவ்வாறு அவன் போகவே மறுநாள் இறைவன் ஒரு கிழவனுய்க் கோலம் கொண்டு விறகு விற்பவன் போல் தலையில் சிறு விறகுச் சுமையை எடுத்து அடுத்த வீதிகள் தோறும் விநோதமா விலை கூறி முடிவில் ஏமநாதன் தங்கியிருக்கும் மனையை அடைந்தான்; வெளித்திண்ணையில் அமர்ந்தான்; இரவு வந்தது; சிறிது போது கழிந்தது; கழியவே மெல்லப் பாட நேர்ந்தான்; மதுரை நாயகன் வாயிலிருந்து மதுர கானம் அமுத தாரையாய் வெளியே பாய்ந்தது; பாயவே உள்ளேயிருந்த இசைவாணன் வியந்து வெளி வந்து பார்த்தான்; புறந்திண்ணையில் அமர்ந்து பொல்லம் பொத்திய ஒரு பழைய யாழைக்கையில் வைத்துக்கொண்டு பாடுகின்ற கிழவனைக் கண்டு அதிசயம் மிகுந்து "நீர் யார் ஐயா!" என்று ஆவலோடு கேட்டான். கேட்கவே, "நான் இவ்வூர் யாழ்ப்பாணரின் அடிமை: அவரிடமே இசை பயின்றேன்; என் போல் பலர் பயின்றுள்ளார்; நான் மிகவும்

முதியவன் ஆனமையால் இனிமேல் பாட இசையாது என்று என்னை விலக்கி விட்டனர்; விறகு விற்றுப் பிழைக்கின்றேன்; இரவில் இங்கு தங்க நேர்ந்தேன்; நேரம் போகாமையால் சாரம் இல்லாமல் கொஞ்சம் பாடினேன்" என்று விறகுப் பாடகன் விரகாய்க் கூறினன்.

இந்த உரைகளைக் கேட்டதும் ஏமநாதன் நெஞ்சம் கலங்கினன்; நெடுந்திகில் அடைந்தான். வேண்டாம் என்று கழிவாத் தள்ளிவிட்ட இந்தக் கிழவனே இப்படிப் பாடினல் அந்த இசைப் புலவன் எவ்வளவு வல்லவனு யிருப்பான்? என்று உள்ளம் அயர்ந்தான். மேலும் கொஞ்சம் பாடும்படி வேண்டினன்; வேண்டவே பாணன் மாணவன் ஆன கிழவன் கானம் இசைத்தான். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளும் சீவனைகளோடு தேசு மிகுந்து விளங்கத் தேவ கீதமும், கந்தருவகானமும் நாணி வீழ வாணி வாழ நாயகன்பாடினன்.

பாணர்தம் பிரானைக் காப்பான் பருந்தொடு நிழல்போக்கு என்ன
யாணரம் பிசைபின்செல்ல இசைத்தஇன் இசைத்தேன் அண்ட
வாணர்தம் செவிக்கால் ஓடி மயிர்த்துளை வழியத் தேக்கி
யாணர்இன் அமுத யாக்கை இசைமயம் ஆக்கிற்றன்றே. (1

தருக்களும் சலியா; முந்நீர்ச் சலதியும் கலியா; நீண்ட
பொருப்பிழி அருவிக் காலும் நதிகளும் புரண்டு துள்ளா;
அருட்கடல் விளைத்த கீத இன்னிசை அமுதம் மாந்தி
மருட்கெட அறிவன் தீட்டி வைத்தசித் திரமே ஒத்த. (2

போதுளான் பரமன்பாதப் போதுளான் ஆனன்; வேலை
மீதுளான் பரமானந்த வேலைமீது உள்ளான் ஆனன்;
தாதுளாம் கமலக் கண்போல் சதமகன் உடலம் எல்லாம்
காதுளான் அல்லேன் என்றுன் கண்ணுளான் கானம்கேட்டு. (3

முனிவரும் தவத்தர் ஆதி முத்தர் மாசித்தர் அன்பின்
துனிவரும் பழங்கண் தீர்ப்பான் சுந்தரத் தோன்றல் கீதம்

கனிவரும் கருணை என்னும் கடலில் அன்பு என்னும் ஆற்றில்
பனிவரும் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட இன்பத்து ஆழ்ந்தார்.

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமாறு அறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும் இசைவலைப் பட்ட அம்மா! (5)

வன்தரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்கள் எல்லாம் செவியறிவு உடைய ஆகி
மென்தளிர் ஈன்று போது விரிந்து கண்ணீரும் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுகம் மலர்ந்த மாதோ. (6)

வாழிய உலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரணம் எல்லாம் அசைவற அடங்கி ஐயன்
ஏழிசை மயமே ஆகி இருந்தன உணர்ந்தோர் உள்ளம்
ஊழியில் ஒருவன் தாள்புக்கு ஒடுங்கிய தன்மை ஒத்த. (7)

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்தமுல்லைப்
பண்ணிறை தேவ கீதம் சராசர உயிரும் பாரும்
விண்ணிறை திசைகள் எட்டும் விழுங்கித்தன் மயமே ஆக்கி
உண்ணிறைஉயிரும் மெய்யும உருக்கியது இசைவல்லானை.
(திருவிளையாடல், விறகு விற்ற படலம்)

சொக்கநாதன் பாடிய கீதத்தைக் கேட்டு அகில சரா சரங்களும் சொக்கியுள்ள நிலைகளை இந்தப் பாசுரங்கள் சுவையா வரைந்து காட்டியுள்ளன. அரிய பெரிய இசைவாணர்கள் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளியவுரிய நாத மருமங்கள் பல இக் கீதத்தில் விளைந்திருக்கின்றன. ஏழு சுரங்களின் தரங்களும், மந்தாரம் பஞ்சமம் மத்திமம் தாரம் முதலிய ஓசைத் துறைகளும், அமைதி, கமகம், அனுக்கல், குனித்தல், இழைத்தல், சுழித்தல் முதலிய குரல் ஒலிகளின் திரல்களும் இனிய பல குணங்களும் இப் புனிதனுடைய

இசையில் அமுத வெள்ளமாய்ப் பொங்கி வழிந்திருக்கின்றன. நாதப் பிரமம் நாதன் கீதத்தில் நின்று நடனம் ஆடியுள்ளது. அரிய இனிய கானம் அதிசய அமுதமாயது.

சாமகானன் பாடிய நாத கீதத்தைக் கேட்டதும் ஏமநாதன் உள்ளம் களித்துத் திளைத்து உயிர் பரவசம் ஆயினன்; அவ்வாறு ஆனவன் பின்பு அச்சத்தால் அலமந்து உளைந்து மறுகினன். பாணனுடைய அடிமை என்னும் இக்கிழவனுடைய கானமே இவ்வாறு ஆனல் அத் தேசிகனது இசையை யார் அளவிட வல்லார்? என இன்னவாறு பலவும் கருதி உள்ளம் கலங்கினன்; கலங்கவே கரவுபுரியநாடினன். இரவே யாரிடமும் கூருமல் ஊரைவிட்டு ஓடிப் போனன்.

வேந்தன் வியந்தது.

மறுநாள் இசைவிருந்து நிகழும் என்று எதிர்பார்த்திருந்த நகர மாந்தர் யாவரும் ஏமநாதன் சேமமா ஓடிப்போன செய்தியை அறிந்ததும் அயர்ந்து ஏமாந்து நின்றனர்.

நிகழ்ந்த நிலைகளை எல்லாம் வேந்தன் விசாரித்து அறிந்தான்; தனது அவைப் புலவனை பாணனுக்காக மானுடவேடம் தாங்கி வந்து இசைபாடி ஆண்டவன் செய்துள்ள அதிசயங்களை எண்ணி வியந்து கண்ணீர் மல்கி நீண்ட பேரன்போடு கோயில் புகுந்து நேரே தொழுதான். பாணனைத் தன் பட்டத்து யானை மேல் ஏற்றி நகரை வலம் செய்வித்துப் பரிசில்கள் பல தந்து அரிய வரிசைகள் செய்து வாழ்த்தி யனுப்பினன் ஊரும் நாடும் உவந்திருந்தன.

ஆண்டவன் புரிந்த அருளாடல்களையும், பாண்டிய மன்னன் செய்த பண்பாடுகளையும் நினைந்து நினைந்து நெஞ்சம் உருகிப் பாணபத்திரன் பத்திப் பரவசனுனன். அதன் பின் தத்துவ நோக்கோடு உத்தமநிலையில் வாழ்ந்து வந்தான்.

சங்கங்களை ஆதரித்து இயலை வளர்த்து வந்த இறைவன் இசையையும் பேணியிருப்பதை இங்கே இசையோடு அறிந்து மகிழ்கிறோம். நாதனது கீதம் வேத போதமாயது.

இந்து முடிமேல் விறகேற்றி இனிய விரகா இசைப்பாணன்
சிந்தை மகிழ இசைபாடித் தேவதேவன் அன்றுசெய்த
அந்தநிலையை அறிந்தவர்கள் அரிய மூன்று தமிழ்களையும்
எந்த முறையில் இறைபுரந்தான் என்பதுணர்வர் எளிதுறவே.

என்றும் தனி முதல் தலைவனாய் யாண்டும் ஆண்டவனாயுள்ள பரமன் பாணன் அடிமை என்று வந்து தமிழிசையைப் பேணியிருக்கும் மகிமையைப் பெரியோர் யாவரும் புகழ்ந்து போற்றியிருக்கின்றார். பத்தியில் விளைந்து வருகிற புத்தமுதமாய் நித்தன் நிலவி வித்தகங்களை விளைத்து நிற்கின்றார்.

வரிந்த இந்தனச்சுமை மதியரவு இதழி
அகன்று கட்டுஅவிழ்ந்த சேகரத்து இருத்தி
வீதியும் கவலையும் மிகவளம் புகன்று
பொழுதுகண் மறைந்த தீவாய்ச் செக்கர்
தணந்தோர் உள்ளத்து உள்ளுறப் புகுந்தபின்
காருடல் காட்டிக் கண்டகண் புதைய
அல்எனும் மங்கை மெல்லெனப் பார்க்க
முரன்றெழு கானம் முயன்றுவாது இயைந்த
வடபுல விஞ்சையன் வைகிடத்து அகன்கடைத்
தென்திசைப் பாணன் அடிமை யானஎனப்
பேரகா விறகுடன் தலைக்கடை பொருந்தி
உந்தித் தோற்றம் ஓசைநின்று ஒடுங்கப்
பாலையில் எழுப்பி அமரிசை பயிற்றித்
தூங்கலும் துள்ளலும் சுண்டிநின்று எழுதலும்
தாரியில் காட்டித் தருஞ்சா தாரி
உலகுயிர் உள்ளம் ஒன்றுபட்டு ஒடுங்க
இசைவீதி பாய இசைப்பகை துரந்த
கூடற்கு இறையோன். (கல்லாடம், 44)

இறைவன் ஒரு கிழவனாய் வந்து இசை பாடி அருள் புரிந்திருக்கும் அழகைக் கல்லாடர் இவ்வாறு கூறித் துதித்துள்ளார். பொருள் நிலைகளையும் இசையின் துறைகளையும் உரைகளின் சுவைகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். இசை அமுதம் ஈசன் நுகர்வாய் இன்பம் சுரந்துள்ளது.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தை யுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையே? அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு என்கொ
லாம்புகுந்து எய்தியதே. (திருக்கோவை)

காதலால் மெலிந்து வந்த தலைமகனை நோக்கி அவனுடைய தோழன் இவ்வாறு வினவி யிருக்கிறான். தமிழும் இசையும் ஊனை உருக்கி உள்ஒளி பெருக்கி உயர் பேரின்பம் அருளும் என்பதை இப்பாங்கன் உரை பாங்காஉணர்த்தியுள்ளது. அறிவின் சுவை ஆன்ம ஆனந்தமாய் மேன்மை சுரந்துள்ளமையால்பரமான்மா இதில்வரமாய்மருவிநின்றது.

சென்றணைந்து மதுரையினில் திருந்திய நூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழ்ஆராய்ந்து அருளியஅங்கணர் கோயில்.
(பெரிய புராணம்)

சங்கத்துள் இருந்து தமிழ் ஆராய்ந்து அருளிய அங்கணர் எனச் சிவபெருமானைச் சேக்கிழார் இவ்வாறு குறித்திருக்கிறார். எங்கும் நிறைந்தவன் சங்கத்தில் தங்கி யுள்ளான்.

வருந்திநான் முகன்மால் தேட வளர்ந்துஅழற்பிழம்பாய்நின்றான்
நெருங்கிநீர் மண்ணும் விண்ணும் எங்கணும் நிரம்பிநின்றான்
இருந்தமிழ்ச் சங்கத்தின்கீழ் நின்றனன் எவரும் காண.
(திருவாலவாயுடையார், திருவிளையாடல்)

அயனும் மாலும் அறிய முடியாத பரமன் தமிழ்ச் சங்கத்தில் உரிமையாத் தங்கி யிருந்துள்ளான்; அவ்வுண்மையை எங்கும் யாரும் அறிய இது உணர்த்தியுள்ளது.

வழக்கினும் மதிக்கவி யினும்மரபின் நாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ்.
(இராமா, ஆரணி, அகத்தி, 41)

கண்ணுதல் கடவுள் தந்த தமிழ் என்று கம்பர் பெருமான் இங்ஙனம் உரைத்திருக்கிறார் நான்கு வேதங்களினும் ஓங்கி ஒளி மிகுந்தது, உலகவழக்கினும் செய்யுள் வழக்கினும் செவ்வையாய் உயர்ந்தது, திவ்விய மகிமைகள் தோய்ந்தது எனத் தமிழ் மொழியை இவர் வியந்து புகழ்ந்துள்ள நிலைகளை ஊன்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

செந்தீ வண்ணன் ஆன சிவபெருமானுக்கும் செந்தமிழுக்கும் உள்ள கிழமையும் பழமையும் விழுமிய நீர்மைகளோடு விளங்கியுள்ளன. அந்த உண்மைகளை நூலோரும் மேலோரும் சால்போடு ஓதியுணர்ந்து உவந்துவருகின்றனர்.

பாண்டிய மன்னரை ஈண்டிய அருளோடு ஆதரித்தும், சங்கப் புலவர்களை இங்கிதமாப் பேணியும், அரிய கவிகளை உரியவர்களுக்கு உதவியும், பெரிய இன்ப நூலை அன்புடன் இயற்றியும், துறைகள் தோறும் தமிழை இறைவன் வளர்த்து வந்திருப்பது வியப்புகளை விளைத்து வருகின்றது.

"அருமறை விதியும் உலகியல் வழக்கும்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொல் மயக்கமும் வருவன புணர்த்தி
ஐந்திணை வழுவாது அகப்பொருள் அமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதல் புலவர்கள்

ஏழ்எழு பெயரும் கோதறப் பருகவும்
புலனெறி வழக்கில் புணர்உல கவர்க்கும்
முற்றவம் பெருக்கும் முதல்தா பதர்க்கும்
நின்றறிந்து உணர்த்தவும் தமிழ்ப்பெயர் நிறுத்தவும்
எடுத்துப் பரப்பிய இமையவர் நாயகன்."

[கல்லாடம் 64)

அகத்திய முனிவரும், நாற்பத் தொன்பது சங்கப் புலவர்களும், வேறுபல அருந்தவர்களும் தமிழின் சுவையை உணர்ந்து தெளிய அமிழ்தம் அனைய நூலை ஆலவாய்ப் பெருமான் ஆக்கி யருளியிருப்பதைக் கல்லாடர் இவ்வாறு போற்றியிருக்கிருர். குறிப்புகள்கூர்ந்தசிந்தனைகளுடையன.

தனது உரிமையான இனிய மொழியாகத் தமிழை இறைவன் பேணி வந்துள்ளமையால் கங்கை வேணியன் காணி என எங்கும் இசைபெற்றுப் பொங்கிய புகழோடு இம் மொழி எம்மொழியினும் செம்மொழியாத் தெளிவாயுளது.

சமயக் கணக்கர் மதிவழி கூறுது
உலகியல் கூறிப் பொருள்இது என்ற
வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதல்கவி பாடிய முக்கட் பெருமான். (கல்லாடம்)

திருவள்ளுவப் பெருந்தகை அருளிய திருக்குறளை மதித்துச் சங்கப் புலவர் முன் தலைமைப் புலவராயிருந்த இறைவன் ஒரு கவி பாடியுள்ளதைக் கல்லாடர் இவ்வாறு சுவையா விளக்கி நிலைமைகளைத் துலக்கியுள்ளார்.

சமய வாதிகள் குறுகிய நோக்கினர்; அவ் வழியில் இழியாமல் பரந்த நோக்கமும் விரிந்த நெஞ்சமும் தெளிந்த ஞானமும் உடையராய் நாயனர் ஒரு புனித நூலை மனித சமுதாயத்துக்கு இனிது தந்துள்ளமையை இங்கே சிந்தனை

செய்து கொள்ளுகிறோம். தருமநீதியான அந்த அருமை நூலைச் சரிபார்த்துப் பரமன் உரிமையோடு ஒரு சாற்றுக் கவியை அருளியுள்ளார். அது * முன்னம் வந்துள்ளது.

முதல் கவி பாடிய முக்கட் பெருமான் என்றது கண்ணுதல் கடவுள் தண்ணளியுடையராய்த் தமிழில் கவி பாடிக் கவீசன் என நிலவி நிற்கும் தலைமையும் புலமையும் தகைமையும் நிலைமையும் நேரே நன்கு தெரிய வந்தது.

எல்லா அண்டங்களுக்கும் யாண்டும் என்றும் ஆண்டவனுயுள்ள இறைவன் தமிழ் மண்டலத்தில் சங்கப் புலவனுய்த் தங்கித் தலைமைக் கவிஞனுய் நிலவி அதிசய ஆடல்கள் புரிந்து வந்திருப்பதை உலகம் இன்றும் துதிசெய்து வருகின்றது. துதி மொழிகள் பரவச வழிகளில் பரவிப் பரமபதியின் நிலைமைகளை நினைவுறுத்தி நெஞ்சை உருக்கி வருகின்றன. மொழி வழியே தெளிவாய் விழிகளிப்ப விளங்கினுன்.

வேதபோதங்களும் காணமுடியாத பாதங்கள் படியில் படிந்து வரக் கவிஞர் பெருமானுய் எழுந்து அறிவு நிலையமான சங்க மண்டபம் புகுந்து உல்லாச விநோதமாய் வாதாடிப் புலவர் எல்லாருக்கும் நேரே ஈசன் காட்சி தந்திருப்பது தமிழ் மொழிக்கு என்றும் நிலையான ஒரு மாட்சியாய் நிலவி நிற்கின்றது. ஆடும் அவன் பாடும் கவி ஆனுன்.

பதும முதல்வனும் எழுத அரியது ஓர்
  பனுவல் எழுதிய வைதிகப் பாட்டினர்
பரசும் இரசத சபையில் நடமிடு
  பரத பதயுகம் உள்ளம் வைத்து ஏத்துதும்.
(மீனுட்சியம்மைபிள்ளைத் தமிழ் 2)

பிரமதேவனும் எழுத அரிய ஒரு இனிய கவியைத்

---

* இந்நூல் பக்கம் 96, வரி 3 பார்க்கவும்.

தமிழ் மொழியில் பாடிய புனித பரமன் என இறையனரை இது துதித்திருக்கிறது. சபை=வெள்ளியம்பலம்.

தெள்ளித் தெளிக்கும் தமிழ்க்கடலின் அன்பிணேந்
திணைஎன எடுத்த இறைநூல்
தெள்ளமுது கூட்டுணும் வெள்ஓதி மத்தின்இரு
சீறடி முடிப்பம். (மீனுட்சி - 8)

அன்பின் ஐந்திணை என்னும் இன்ப நூலை இறைவன் செய்தருளினன்; அந்நூலைக் கல்வியின் அதிதேவதையான சரசுவதிதேவி அரிய தெள்ளமுதம் என உள்ளம் உவந்து நுகர்ந்து மகிழ்ந்துள்ளாள். அவ்வுண்மையை இதில் நுண்மையா உணர்ந்து ஓர்ந்து கொள்ளுகின்றோம்.

கோங்குதேர் வாழ்க்கை என்னும் கவியை இப்பெருமான் அருளிய பின்பு இன்பப் பாலில் நலம் புனைந்து உரைத்தல் என்னும் துறையாய் அப் பாடலின் பொருள்கள் விரிந்து வந்துள்ளன. இறை காட்டியவழி துறைகாட்டியது.

அருள்தரும் கேள்வி அமையத் தேக்கப்
பற்பல ஆசான் பாங்குசெல் பவர்போல்
மூன்றுவகை அடுத்த தேன்தரு கொழுமலர்
கொழுதிப் பாடும குணச்சுரும பினங்காள்!
உளத்தது வேறு அடக்கி முகமன் கூறுது
வேட்கையின நீயிர் வீழ்நாட் பூவினத்துள்
காருடற் பிறைஎயிற்று அரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்த
பழவுடற் காட்டும் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் தீர்த்தருள்
பெம்மான் வாழும் பெருநகர்க் கூடல்
ஒப்புறு பொற்றொடிச் சிற்றிடை மடந்தைதன்
கொலையினர் உள்ளமும் குறைகொள இருண்டு

நானம் நீவி நாள்மலர் மிலைந்து
கூடி உண்ணும குணத்தினர் கிளைபோல்
நீடிச் செறிந்து நெய்த்துடல் குளிர்ந்த
கருங்குழற் பெருமணம போல
ஒருங்கும உண்டேல் பேசுவிர் எமக்கே.

(கல்லாடம், 36)

இந்தப் பாட்டை கூர்ந்து நோக்கிப் பொருளின் நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். வினை முடிவுகள் கவிகளில் விநய விநோதங்களாய் அமைந்து வருகின்றன. அவற்றை அறிந்த அளவு யாவும் தெளிவாய்த் தெரிய நேர்கின்றன. பயனிலை தெரிவது பனுவலை இனிது தெரிவதாம்.

சுரும்பினங்காள்! முகமன் கூறுது பேசுவிர்! என்றது தும்பி! கண்டது மோழிமோ! என்று இறைவன் முன்பு கூறிய குறிப்பை அடி ஒற்றி ஈண்டு நீண்டு வந்துள்ளது.

கண்ணுதல் கடவுள் அருளிய கவி எண்ணரிய உணர்வு நலங்களைக் கவிஞர்களுக்கு இனிது நல்கியுள்ளது. மனித சமுதாயம் புனிதம் அடைந்து வர இனிய அறிவின் சுவைகளை உரிமையோடு அவர் உதவி வருகின்றனர். நினைவு நிலைகளை விரித்து நெறிமுறைகளைத் துலக்கி யருளுகின்றனர்.

"கல்வி அறிவின் சுவைகளை விரும்பி மாணவர்கள் ஆசிரியர்களை நாடிச்சென்று அவற்றை நலமா ஈட்டி உளம் மிக உவந்து உயர்ந்து திகழ்கின்றனர்; அதுபோல் நிலத்திலும் நீரிலும் மலர்ந்துள்ள பலவகை மலர்களிலும் சென்று இனிய தேனை ஈட்டி இன்புறுகின்ற ஓ வண்டுகாள்! இந்திரன் முதலிய தேவர்கள் வந்து வந்து தொழுது வரம்பெற்றுச் சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகின்ற சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளியுள்ள மதுரைமா நகரம் போல் மகிமையும் அழ

கும் மருவியுள்ள இந்த மங்கையின் கரிய குழலில் வீசுகிற அரிய நறுமணம் போல் இனிய வாசனையை நீங்கள் எங்கே ஆவது கண்டது உண்டா? இருந்தால் உண்மையை ஒளியாது தெளிவாச் சொல்லுங்கள்!" என்று ஒரு தலைவன் தனது இனிய காதலியின் கூந்தலை வியந்து மகிழ்ந்து வண்டுகளை நோக்கி இவ்வாறு செவ்வையா வினவியிருக்கிறான்.

பல நீர்மைகள் கூர்மையா உணர்ந்து கொள்ளுமாறு சீர்மையா இதில் செறிந்திருக்கின்றன. மாந்தர் மாண்போடு வாழ்ந்து வரவே நேம நியமங்கள் ஏந்திய சீரோடு சேர்ந்து திகழ்கின்றன. வையம் இனிதுவாழவேசெய்யுள்செய்கிறது.

கூடி உண்ணும் குணத்தினர் கிளைபோல்
நீடிச் செறிந்து.

என்றது கூந்தலின் நிலைமையைத் துலக்கி நின்றது.

வந்த விருந்தினரை உபசரித்து அவரோடு உண்டு வருகிற உபகாரியின் கிளைபோல் தழைத்துச் செழித்து நீண்டு செறிந்து நெருங்கி ஒருங்கே அக் குழல் ஓங்கி உயர்ந்திருந்தது என இங்ஙனம் உவமை கூறியிருக்கிறார்.

மனித இனம் புனிதமாய் உயர்ந்து இனிய நிலைமைகளை அடையவே நூல்கள் உணர்வு நலங்களை உரிமையா வழங்கி வருகின்றன. ஆதிமுதல் தமிழ் மொழி நீதி நெறிகளையே நியமமாப் போதித்து நல்லநீர்மைகளை வளர்த்து வருகிறது.

மூவாத் தமிழ்மொழியே முந்தவுயர் நீதிகளைப்
பாவால் வழங்கிப் பயனருளித்---தேவாதி
தேவன் திருமொழியாய்த் தேசு மிகப்பெற்றுப்
பூவில் உளது பொலிந்து.

அறம் பொருள் இன்பங்களை அருளிய பரம் பொருள்

மொழியாய்த் தமிழ் தழைத்துச் செழித்து வந்துள்ளதை ஆதிச் சங்கத்திலிருந்தே நாம் நுனித்து அறிந்து வருகிறோம்.

ஆதியில் தமிழ்நூல் அகத்தியற்கு உணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.
(சேனாவரையர்.)

தமிழியல் தெளிய நேர்ந்த விழுமிய புலவர் எவரும் முழுமுதல் பரமனைத் தொழுதே ஒளி பெற்று வந்துள்ளனர். உரிய மொழி வழியே அரிய அருளாடல்களை ஆண்டவன் ஆற்றியிருக்கிறான். மதிநலம் கனிந்த அந்த மாட்சிகள் அதிசயக் காட்சிகளாய்த் தோன்றி யாவரும் துதிசெய்து வரும்படி துலங்கி நிற்கின்றன. கருதிப் புரிந்த கருமங்களில் தருமங்கள் மருமமா மருவி உலகம் தெளிவுற மிளிர்கின்றன.

"தருமிக்கே
ஓர்வாழ்க்கை வேண்டி உயர்கிழிகொள் வான்கொங்கு
தேர்வாழ்க்கை என்றுஎடுத்த செய்தியும்,—கீரன்
இசையா வகையின் இயம்பினான் என்றே
வசையாடித் தர்க்கித்த வாக்கும்,—இசையான
பாட்டுக்கு இரங்கி ஒரு பாணனுக்குச் சேரலன்மேல்
சீட்டுக் கவிவிடுத்த சீராட்டும்,—பாட்டியலில்
நாத்திரமா மேவுபொருள் நன்று அறுபதுஎனும்
சூத்திரமாப் பாடியருள் தோற்றமும்,—மாத்திரமோ
உன்னோடு அவர்விளையாட்டு ஒன்றோ வடமதுரைக்கு
அந்நேரம் உன்பிறகே யார்வந்தார்?—மன்னவன்மேல்
காரியார் நாரியார் கண்டகவி யைப்பகிர
வாரியிலாக் கானகத்தில் வந்தவரார்—நாரிநெடும்
போற்றியுறும் பத்திரற்காப் போந்து கிழவுருவில்
தோற்றி விறகு சுமந்தவர் ஆர்?—தேற்றியவற்கு
ஈயரிய பொற்பலகை இட்டவர்ஆர்? மற்றவன்தன்
நேயமனைவிக்கு எதிரா நேர்ந்தவளைப்—போயவையில்

தள்ளி இசை தாபிக்கத் தக்கவரார்? தென்மதுரைக்கு
உள் இருந்த சொக்கர் உனக்கு உள் அன்றோ?''
(தமிழ் விடு தூது)

தமிழ் மொழிக்கும் சிவபெருமானுக்கும் உள்ள உற வுரிமைகளை இவை சுவையா வரைந்து காட்டியுள்ளன. காட்சிகளும் கருத்துகளும் குறிப்புகளும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வுரியன. அருளாடல்கள் பொருளோடு மிளிர்கின்றன.

பரமன் தருமிக்கு அருளிய தகைமையும், கீரனோடு எதிர்ந்து வாதாடிய வகைமையும், பாணபத்திரனுக்கு இரங்கிச் சேரமன்னனுக்கு ஒரு சீட்டுக் கவி கொடுத்த சீர்மையும், அகப்பொருள் இலக்கணம் உகப்பொடு செய்தளித்த நீர்மையும், பாண்டிய மன்னன் தன்னை மதிக்கவில்லை என்று வருந்தி நொந்து போன இடைக்காடர் என்னும் புலவர் பின்னே பரிந்து போன பான்மையும், இசை வாணனைக் காக்கும் பொருட்டு விறகு விற்கும் கிழவனாய் வந்து இனிய இசை பாடிய மேன்மையும் இங்கே தெளிவாய்த் தெரிய வந்துள்ளன. தமிழ்மொழிமேல் தான் கொண்டுள்ள பிரியத்தினாலேயே இறைவன் இவ்வாறு இனிய உறவுரிமைகளோடு உவந்து புரிந்துள்ளான். அருள் நலம் கனிந்த உண்மைகளைப் பொருள் வளங்களோடு ஈண்டு அறிந்து கொள்ளுகிறோம்.

தமிழ்மொழியின் இனிமையையும் மகிமையையும் புனித நிலைமையையும் இந்நூலாசிரியர் நன்னயமா விளக்கியுள்ளார்.

மதுரைக்கு உள் இருக்கும் சொக்கர் உனக்கு உள் அன்றோ? என்று தமிழை நோக்கி வினவியிருக்கிறார். இந்தக் கேள்வியைச் சிந்தனை செய்து உணர்பவர் தமிழ் மொழிக்கும் சிவபெருமானுக்கும் உள்ள உறவுரிமைகளை ஊன்றி நோக்கி உண்மை தெளிந்து உள்ளம் மகிழ்ந்து கொள்வர்.

நின்புகழ் பாடும் பாணனார் தமக்கு
நிதிதரச் சேரலன் தனக்கு
நீமுனம் முடங்கல் ஒன்று அளித்தது போல்
நிகரிலா வசவ நாயகன்தன்
அன்பினில் ஒருநா றுயிரம் கூறிட்டு
அடுத்த கூற்றினில் ஒரு கூறுஇங்கு
அளிப்பதற்கு உனது திருமுகம் அருளால்
அடியனேற்கு அளிக்கும்நாள் உளதோ?
பொன்புரை கடுக்கை மலர்ந்தசெம் பவளப்
புரிசடைப் பேரருட் குன்றே!
புணர்முலைக் கயற்கண் பிறைநுதல் கனிவாய்ப்
பொற்றொடி இடத்துவாழ் அமுதே!
என்பும்வெண் தலையும் அணிந்துநான் புனிதன்
என்றும் என்றிருந்திடு பவனே!
இட்டம்நன்கு உதவி என்காத் திருக்கும்
ஈசனே மாசிலா மணியே!

(நெடுங்கழில்)

பாணபத்திரனுக்குப் பொருள் தந்து விடும்படி சேர மன்னனுக்கு ஒரு கவி எழுதிச் சிவபெருமான் திருமுகம் அனுப்பியுள்ளதைச் சிவப்பிரகாசர் இவ்வாறு உவந்து குறித்திருக்கிருர். அன்புரிமை பண்புகள் பல படிந்து வருகிறது.

இசைப் புலமைக்கும் மொழிப் புலமைக்கும் இறைவன் உரிமையாய் அருளியிருப்பது சங்கப் புலவர் எவர்க்கும் தலைமையாயிருந்து தமிழ் மொழியை இனிது ஆதரித்து வந்துள்ள தகைமையை நன்கு விளக்கியுள்ளது.

முத்தமிழும் முதல்வன் அருளால் வித்தகமாய் விளங்கி வந்துள்ளன. இயலிலும் இசையிலும் பரதத்திலும் உயர் புலமை பெற்றவர் யாவரும் சிவபெருமானையே சிந்தனை செய்து துதித்து வந்தனை புரிந்து வழிபட்டு வந்துள்ளனர்.

கீரன் போற்றியது.

கல்வி வீறுேடு முதலில் நேரே வாதாடிய நக்கீரர் பின்பு தமது பிழையை உணர்ந்து பெரிதும் வருந்தினுர். இறைவன் அருளிய படியே அகத்திய முனிவரிடம் போய் இலக்கணக் கலையைக் கலக்கமறக் கற்றுத் தெளிந்தார். புலமையில் தலைமையான தெளிவு வந்தது; வரவே முன்பு வீறுேடு மூண்டு மாறுய் வாதாடியது மூடம் என்று உணர்ந்து இரங்கினுர்.

கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகள்
முற்றும் ஆய்ந்துசொல் வழுக்களும் வழாநிலை முடிபும்
உற்று நோக்கினுன் அறிவின்றி முழுதுஒருங்கு உணர்ந்தோன்
சொற்ற பாடலில் பொருள்வழுச் சொல்லினேன் என்னு: (1)

மறையின் அந்தமும் தொடாததாள் நிலம்தொட வந்த
நிறை பரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்
சிறிய கேள்வியோர் கழியவும் செருக்குடை யோர்என்று
அறிஞர் கூறிய பழஞ்சொல் என்அளவிற்றே அம்மா! (2)

அட்டமூர்த்திதன் திருவடிக்கு அடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினுல் எனை அவன் நுதல்விழிப் படுதீச்
சுட்ட தன்றிஎன் நெஞ்சமும் சுடுவதே என்றென்று
உட்ட தும்பிய விழுமநோய் உவரியுள் ஆழ்ந்தான். (3)

மகவை ஈன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்
பகைபடும்பிணி அகற்றிடும் பான்மைபோல் என்னை
இகலிழைத்தறி வுறுத்தினுற்கு ஏழையேன் செய்யத்
தகுவது யாதென வரம்பிலா மகிழ்ச்சியுள் தாழ்ந்தான். (4)

மாதவன்தனக்கு ஆலவாய் மன்னவன் அருளால்
போத கஞ்செய்த நூலினைப் புலவர் ஏனோர்க்கும்
ஆதரஞ்செயக் கொளுத்தியிட்டு இருந்தனன் அமலன்
பாத பங்கயம் மூழ்கிய பத்திமைக் கீரன். (5)

[கீரனுக்கு இலக்கணம் 26-30]

புத்தி தெளிந்த கீரன் ஈசனை நினைந்து உருகிப் பத்தி புரிந்துள்ள நிலைகளை இங்கே நேரே தெரிந்து மகிழ்கின்றோம். முன்னம் தான் மூண்டு செய்தது அறியாமையால் நேர்ந்த அவகேடு என்று பரிதாபமாய்ப் பரிந்து வருந்தியுள்ளான்; அவ்வுண்மைகளை உரைகள் தெளிவா வெளியிட்டுள்ளன.

சிறிய கேள்வியர் கழியவும் செருக்குவர்.

என்னும் பழமொழி என் அளவில் புதுமொழியாய் நேர்ந்ததே! என்று மறுகியிருத்தலால் இவர் பிழை தெளிந்துள்ளமை தெரிய வந்தது. கல்வியும் கேள்வியும அறிவும் பண்போடு படிந்து வரும் அளவே இன்பம் தருகின்றன; நீர்மைகுன்றினல் சீர்மைகுன்றிச் சிறுமைகள் விளைகின்றன.

செருக்கும் சினமும் சிறுமையுடையன ஆதலால் அதனை மருவினர் சிறியராய் இழிந்து ஒழிவர் என்பது இங்கே தெளிந்து கொள்ள வந்தது. கல்வித் தருக்கால் தான் அல்லல் அடைய நேர்ந்ததை உலக மக்கள் தெளிந்து கலக மயக்கம் நீங்கி உய்யும்படி நக்கீரர் உணர்த்தியிருப்பது உணர்ந்து சிந்திக்கவுரியது. அனுபவங்கள் அறிவுநலங்களை அருளுகின்றன.

சிறந்த அறிவுக்குப் பயன் நிறைந்த பண்பாடும் நெறியும் நீர்மையுமேயாம்; அவை மருவி வரும் அளவே மகிமைகள் பெருகிவரும்; அருகி ஒழியின் அறிவு வறிதே இழிந்து கழியும். பண்பு இல்லான் பெற்ற செல்வமும் கல்வியும் நன்பால் கலம் தீமையால் திரிந்தது போல் புண்பாடே படிந்து புன்மைகளே விரிந்து புலையாய் இழிந்து போம்.

பண்பால் உள்ளம் படியாதான் பலநூல் படித்து வந்தாலும்
புண்பால் இழிந்து நிலைதிரிந்து புலையே புரிவன்; பொற்கலத்தில்
நண்பால் பருகி வந்தாலும் நஞ்சே நல்கும் வெம்பாம்பு;
உண்பால் உதவும் நீர்உண்டும் உயர்பண்புடைய ஒண்பசுவே.

இந்த உவமான நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்பவர் உள்ளப் பண்பின் மேன்மையை நன்கு தேர்ந்து கொள்வர்.

நெறிமுறையே தேர்ந்த நல்ல குருவைச் சார்ந்து நிறையக் கற்று நீர்மை தோய்ந்து நில்லுங்கள்; அறை குறையாய்ச் சிறிது கற்று அகம் செருக்கி அவகேடுகளை அடையாதீர்கள் என்று புலவர் திலகரான நக்கீரர் உலகம் நலமுற ஈண்டு உறுதிநலங்களை நயமாப் போதித்திருக்கிறார்.

நிறையறிவு பெற்றபின்பு அன்பு மீதூர்ந்து இறைவனை நினைந்து இவர் துதித்திருக்கிறார். ஆண்டவனுடைய அதிசய நிலைகளை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து துதி செய்திருப்பது விதிநியமங்களோடு மதிதெளிய வந்துளது. ஞாலம் நலமுற இவர் பாடியுள்ள பாடல்கள் பல. சில கவிகள் பரம தத்து வங்கள் படிந்துள்ளன. அவற்றுள் ஒன்று அயலே வருகிறது.

"சூல பாணியை! சுடர்தரு வடிவனை!
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பால்வெண் நீற்றனை பரம யோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற்று அண்ணலை
நூலணி மாபனை நுண்ணிய கேள்வியை
கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்தோய் முடியனை
ஞாலத் தீயினை நாதனைக் காய்ந்தனை
வேத தேவனை திருமறு மார்பனை
காலம் ஆகிய கடிகமழ் தாரனை
தேவ கீதனை வெண்தலை ஏந்தியை
பாவ நாசனைப் பரமேச் சுவரனை
கீதம் பாடியை கிளர்பொறி அரவனை
போதணி கொன்றைஎம் புண்ணிய ஒருவனை
ஆதி மூர்த்தியை அமரர்கள் தலைவனை

சாதி வானவர் தம்பெரு மானை
வேத விச்சையை விடையுடை அண்ணலை
ஓத வண்ணனை உலகத்து ஒருவனை
நாதன் ஆகிய நன்னெறிப் பொருளினை
மாலை தானெரி மயானத்து ஆடியை
வேலை நஞ்சினை மிகஅமுது ஆக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
ஆதி மூர்த்தியை அருந்தவ முதல்வனை
ஆயிர நூறுக்கு அறிவரி யானையை
உருவு த்ந்த பிறையணி சடையனை
மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனைக் கொலற்கருங் காலனைச்
சீரிய அடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையனைப் புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றைப் பிராணி தலைவனை
தேடிய இருவர் தேடரும் பெருமையை
நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை
ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
தாதணி மலரனை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றின் உரியனை
சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை
தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை நித்திய நிதியனை
தீதமர் செய்கைத் திரிபுரம் எரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைய தாகக்
கருமன் செந்நீர் கபாலம் நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்றும்
உறைத்த உருவார் ஐயனைத் தோற்றினை
தேவரும் அசுரரும் திறம்படக் கடைந்த

ஆர்வல நஞ்சம் அமுதம் ஆக்கினை
ஈரமில் நெஞ்சத்து இராவணன் தன்னை
வீரம் அழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவருந் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமும் நீயே வேள்வியும் நீயே
நீதியும் நீயே நிமலன் நீயே
புண்ணியம் நீயே புனிதன் நீயே
பண்ணியல் நீயே பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே உலகமும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே
தேவரும் நீயே தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகடல் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
தாயும் நீயே தந்தையும் நீயே
விண்முதல் பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கரும தன்மைத் தொல்லோய் நீயே
அதனால்
கூடல் ஆலவ ய்க் குழகன் ஆவது
அறியாது அருந்தமிழ்ப் பழித்தனன் அடியேன்
ஈண்டிய சிறப்பில் இணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன விரைந்தே

[பெருந்தேவ பாணி]

சிவபெருமானுடைய அற்புத நிலைகளையும், அதிசய ஆடல்களையும், மகிமை மாண்புகளையும் எண்ணி வியந்து நக்கீரர் இவ்வாறு உவந்து துதித்திருக்கிறார். ஆலவாய்க் குழகன் என்பதை அறியாமல் அடியேன் உன் அருந்தமிழைப் பழித்

தேனே! என்று பரிதாபமாய் மறுகித் தொழுது உருகி அழுது பொறுதி செய்யும்படி வேண்டியிருத்தலால் ஆண்டவன் அருளை இவர் அடைந்துகொண்டமை அறிய நின்றது.

இவரது புலமையும் தலைமையும் உறுதியும் ஊக்கமும் நேர்மையும் சீர்மையும் தீரமும் வீரமும் உலகம் அறியும்படி பரமன் இவ்வாறு செவ்வையா வந்து அருள் புரிந்துள்ளார்.

தமிழ் மொழியோடு தொடர்பு கொண்டு இறைவன் புரிந்துள்ள திருவிளையாடல்களைக் கருதியுணரும் போதெல்லாம் கலைபுலகம் வியந்து புகழ்ந்து மகிழ்ந்து வருகிறது.

எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருந்திய இலக்கணங்களோடு சிறந்து தெய்வ மணம் கமழ்ந்து எவ்வழியும் யாண்டும் எழில் ஒளி வீசிவந்த தமிழ் ஈண்டு இஞ்ஞான்று இவ்வாறு ஒளி மழுங்கி ஒடுங்கிக் கிடப்பது ஏன்?

இதனைக் கொஞ்சம் நெஞ்சம் இரங்கிக் கூர்ந்து சிந்திக்க வேண்டும்; ஓர்ந்து உணர வேண்டும்; தேர்ந்து விடை தரவேண்டும். உரிமையை உணர்வது கடமையைப்புரிவதாம்.

ஆங்கிலம் ஓங்கியது.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இடமும் தெரியாமல் எங்கேயோ ஒரு மூலையில் பதுங்கி ஒதுங்கிக் கிடந்த ஆங்கிலம் இன்று உலகம் எங்கும் பரந்து விரிந்து யாண்டும் உயர்குல மொழியாய் ஓங்கி ஒளிவீசி உலாவுகின்றது. இந்த நிலைக்குக் காரணம் என்ன? அந்த மொழி எந்த வழியால் ஓங்கியது? இதனைச் சிந்தனை செய்து தெளிய வேண்டாமா?

"The English spoken in the fifth century was a harsh guttural speech, consisting of a few thousand words, and spoken by a few thousand settlers in the east of England.

It is now a speech spoken by more than a hundred millions of people—spread all over the world. It was once poor; it is now one of the richest languages in the world."

(J. M. D. Meiklejohn)

"ஆங்கில பாஷை, இங்கிலாந்து தேசத்தின் கீழ்பாகத்தில் ஐந்தாவது நூற்றாண்டில் குடி ஏறிய சில ஆயிர மக்களால் கரடு முரடாமிடற்றில் பேசப் பட்டது. இப்பொழுது பல கோடி சனங்களால் இம் மொழி நலமாப் பேசப்படுகிறது. ஒரு காலத்தில் எளிய நிலையில் இருந்தது; இப்பொழுது உலகத்தில் தலைசிறந்த மொழியாய் உயர்ந்துள்ளது" என்னும் இது இங்கே ஊன்றி உணர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியது.

அறிவும் ஆற்றலும் உறுதியும் ஊக்கமும் சலியாத முயற்சியும் உடைய மக்கள் உலகில் உயர்ச்சி அடைந்து வருகின்றனர்; வரவே அவர் பேசி வருகிற மொழியும் பெருமையாய்த் தேசு மிகுந்து சிறந்து வருகிறது. ஓங்கிய உள்ளக் கிளர்ச்சியோடு ஆங்கிலேயர் ஈங்கு வந்து நுழைந்தனர்; பாங்கோடு முயன்றனர்; முயற்சி உயர்ச்சியாயது; அரசாள நேர்ந்தனர். நேரவே அவர் பேசி வந்தமொழி இந்த நாட்டு மக்களை அடியோடு அடிமை ஆக்கிக் கொண்டது.

ஆட்சியை இழந்து வெள்ளையர் குடிவாங்கிப் போய் விட்டார்; அவர் போனாலும் அவருடைய மொழி இங்கு நன்கு குடி கொண்டுள்ளது. அந்த மொழியில் இந்த நாடு கொண்டுள்ள மோகமும் மயக்கமும் வேறு எந்த நாடும் கொள்ள வில்லை. ஆங்கில மொழியை ஒரு மாய மந்திரமாக யாவரும் சிந்தனை செய்து வருகின்றனர். ஒன்று இரண்டு வார்த்தைகள் அதில் உளறினாலும் அவன் பெரிய மனிதனு மதிக்கப் படுகிறான். பெருமைகள் அவனை மருவுகின்றன.

அந்த மொழியைப் பேசாதவன் எவ்வளவு பெரிய மேதையாயிருந்தாலும் அவன் பேதையாகவே பேணப்படுகிறுன். படவே பரிதாபமாய் அவன் ஒதுங்குகின்றுன்.

அகத்திய முனிவரே ஆனுலும் இன்று இங்கு அவர் தமிழில் மகத்துவம் அடையார். ஆங்கிலமூலாம் பூசினுல் அன்றி யாரும் வெளியே ஓங்கி வர முடியாது. தன் சொந்த மொழியில் ஒன்றும் படியாதிருந்தாலும் அவனை எல்லாம் படித்தவனுக ஆங்கிலம் நடித்துக் காட்டி நாடறிய நீட்டிவிடுகிறது.

நிகண்டு, பிங்கலம், திவாகரம், நன்னூல், நேமிநாதம், நம்பி அகப்பொருள், யாப்பருங்கலம், வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, இந்திர காளியம், தொல்காப்பியம் முதலிய நல்ல இயல்கள் யாதும் கல்லாதே போனுலும் ஆங்கிலம் கொஞ்சம் தெரிந்திருந்தால் போதும் அவர் பெரிய பண்டிதர், அரிய கலாநிபுணர், அதிசய பேராசிரியர் என்று பேர் பெற்று விடுவர்; சீரோடு சிறப்பும் காணுவர். கால வேற்றுமையால் அவலக்காட்சிகள் பல காணநேர்கின்றன.

தன் சொந்த மொழியின் பலனை இந்த நாட்டு மக்கள் இழந்திருப்பது போல் வேறு எந்த நாட்டு மக்களும் இழக்கவில்லை. உரிமையானவர் அருமை தெரியாமல் சிறுமையாய் ஒதுங்கியிருந்தாலும் தமிழ்மொழி இளமை குன்றுமல் எழில் நலம் வாடாமல் அழியா அழகோடு உணர்வொளிகள் வீசி எவ்வழியும் திவ்விய தேசுடன் சிறந்து திகழ்கின்றது.

இனிய நாத மயமாயுள்ள தாய்மொழியை வாய்மொழி அளவில் பேசி ஒழியாமல் அதில் அமைந்துள்ள கலைநலங்களை ஆர்வத்தோடு ஆய்ந்து நோக்கி அறிவுச் செல்வங்களை அடைந்து நெறிமுறையே உயர்ந்து கொள்ள வேண்டும்.

தாய்மொழி உணர்வினை இழந்தவர் தாய்ப்பால் இழந்த குழந்தைகள் போல் தளர்ந்து மெலிந்து தாழ்ந்து போவர்.

ஈன்ற தாயினும் இனியது தாய்மொழி; இதனை
ஆன்ற அன்பினோடு ஆதரிக்கின்றவன் அறிவின்
தோன்றல் ஆகுவன்; தோய்ந்திதைத் தொழாதவன் தொழுநோய்
ஏன்ற புல்லனாய் என்றுமே மூடனாய் இழிவான்.

பிறப்பு மொழியைப் பேணி வருபவர் பிறந்த பலனை ஓரளவு அடைந்து கொள்ளுகின்றனர். பேணாதவர் வீணே விளிந்து ஒழிகின்றனர். விளிவுதெளியார் விழிகண்குருடரே.

எல்லாம் வல்ல இறைவனுடைய அருள் ஒளி உரிமை யோடு தோய்ந்தது; அரிய மாதவர்களும் பெரிய மன்னர்களும் பிரியமாப் பேணி வந்தது; அத்தகைய புனிதமான இனிய தமிழ்மொழியைத் தம் பிறப்புரிமையாப் பெற்றிருப்பவர் அதன் சிறப்பு நிலைகளை ஓரளவாவது உணர்ந்து கொள்ள வேண்டாமா? உணராமல் ஒழியின் அது கொடிய பேரிழவாம். உரிமையை உணர்ந்து உயர்நலம் உறுக.

சங்கமுறு புலவர்களுள் தனிமுதன்மைத்
தலைவனாய்ச் சார்ந்திருந்து
திங்களணி சடைப்பெருமான் செந்தமிழைப்
புரந்துவந்த திறம்போல் என்றும்
எங்கணுமே எம்மொழியும் எந்நாடும்
எய்திலதே; இந்நாட்டுள்ளே
மங்கலமா மருவியுள்ள தமிழ்மொழியின்
மகிமையெவர் மதிக்க வல்லார்?

இந்த மகிமை மொழியை இயன்ற அளவு பயின்று வரின் பிறந்தபயன் தொடர்ந்து வரும். ஒருமையில் கற்றது எழுமையும் உரிமையாய் இன்பம் தந்து வரும்; இந்த மானசத த்துவத்தை உய்த்து உணர்ந்து உய்தி பெறுக.

தமிழ் மொழியை உரிமையோடு பழகி வருவது தனி முதல் பாமனைக் கிழமையோடு தழுவி வருவதாம். செந்தமிழ்த் தெய்வம் எனச் சிவ பெருமானை நம் முன்னோர் வந்தனை செய்து வந்திருப்பதை நாம் சிந்தனை செய்து கொள்ள வேண்டும். வாலறிவனைத் தொழுது வருவதே நூலறிவின் விழுமிய பயனாய் மேலான நலனை மேவி வருகிறது.

ஆல நீழல் அன்றிருந்து அறநெறி
நால்வர் கேட்க நன்கினிது உரைத்தனை,
இலக்கணம் இலக்கியம் நலத்தக மொழிந்தனை,
ஏழின் ஓசை இராவணன் பாட
தாழ்வாய்க் கேட்டு அவன் தலையளி பொருத்தினை,
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப! அதனால்
சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் சென்னியில் பரவுவன் பணிந்தே.

(திருவெழுகூறு)

மதுரையில் எழுந்தருளி யுள்ள சிவ பரம்பொருளை நினைந்து நக்கீரர் இவ்வாறு பலவகை நெறிகளில் உளம்மிக உருகித் துதித்திருக்கிறார். சங்கப் புலவர்கள் எல்லாரும் சிவ பெருமானைக் கவிஞர் பெருமானாக் கருதி மகிழ்ந்து போற்றி வந்துள்ளனர். அவ் வுண்மையை நூல்களில் அறிகின்றோம்.

தலைமைப் புலவரான இறையனாரது சரித வரலாறுகள் இவ்வளவில் அறிய வந்துள்ளன. மேலுள்ள புலவர்களின் சரிதநலங்களையும் உறுதி நிலைகளையும் உலகம் கண்டு மகிழ இறைவன் முறையே இனிது காட்டி அருள வேண்டும்.

எங்கும் உள்ள இறைவன் புலவனுய்ச்
சங்கம் ஏறித் தலைமை நிலைமையில்
தங்கி நின்று தமிழை வளர்த்துளான்
இங்கி தன்வழி ஈசன் ஒளியதே.

இந் நூலின் தொகைக் குறிப்பு.

உணர்வின் ஒளி மொழி; அதனுல் மனித மரபு உயர்ந்துள்ளது; வாய்மொழி அவரவர்க்குத் தாய்மொழி; உலகில் வழங்கி வரும் மொழிகள் பல; அவற்றுள் நமது தாய் மொழி தமிழ்; இது பழமையும் தலைமையும் விழுமிய நிலைமையும் உடையது; பாண்டிய மன்னர் ஈண்டிய ஆர்வமாய் நீண்ட காலம் நெடிது போற்றி வந்தது; மூன்று சங்கங்களும் ஆன்ற மகிமையோடு அமைந்திருந்தன; நாட்டிலிருந்த பேரறிஞர்கள் யாவரும் அவற்றில் கூட்டமாய்க் கூடியிருந்தனர்; சிவபெருமானும் முருகவேளும் அங்கே தலைமைப் புலவர்களாய் அமர்ந்து சங்கப் புலவர்களுக்கு என்றும் அருள் புரிந்து வந்தனர். கண்ணுதல் கடவுள் அருவமாயிருந்து அருள் செய்ததோடு அமையாமல் நேரே அரசன் ஆகவும் தோன்றி மதுரையிலிருந்து தமிழை ஆதரித்து வந்தார். ஆதி முதல் சங்கங்களில் தலைமைப் புலமையில் நிலவி நின்ற இறைவன் புலவர்கள்பால் பேரருளுடையராய்ப் பல அதிசயங்களை ஆற்றியருளினுர். இறையனுர் அகப்பொருள் எனத் தம் பெயரால் ஓர் இலக்கண நூலும் இயற்றினுர். சுவையான சில கவிகளும் செய்தார். செந்தமிழையும் புலவர்களையும் பாண்டிய மன்னர்களையும் நீண்ட கருணையோடு யாண்டும் பேணி ஆண்டவன் அருள் புரிந்துள்ளார். அந்த உண்மைகளை ஓரளவு இந்த நூலால் ஓர்ந்து கொள்ளலாம்.

உ

கவிராஜ பண்டிதர்

ஜெகவீர பாண்டியனர்

இயற்றியுள்ள நூல்கள்.

திருக்குறட் குமரேச வெண்பா

மூலமும்—உரையும்

அறத்துப்பால் 3-ம் பதிப்பு அச்சில் உள்ளது.

பொருட்பால் முதல் பாகம் ...	ரூ	9—12—0
ஷை இரண்டாம் பாகம் ...	,,	8—12—0
ஷை மூன்றும் பாகம் 1130 பக்கம்	,,	10—12—0
காமத்துப்பால் 1160 பக்கம் ...	,,	11—12—0
அறத்துப்பால் மூலம் ...	,,	1— 4—0
பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் வசனம்	,,	5— 0—0
ஷை 2-ம் பாகம் ...	,,	5— 0—0
ஷை வீர பாண்டியம் ...	,,	5— 0—0
கம்பன் கலை நிலை முதல் பாகம் ...	,,	1—12—0
புலவர் உலகம் 1-வது தொகுதி முதல் 14-வது தொகுதி வரை தனித் தனி		5—12—0
தரும தீபிகை 1-வது தொகுதி முதல் 7-வது தொகுதி வரை தனித் தனி		5—12—0
இந்தியத் தாய் நிலை	,,	3— 0—0
கல்வி நிலை ...	,,	2— 0—0
கவிகளின் காட்சி ...	,,	2— 0—0
அகத்திய முனிவர் வசனம் ...	,,	1— 4—0
Light of Virtue ...	,,	1— 2—0

திருவள்ளுவர் நிலையம்,

127. மேல மாசி வீதி, மதுரை.